பக்கங்கள் : 14+கல்விச்சுடர்

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2037 பங்குனி 16 வியாழக்கிழமை (30.03.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :123

### கொழும்பு ஊடான பயணத்துக்கு

# பாதுகாப்பு உத்தரவாதம் தந்தால்தான் ஜெனீவாப் பேச்சுக்குப் புலிகள் வருவர்

## நேற்று சொல்ஹெய்மிடம் பாலசிங்கம் தெரிவிப்பு



லண்டன்,மார்ச் 30

விடுதலைப் புலிகளின் பேச்சுக் குழுப் பிரதிநிதிகள் கொழும்பு ஊடாக ஜெனீவா செல்வதற்கான பயணப் பாதுகாப்பு உத்தரவாதத்தை இலங்கை அரசின் ஜனாதிபதியும் நோர்வே அனுசரணைத் தரப்பும் வழங்கினால் மட்டுமே அடுத்த சுற்று ஜெனீவாப் பேச்சுகளில் விடுதலைப் புலிகள் பங்குபற்றுவர்.

– இவ்வாறு நேற்று தம்மைச் சந்தித்த நோர்வே அனுசரணைப் பணிக்குப் பொறுப்பான அந்த நாட்டு அமைச்சர் சொல்ஹெய்மிடம் திட்டவட்டமாகத் தெரிவித்துவிட்டார் விடுதலைப் புலிகளின் மதியுரைஞரும் பேச்சுக் குழுத்தலைவருமான அன்ரன் பாலசிங்கம்.



நோர்வே சர்வதேச அபிவிருத்தி அமைச்சரும், அனுசரணைக்குப் பொறுப்பான பிரமுகருமான எரிக்சொல்ஹெய்ம், நோர்வேயின் வெளிவிவகார அமைச்சைச் சேர்ந்த அதிகாரிகளான எஸ்பன் குலிக்ஸ்ரென், சொன்றே ஆகியோர் நேற்று லண்டன் நேரப்படி காலை 10 மணி முதல் நண்பகல் 12 மணிவரை லண்டன், நியூமோர்டனில் உள்ள பாலசிங்கத்தின் இல்லத்தில் அன்ரன் பாலசிங்கத்தையும் அவரது துணைவியார் அடேல் பாலசிங்கத்தையும் சந்தித்து விரிவாகக் கலந்துரையாடினர். எதிர்வரும் 19ஆம் திகதி முதல் 21ஆம் திகதிவரை ஜெனீவாவில் நடைபெறவிருக்கும் இரண்டாவது சுற்றுப்பேச்சுகளில் புலிகள் பங்குபற்றுவார்களா என்பது பற்றிய விடயமே நேற்றைய பேச்சுகளில் முக்கியமாக ஆராயப்பட்டது.

இந்தப் பேச்சுகளில் பங்குபற்றச் செல்லும் புலிகளின் பிரதிநிதிகள் குழுவுக்கு இடைவழியில் ஒட்டுப்படையினராலும், அவர்களை இயக்குகின்ற தரப்பினராலும் உயிராபத்து ஏற்படலாம் (14ஆம் பக்கம் பார்க்க)

### நாளைய கல்விச்சுடரில்

தரம் 5 புலமைப்பரிசில்: வெளியீடு 7 வினாத்தாள், வெளியீடு 6 விடைக்குறிப்புகள், வெளியீடு 4 திருத்திய விடைக்குறிப்புகள் என்பன வெளிவரும்.

## இன்று 'மினி' தேர்தல்!

கொழும்பு, மார்ச் 30

12 மாநகரசபைகள், 34 நகரசபைகள், 220 பிரதேச சபைகளென மொத்தம் 266 உள்ளூராட்சி மன்றங்களுக்கு, 3,624 உறுப்பினர்களைத் தெரிவுசெய்வதற்கான தேர்தல் இன்று நடைபெறுகின்றது.

25 ஆயிரத்து 523 வேட்பாளர்கள் போட்டியிடும் இன்றைய தேர்தலில் ஒரு கோடியே 33 லட்சத்து 27 ஆயிரத்து 160 பேர் வாக்களிக்கத் தகுதிபெற்றுள்ளனர். கட்சி சார்பில் 20,251 வேட்பாளர்களும், சுயேச்சையாக 5,272 வேட்பாளர்களும் இன்றைய தேர்தலில் போட்டியிடுகின்றனர்.

இன்றைய தேர்தலையொட்டி பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. திருகோணமலை மற்றும் அம்பாறை மாவட்டங்களில் சில இடங்களில் வாக்குப்பெட்டிகளை எடுத்துச் சென்று வருவதற்கு விசேட ஹெலிகொப்டர் வசதிகள் செய்யப்பட்டுள்ளன. இன்றைய தினம் நேரகாலத்துடன் வாக்

(14ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பின் முக்கிய வீதிகள் இரவு வேளைகளில் மூடப்படும்

கொழும்பு, மார்ச் 30

கொழும்பிலுள்ள முக்கியமான வீதிகள் சிலவற்றை இரவு வேளைகளில் மூடிவிடுவதென்று தேசிய பாதுகாப்புச் சபைக் கூட்டத்தின்போது தீர்மானிக்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

இதற்கமைய முதற்கட்டமாக பௌத்தாலோக மாவத்தையில் தும்முல்ல சந்தியிலிருந்து ஸ்ரான்லி ஜயசுந்தர மாவத்தை வரையான வீதி இரவு 10 மணி முதல் காலை ஆறு மணிவரை மூடப்படவுள்ளது. உடனடியாக அமுலாகும் வகையில் இது நடைமுறைக்கு வரவுள்ளது.

(14ஆம் பக்கம் பார்க்க)

## விசேட சமாதானத் தூதுவர் ஹன்ஸன் போவர் திங்கள் வருகை; புதனன்று வன்னிக்குப் போவார்

### அடுத்தநாள் சொல்ஹெய்முடன் ஜனாதிபதியைச் சந்திப்பார்

கொழும்பு,மார்ச் 30

இலங்கை இனப்பிரச்சினைக்கு அனுசரணைப் பணி வகிக்கும் நோர்வேயினால் விசேட சமாதானத்தூதராக நியமிக்கப்பட்டிருக்கும் ஜோன்ஹன்ஸன் போவர் அடுத்த திங்கட்கிழமை முதல்தடவையாகக் கொழும்பு வருகின்றார்.

புதன்கிழமை வன்னியில் விடுதலைப் புலிகளின் மூத்த தலைவர்களை அவர் சந்திப்பார்.

அதேவேளை, அடுத்த வியாழனன்று 6 ஆம் திகதி - ஒருநாள் விஜயமாகக் கொழும்பு வரும் நோர்வே அமைச்சர் எரிக் சொல்ஹெய்முடன் அன்றைய தினமே அவர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை கொழும்பில் சந்திப்பார். அடுத்த சுற்றுப்பேச்சில் பங்குபற்றுவதற்குச் செல்லவிருக்கும் விடுதலைப் புலிகளின் பேச்சுக் குழுவிற்கு கொழும்பு ஊடான பயணப்பாதுகாப்பு உத்தரவாதம் வழங்குவது குறித்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடனான இச்சந்திப்பின் போது எரிக் சொல்ஹெய்மும் போவரும் விரிவாகப் பேசுவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

வியாழனன்று ஜனாதிபதி மஹிந்தவுடனான சந்திப்பை முடித்துக்கொண்டு அடுத்தநாள்

(14ஆம் பக்கம் பார்க்க)

## அரச பேச்சுக் குழுப் பிரதிநிதிகள் 4,5ஆம் திகதிகளில் கூடி ஆராய்வு

### புதிய தந்திரோபாயங்கள் குறித்து

கொழும்பு, மார்ச் 30

அடுத்த கட்ட அமைதிப் பேச்சுகளின் போது ஆராயப்பட வேண்டிய முக்கிய விடயங்கள் குறித்துக் கலந்துரையாடுவதற்காக அரச பேச்சுக் குழு உறுப்பினர்கள் எதிர்வரும் 4 மற்றும் 5 ஆம் திகதிகளில் கொழும்பில் கூடவுள்ளனர்.

ஜனாதிபதி செயலகத்தில் நடைபெறும் இந்தக் கலந்துரையாடலின் பின்னர் பேச்சுக்கான விடயங்கள் மற்றும் அரசுத் தரப்பு அதில் கையாள வேண்டிய தந்திரோபாயங்கள் என்பன இறுதி செய்யப்படுமென்று அரசாங்கத்தின் உயர்மட்ட வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன.

ஏற்கனவே, நேற்றுமுன்தினம் அலரிமாளி

(14ஆம் பக்கம் பார்க்க)

## ஒட்டுப்படைகள் நடத்திய கூட்டம் குறித்து கண்காணிப்புக்குழுவிடம் புலிகள் முறையீடு

மட்டக்களப்பு,மார்ச் 30

வாழைச்சேனையில் இலங்கை இராணுவத்தினர் மற்றும் துணைப்படையினர் இணைந்து நடத்திய சுற்றிவளைப்புத் தேடுதல் மற்றும் பொதுக்கூட்டம் என்ற பெயரில் பொதுமக்கள் மிரட்டப்பட்டமை ஆகியன குறித்து விடுதலைப்புலிகள் கடும் கண்டனத்தை வெளியிட்டுள்ளனர்.

அதேசமயம், விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு மாவட்ட அரசியல்துறை இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிற்கு இது தொடர்பில் கடிதமொன்றை அனுப்பியுள்ளது. அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

நேற்றுமுன்தினம் அதிகாலை வாழைச்சேனை விநாயகபுரம், கண்ணகிபுரம் ஆகிய இரு கிராமங்களையும் ஸ்ரீலங்கா இராணுவமும், படைப்புலனாய்வுப் பிரிவினரும் ஊர் எல்லை

(14ஆம் பக்கம் பார்க்க)

### புரிந்துணர்வு ஒப்பந்தத்துக்கு எதிரான வழக்கு

## பிரபா, ரணில், அமைச்சர்களுக்கு அழைப்பு அனுப்ப மன்று உத்தரவு

கொழும்பு, மார்ச் 30

போர் நிறுத்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்துக்கு எதிரான வழக்கு விசாரணைக்கு ஆஜராகுமாறு விடுலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரன், முன்னாள் பிரதமரும் தற்போதைய எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க மற்றும் தற்போதைய பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க உட்பட அமைச்சரவை உறுப்பினர்களுக்கு நோட்டீஸ் அனுப்பும்படி மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

போர்நிறுத்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்துக்கு எதிராக ஜே.வி.பி. மற்றும் ஜாதிக ஹெல

(14ஆம் பக்கம் பார்க்க)

## ஒட்டுப்படைகள் நடத்திய பொதுக்கூட்டம் பங்குபற்றவில்லை என்கிறது ஈ.பி.டி.பி.

கொழும்பு,மார்ச்30

கிழக்கில் அரச படைகளின் கட்டுப் பாட்டில் உள்ள வாழைச்சேனைப் பகுதியில் ஐந்து கிராமங்களைச் சேர்ந்த மக்களை பலவந்தமாக ஓரிடத்தில் திரட்டி இராணுவத்தினரும், ஒட்டுப் படைக் குழுக்களைச் சேர்ந்தோரும் இணைந்து நடத்திய பொதுக்கூட்டத்தில் ஈ.பி.டி.பியினரும் பங்கு கொண்டனர். என்று வெளியான செய்தியை அந்த அமைப்பு மறுத்திருக்கிறது.

ஒட்டுப்படைகள் கூட்டிய கூட்டம் தொடர்பான செய்தி நேற்றைய 'உதயனின்' தலைப்புச் செய்தியாக இடம்பெற்றிருந்தது. அந்தச் செய்தி தொடர்பாக ஈ.பி.டி.பி அமைப்பு ஊடகங்களுக்கு நேற்று அறிக்கை ஒன்றை விடுத்தது.

(14ஆம் பக்கம் பார்க்க)

# வடக்கு-கிழக்கில் உள்ளூராட்சித் தேர்தல் நடைபெறாத மாவட்டங்களில் இன்று பாடசாலைகள் இயங்கும்

அச்சுவேலி,மார்ச் 30

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உள்ளூராட்சித் தேர்தல் நடைபெறாத மாவட்டங்களில் உள்ள பாடசாலைகள் இன்றும், நாளையும் வழமை போன்று இயங்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

உள்ளூராட்சித் தேர்தலை முன்னிட்டு நாட்டிலுள்ள சகல பாடசாலைகளுக்கும் இன்றும், நாளையும் விடுமுறை வழங்கப்பட்டிருந்தது. ஆனால், தற்போது திருகோணமலை, அம்பாறை மாவட்டங்களில் மட்டுமே தேர்தல் நடைபெறும் என்றும் -

மாகாணத்திலுள்ள ஏனைய மாவட்டங்களில் தேர்தல் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக, வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வித்திணைக்களத்தைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் கருத்துத்தெரிவிக்கையில்:-

மாணவர்களின் நன்மையைக் கருத்திற் கொண்டு இழந்த பாடசாலை நாள்களை ஈடு செய்யவும் -

எதிர்காலத்தில் எதிர்பாராமல் இழக்கப் போகின்ற பாடசாலை நாள்களைக் கருத்திற் கொண்டும் -

அமைதியாகவுள்ள இந்த நாள்களில் தேர்தல் நடைபெறாத மாவட்டங்களில் உள்ள பாடசாலைகள் வழமைபோல செயற்படலாம் என்றும் -

தேர்தல் கடமைக்குச் செல்லும் அதிபர், ஆசிரியர்களுக்குக் கடமை லீவு உரிமை உண்டு - என்றும் கூறினார். (எ-11-14)

## வடக்கு - கிழக்குக்குப் போகாதீர்! பிரி. பிரஜைகளுக்கு வற்புறுத்து

லண்டன்,மார்ச் 30

அரசியல் வன்செயல்கள் இலங்கையின் வடக்கு - கிழக்கு பகுதிகளில் தொடர்ந்தும் அதிகரித்து அங்கு அமைதியின்மை நிலவுவதால், அவசியமற்ற பயணங்களை அப்பகுதிக்கு மேற்கொள்வதை பிரிட்டிஷ் பிரஜைகள் தவிர்த்துக் கொள்ள வேண்டுமென்று பிரிட்டிஷ் வெளிவிவகார காமன்வெல்த் அலுவலகம் எச்சரித்துள்ளது.

உள்ளூராட்சித் தேர்தல்கள் நடைபெறும் காலமாகையால் அரசியல் கூட்டங்கள், ஊர்வலங்கள் நடைபெறும் இடங்களைத் தவிர்க்க வேண்டும். உள்ளூர் பயங்கரவாதிகளின் அச்சுறுத்தல் இந்த நாட்டில் இருந்து வருகிறது என்றும் தெரிவித்திருக்கும் அலுவலகம், இலங்கையில் வேலை பார்க்கும் மற்றும் பயணம் வரும் பிரிட்டிஷ் பிரஜைகள் கொழும்பிலுள்ள பிரிட்டிஷ் தூதரகத்தில் தங்களைப் பதிவு செய்துகொள்ள வேண்டும் என்றும் கோரியுள்ளது. (எ-க)

# பொலிஸாருக்கு எதிராக மனித உரிமை ஆணைக்குழுவில் நேற்று முறைப்பாடு

கொழும்புத்துறைப் பகுதியில் சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்டவர்களை தடுக்கச் சென்ற பொதுமக்கள் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பான முறைப்பாட்டினை பொலிஸார் ஏற்கவில்லையெனத் தெரிவித்து அப்பகுதி மக்கள் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் கொழும்புத்துறைப் பகுதியில் சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்டிருந்தவர்களை பொதுமக்கள் தடுக்கச் சென்றவேளை சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்டவர்களின் வாள்வெட்டுக்கு பொதுமக்கள் இருவர் காயமடைந்தனர் என்றும் -

இதனையடுத்து அப்பகுதியில் ஒன்றுதிரண்டு படையினரிடம் சென்றபோது படையினர் பொதுமக்களை துப்பாக்கிப் பிடிகளால் தாக்கினர் என்றும் -

இவை தொடர்பாக பொலிஸாரிடம் முறையிடச் சென்ற போது பொலிஸார் முறைப்பாட்டினை ஏற்கமறுத்துவிட்டனர் என்றும் இதனையடுத்து 25 பேர் அடங்கிய குழு ஒன்று மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்திற்கு நேற்றுச் சென்று முறைப்பாடு செய்தது என்றும் - தெரிவிக்கப்பட்டது. (எ-7-13)

# யாழ். பல்கலைக்கழக ஊழியர்கள் இன்று தொழிற்சங்க நடவடிக்கையில் குதிப்பர்

யாழ்ப்பாணம்,மார்ச் 30

யாழ். பல்கலைக்கழக ஊழியர்கள் இன்று வியாழக்கிழமை முற்பகல் 11 மணிமுதல் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடவுள்ளனர்.

இந்தத் தொழிற்சங்க நடவடிக்கை தொடர்பாக பல்கலைக்கழக ஊழியர் சங்கம் விடுத்துள்ள செய்திக்குறிப்பில்:-

யாழ். பல்கலைக்கழகத்தின் சுயாதிபத்தியத்தை இழிவுபடுத்தும் வகையில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு எடுத்து வரும் சில நடவடிக்கைகளைச் சுட்டிக்காட்டி 16.03.2006 அன்று நாம் தொழிற்சங்க நடவடிக்கைக்கான முன்னறிவித்தலை வழங்கியிருந்தோம்.

தற்போது பேராசிரியர் ரட்ணஜீவன் ஹூல் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் துணையுடன் பல்கலைக்கழக அலுவலர்களைப் பழிவாங்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளார். குறிப்பாக எச்சரிக்கைக் கடிதங்கள் இடமாற்றக் கடிதங்களும் வழங்கப்பட்டுள்ளன.

இதனைக் கண்டித்து பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தின் சகல உறுப்பினர்களும் இன்று முற்பகல் 11 மணிக்கு யாழ். பல்கலைக்கழக இராமநாதன் மண்டப முன்றிலில் ஒன்றுகூடி கண்டனப் பொதுக்கூட்டமொன்றை நடத்துவர்.

இதற்காக பல்கலைக்கழக ஊழியர் சங்க அங்கத்தவர்கள் தமது அலுவலகங்களில் இருந்து வெளிநடப்புச் செய்வார்கள். பாதுகாப்புக் கடமையில் ஈடுபடும் ஊழியர்களுக்கும் பரீட்சைக்கடமையில் ஈடுபடும் ஊழியர்களுக்கும் நீர் விநியோகக் கடமையில் ஈடுபடும் ஊழியர்களுக்கும் இதிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது - என்று அதில் உள்ளது. (எ)

# நகரில் திடீரெனப் பெய்த மழையால் பொதுமக்கள் பெரும் அசௌகரியம்

யாழ்ப்பாணம்,மார்ச் 30

யாழ். நகரிலும் அதனை அண்டிய பகுதிகளிலும் நேற்று மாலை திடீரெனப் பெய்த மழைகாரணமாக பொதுமக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கியதைக் காணமுடிந்தது.

நேற்று மாலை 4 மணியளவில் ஆரம்பித்த இந்தப் பெரும் மழை சுமார் ஒரு மணி நேரம் நீடித்தது.

இதனால், யாழ். நகருக்கு பொருள்களைக் கொள்வனவு செய்ய வந்திருந்த பொதுமக்கள் மற்றும் கடமை முடிந்து வீடுகளுக்குத் திரும்பும் அரச ஊழியர்கள் எனப் பலரும் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கினர்.

நகரப் பகுதியில் சில வீதிகளில் வெள்ளம் தேங்கி நின்றதைக் காணமுடிந்தது. (எ-13)

# தென்மராட்சி வலயப் பாடசாலைகளுக்கு இன்றும், நாளையும் பாடநூல் விநியோகம்

தென்மராட்சி,மார்ச் 30

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலை மாணவர்களுக்குரிய இலவச பாடநூல் தொகுதிகள் வந்துசேர்ந்துள்ளன.

தரம் 8 மாணவர்களுக்குரிய பாடநூல்கள் உட்பட தரம் 6 தொடக்கம் தரம் 11 வரையான வகுப்புக்குரிய பாடநூல்களே இவ்வாறு வந்துள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது.

பாடநூல்கள் இன்றும் நாளையும் சாவகச்சேரிக் கோட்டக் கல்வி அலுவலகத்தில் வழங்கப்படும் என்றும் -

பாடசாலை அதிபர்கள் தமக்குத் தேவையான நூல்களின் விவரங்களுடன் வருகைதந்து அவற்றைப் பெற்றுக்கொள்ளமுடியும் என்றும் -

கோட்டக் கல்வி அலுவலர் நா.சத்தியநாதன் அறிவித்துள்ளார். (எ-117)

# கொள்ளையடித்த குற்றத்திற்காக பெண்ணுக்கு 3 வருடக் கடூழியச்சிறை

யாழ்ப்பாணம், மார்ச் 30

வயோதிபப் பெண்ணை கத்தியால் வெட்டிக்காயப்படுத்திவிட்டு அவர் அணிந்திருந்த நகைகளைக் கொள்ளையடித்த பெண்மணிக்கு யாழ்.நீதிமன்றம் ஐந்து வருடங்கள் ஒத்திவைக்கப்பட்ட மூன்று வருட கடூழியச் சிறைத் தண்டனையை வழங்கியுள்ளது.

கடந்த மாதம் 6ஆம் திகதி கஸ்தூரியார் வீதி, கில்னர் ஒழுங்கையிலுள்ள வீடொன்றில் தனித்திருந்த வயோதிபப் பெண் ஒருவரை மற்றுமொரு பெண் பட்டப்பகலில் கத்தியால் குத்தி காயப்படுத்தியுடன் அவர் அணிந்திருந்த நகைகளையும் கொள்ளையிட்டுத் தப்பிச் சென்றார்.

பின்னர் அவரைக் கைது செய்த பொலிஸார் யாழ்.நீதிமன்றத்தில் அவர் மீது வழக்குத் தொடர்ந்தனர்.

விசாரணைகளின் போது பிரஸ்தாப பெண் மீதான குற்றங்கள் நிரூபிக்கப்பட்டதையடுத்து நீதிபதி ஆர்.ரி.விக்னராஜா எதிரிக்கு கடந்த திங்கட்கிழமை ஐந்துவருடங்கள் ஒத்திவைக்கப்பட்ட மூன்று வருடக் கடூழியச் சிறைத் தண்டனை விதித்தார்.

அத்துடன், அரச செலவான 10 ஆயிரம் ரூபாவையும் அபராதமாகச் செலுத்துமாறு உத்தரவிட்டுள்ளார்.

கொள்ளையடித்த குற்றத்திற்காகவே இத்தண்டனை வழங்கப்பட்டுள்ளது என்றும் -

பெண்ணை வெட்டிக்காயப்படுத்திய குற்றத்திற்கான தண்டனை அடுத்தமாதம் வழங்கப்படும் என்றும்- நீதிமன்றம் தெரிவித்துள்ளது. (ஒ-7-203)

# முல்லை. அலம்பில் கடற்பரப்பில் கடற்புலிகள் போர்ப் பயிற்சியாம்!

## யுத்த நிறுத்த மீறல் என்று அரசு முறையீடு

கொழும்பு, மார்ச் 30

முல்லைத்தீவு அலம்பில் கடற்பரப்பில் விடுதலைப் புலிகள் போர்ப்பயிற்சிகளில் ஈடுபட்டு வருகின்றனர் எனக் குறிப்பிட்டு இலங்கைக் கடற்படையினர் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் முறைப்பாடொன்றைச் செய்திருக்கின்றனர்.

கடந்த சனிக்கிழமை குதிரைமலை கடற்பரப்பில் கடற்படையினரின் டோராவொன்று தாக்குதலுக்குள்ளான சம்பவத்தையடுத்து வடக்குக் கடற்பரப்பில் மீன்பிடி நடவடிக்கைகளுக்குப் படையினர் தடை விதித்திருப்பதுடன் ரோந்துச் சேவைகளையும் அதிகரித்திருக்கின்றனர். இந்நிலையில் முல்லைத்தீவுக் கடற்பரப்பில் கடற்புலிகள் பயிற்சிகளில் ஈடுபட்டு வருகின்றனர் என்றும் இது போர் நிறுத்தப் புரிந்துணர்வு உடன்படிக்கையை மீறும் செயலென்றும் இலங்கை கடற்படையினர், இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் முறையிட்டுள்ளனர். (எ-க)

## கச்சதீவு அருகே நேற்று அதிகாலை

# தமிழக மீனவர்கள் மீது மோசமான தாக்குதல்

கச்சதீவுக்கு அருகில் மீன்பிடித்துக் கொண்டிருந்த தமிழக மீனவர்கள் மீது நேற்று அதிகாலை இலங்கைக் கடற்படையினர் கடுமையான தாக்குதல் நடத்தியிருப்பதுடன் மீனவர்களிடமிருந்து பெருந்தொகையான இறால், மீன்களையும் பறித்துச் சென்றுள்ளனர் என்று முறைப்பாடு கூறப்படுகின்றது.

தமிழக மீன்பிடித்துறையின் அனுமதி பெற்று 400இற்கும் மேற்பட்ட விசைப்படகுகள் மூலம் கடலுக்குச் சென்ற தமிழக மீனவர்கள் நேற்று அதிகாலை மீன்பிடித்துக் கொண்டிருந்தனர். அப்போது கச்சதீவு கடலுக்கு அருகே ரோந்துச் சேவையில் ஈடுபட்டிருந்த இலங்கைக் கடற்படையினர் அந்த மீனவர்களின் படகுகளுக்குள் இறங்கி இறால், மீன்களைப் பறித்ததுடன், மீனவர்களின் வலை, மீன்பிடிக் கருவிகள் என்பவற்றை கடலில் வீசி அட்டகாசம் செய்துள்ளனர்.

இதனையடுத்து, மீனவர்கள் மீன் இல்லாமல் வெறும் படகுகளுடன் துறைமுகக் கரைக்கு வந்துசேர்ந்தனர். இலங்கைக் கடற்படையினரின் இந்த அத்துமீறல் குறித்து தமிழக அரசு உடனடி நடவடிக்கை எடுக்கக் கோரி தமிழக மீனவர்கள் பெரும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டமொன்றை நடத்தத் தயாராகி வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (எ-க)

# திலங்கவுக்கு வழங்கிய பிணை சட்டத்துக்கு முரணானதாம்

## உயர்நீதிமன்றம் நேற்றுத் தெரிவிப்பு

தவறான தகவல்க[ளை] வழங்கி வேறு பெயரில் கடவுச்சீட்டு ஒன்றை ஒரு நபர் பெறுவதற்கு உதவினார் என்ற குற்றச்சாட்டு தொடர்பாகத் தொடரப்பட்ட வழக்கில் இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் முன்னாள் தலைவர் திலங்க சுமதிபாலவிற்கு பிணை வழங்கப்பட்டமை சட்டவிரோதமானதென்று உயர்நீதிமன்றம் நேற்று தீர்ப்பளித்திருக்கின்றது.

போலி கடவுச்சீட்டுத் தொடர்பான வழக்கு ஒன்றில் திலங்க சுமதிபாலவுக்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் பிணை அனுமதி வழங்கியிருந்தது.

இதனை ஆட்சேபித்து சட்டமா அதிபர் விசேடமேன்முறையீட்டு மனுவொன்றை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்தார்.

இந்த மனு ஐந்து நீதியரசர்களைக் கொண்ட உயர்நீதிமன்றக் குழு முன்னிலையில் ஆராயப்பட்டது. குடிவரவு, குடியகல்வு சட்டங்களை மீறியதற்காக கைதுசெய்யப்பட்டவர்கள் அது தொடர்பான வழக்கு முடியும்வரை பிணையில் விடுதலை செய்யப்பட முடியாதென்றும் சட்டமா அதிபர் தரப்பில் தெரிவிக்கப்பட்ட வாதத்தை உயர்நீதிமன்றம் ஏற்றுக்கொண்டது.

அதேநேரம், இந்த வழக்கில் திலங்க சுமதிபாலவின் பிணை அனுமதியை விலக்கும்படி தாம் கோரப்போவதில்லை என சட்டமா அதிபர் தெரிவித்த கருத்தையும் உயர்நீதிமன்றம் தனது தீர்ப்பில் பதிவுசெய்து கொண்டது. (எ-க)

## யாழ். இந்துவில் திங்களன்று மாணவர் விடுதி திறப்பு

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி ஞான வைரவர் ஆலய சங்காபிஷேகமும், மாணவர் விடுதித் திறப்பு விழாவும் எதிர்வரும் 3ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8 மணி முதல் நடைபெறவுள்ளது.

அன்றையதினம் காலை 8 மணிக்கு ஞான வைரவர் ஆலய குடமுழுக்கு தினத்தை முன்னிட்டு நடைபெறும் சங்காபிஷேகத்தைத் தொடர்ந்து, நண்பகல் 12 மணியளவில் மாணவர் விடுதி திறந்துவைக்கப்படும்.

புனரமைக்கப்பட்ட கே.எஸ்.எஸ். ஞாபகார்த்த மண்டபத்தில் இயங்கவுள்ள இந்த மாணவர் விடுதியை கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தலைவர் க.பரமேஸ்வரன் திறந்துவைப்பார். பின்னர் முன்னைநாள் விடுதி ஆசிரியர் கே.எஸ்.எஸ்.சுப்பிரமணியத்தின் திருவுருவப்படமும் விடுதியில் வைக்கப்படும்.(எ)

# குருநகர் ஜோசப்வாஸ் இளைஞர் மன்றத்தின் 'பச்சை மரப்பாடுகள்' திருப்பாடுகளின் காட்சி

## புனித யாகப்பர் ஆலயத்தில் இன்று மேடையேற்றம்

குருநகர் யோசப்வாஸ் இளைஞர் மன்றத்தால் முற்றிலும் இளைஞர், யுவதிகளை மட்டும் கொண்டு தயாரிக்கப்பட்ட 'பச்சை மரப்பாடுகள்' என்னும் திருப்பாடுகளின் காட்சி, இன்று மேடையேற்றப்படுகின்றது.

இன்று வியாழக்கிழமை மாலை 7 மணிக்கு புனித யாகப்பர் ஆலய வளாகத்தில் இந்த நாடகம் அரங்கேறுகின்றது.

இக்னேசியஸின் (பிரபா) நெறியாழ்கையில் உருவான இந்த நாடகம் 150 அடி அகலமான மேடையில் நூற்றுக்கு மேற்பட்ட கலைஞர்களின் நடிப்பில் மேடையேற்றப்படுகின்றது.

குருநகரில் நீண்டகால இடைவெளியின் பின்னர் மீண்டும் திருப்பாடுகளின் காட்சி மேடையேற்றப்படுவதன்மை குறிப்பிடத்தக்கது. (த-202)

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

# முடிவுக் கட்டத்தில் முஸ்லிம்கள்

இலங்கை இனப்பிரச்சினை, தீர்க்கமான - மிகமோசமான - எதிர்பாராத விபரீத விளைவுகளைத் தரக்கூடிய - ஒரு புதிய கட்டத்துக்குள் நுழையப்போகின்றது.

களத்தில் இடம்பெறும் நிகழ்வுகள், இராஜதந்திர நகர்வுகள், தந்திரோபாய நடவடிக்கைகள் என அரங்கேறுகின்ற அம்சங்கள் அனைத்தும் அதற்குத்தான் கட்டியம் கூறுகின்றன போலும்.

இலங்கை இனப்பிரச்சினையில் தமிழர், முஸ்லிம்கள், சிங்களவர் என மூவினத்தவரும் நேரடியாகச் சம்பந்தப்பட்டிருந்தாலும் போரியல் நடவடிக்கைகள் என்னவோ தமிழர் - சிங்களவர் ஆகிய இரு தரப்பினரிடையேதான் இதுவரை மூர்க்கமாக நீடித்து வந்தன.

இந்த இனமோதல்களிலும், யுத்தங்களிலும் முஸ்லிம்களும் வலிந்து இழுக்கப்பட்டதாலோ அல்லது தாமகவே தம்மை நுழைத்துக் கொண்டதாலோ இவ்வளவு காலமும் ஏனைய இனத்தவர்களைப்போல வன்முறைகளுக்குள்ளும், கொடூர நடவடிக்கைகளுக்குள்ளும் சிக்கி பாதிக்கப்பட்டார்களாயினும், அவர்கள் நேரடியாக ஒரு போரியல் சக்தியாக இந்த மோதல்களில் ஈடுபடவில்லை; அல்லது ஈடுபடுத்தப்படவில்லை.

ஆனால், இப்போது நிலைமை மாறுகின்றது.

'ஜிகாத்' என்ற பெயரில் முஸ்லிம் துணைப்படை ஒன்றை இலங்கை அரசுப்படைகளின் புலனாய்வுப்பிரிவு தோற்றுவித்து, ஊட்டி, புகலிடமளித்து, வளர்த்து வருகின்றது என்றும் -

அதற்கும் பாகிஸ்தான் உளவுப் பிரிவினருக்கும் தொடர்பு இருக்கின்றது என்றும் -

விடுதலைப் புலிகள் குற்றம் சாட்டியுள்ளனர்.

இந்தச் சூழ்நிலையில் இஸ்லாமிய நாடான பாகிஸ்தானுடன் இராணுவ உதவிகளை நாடி நெருக்கமான உறவுகளை இலங்கை அரசுத் தலைமை வளர்த்து வருகின்றது என்றும் புலிகள் சாடியிருந்தனர்.

இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, தமது சகோதரரும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருமான கோட்டபாய ராஜபக்ஷ சகிதம் நாளை பாகிஸ்தானுக்கு மூன்று நாள் அரசு முறைப் பயணமாகச் செல்கிறார். அங்கு இலங்கைக்கு அதிக இராணுவ உதவிகள், ஒத்தாசைகள், பயிற்சிகள் போன்றவற்றை பாகிஸ்தானிடமிருந்து பெறுவதற்கான இராணுவ ஒத்துழைப்பு ஒப்பந்தங்களில் இலங்கை ஜனாதிபதி கையெழுத்திடுவார் எனக் கூறப்படுகின்றது.

இத்தகைய பின்னணியில், இலங்கை இராணுவத்தில் தனி முஸ்லிம் பட்டாலியன் ஒன்றை - கிழக்கு மாகாணத்தை மையமாக வைத்து - அமைக்கும் நாச சதித்திட்டம் ஒன்று இலங்கைப் படைத்தரப்பால் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றது.

இதற்கு ஆட்சேர்க்கும் நேர்முகப்பரீட்சை ஏற்கனவே ஆரம்பமாகி விட்டது. எண்ணூறுபேரை இந்தப் படையணிக்குத் திரட்ட திட்டமிடப்பட்டுள்ளது. சாதாரண சிப்பாயீ முதல் உயர் அதிகாரிகள் பதவிவரை பல்வேறு தரநிலைகளில் முஸ்லிம்களை இந்த பட்டாலியனுக்குச் சேர்த்துக்கொள்ள முடிவு செய்திருகின்றது.

முஸ்லிம்கள் மத்தியில் 'ஜிகாத்' என்ற பெயரில் ஆயுதக் குழுக்கள் இயங்கிவருவதாகக் கூறப்படும் குற்றச்சாட்டுகளை விழுந்தடித்து மறுத்துவரும் முஸ்லிம் அரசியல் தலைவர்கள், முஸ்லிம்களுக்கான இத்தகைய இராணுவப் படையணி உருவாக்கப்படுவதை கண்டும் காணாமல் இருப்பவர்கள் போல நடந்து கொள்வதன்மூலம் அதை வரவேற்பவர்களாக அமைகின்றனர்.

அமைதி முயற்சிகளில் தமக்கு தனித்தரப்பு - மூன்றாம் தரப்பு - வழங்கப்படவேண்டும் என முஸ்லிம் தலைவர்கள் வற்புறுத்தி வருகின்ற இச்சமயத்தில் -

முஸ்லிம்களுக்கான தனி ஆயுதப் படைப் பிரிவு ஒன்றை இலங்கை அரசு தனது இராணுவக் கட்டமைப்புக்குள் தனியாக உருவாக்குவதும், அதற்கு முஸ்லிம் தலைவர்களும், முஸ்லிம் சமூகமும் இணைந்து - இயைந்து - ஆதரித்து - முண்டுகொடுத்துப் போவதும், அமைதி முயற்சிகள் உட்பட அனைத்திலும் அரசுத் தரப்புக்குள்தான் முஸ்லிம் தரப்பும் அடங்கும் என்ற நிலைப்பாட்டைத் தான் - நியாயத்தைத் தான் - உறுதிப்படுத்தப் போகின்றன.

சிக்கலில் சிக்கி, மோசமான கட்டத்தை அடைந்திருக்கும் இலங்கை இனப்பிரச்சினையை இன்னும் மோசமாக்கும் தந்திரோபாய - சதி - நடவடிக்கைகளை அரசுத்தரப்பு ஆரம்பித்திருக்கின்றது. இதன் விளைவுகள் களத்தில் விபரீதமாக அமையப்போகின்றன. இனமுறுகலையும், இனங்களுக்கிடையில் விரோதத்தையும், பகையுறவையும் மேலும் மோசமடைய வைத்து சிறுபான்மையினரான தமிழர் - முஸ்லிம்கள் மத்தியில் குரோதத்தை வளர்த்து, மோசமாக்கி, பிரச்சினையைப் பூதாகரமாக மாறவைத்து, அதில் குளிர்காய பேரினவாதம் இப்படி சதிவலை பின்னுகின்றது.

ஆயுத மோதலுக்குள் முஸ்லிம்களை அதிகளவில் இழுத்து விழுத்த வைக்கும் பேரினவாதத்தின் இந்தத் திட்டம் குறித்து முஸ்லிம்கள் முன்னெச்சரிக்கையாக இருப்பது நல்லது.

இனக் குரோதங்களை வளர்க்கும் திட்டத்தோடு பேரினவாதிகள் விரிக்கும் வலையில் வீழ்ந்த பின்னர் - மீள முடியாத சிக்கலில் மாட்டிய பின்னர் - சிந்திப்பதில் அர்த்தமில்லை.

மொழியாலும், தாயகத்தாலும் ஒன்றுபட்ட இனத்தோடு சேர்ந்து நின்று சிறுபான்மையினரின் உரிமைகளை உறுதியோடு போராடிப் பெற்றுக்கொள்வதா? இல்லை, ஒரு சிறுபான்மை இனத்தை அடக்க மற்றைய சிறுபான்மை இனத்தைப் பகடைக்காய்களாக்கும் பேரினவாதிகளின் மறைமுகச் சதிக்கு உடந்தையாவதா? - முஸ்லிம் சமூகம் தீர்மானித்து இறுதி முடிவு எடுக்க வேண்டிய காலகட்டம் வந்து விட்டது.



தியாக தீபம் அன்னை பூபதியின் நினைவு நாளையொட்டி யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் யாழ்.போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கிக்கு இரத்ததானம் வழங்கினர்.

நேற்றுக்காலை யாழ்.பல்கலைக்கழக வளாகத்தில் இரத்ததானம் வழங்கும் வைபவம் இடம்பெற்றது. யாழ்.போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கிப் பிரிவு வைத்தியர்கள், தாதியர்கள் இரத்தம் சேகரிப்பில் ஈடுபட்டிருந்த போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

(படங்கள்: ஒளிஅதிரன்)

# மனித உரிமை ஆணைக்குழுவின் ஆவணத்தை சான்றாக சமர்ப்பிக்க நீதிமன்றம் அனுமதி

யாழ்ப்பாணம்,மார்ச்30

குடாநாட்டு நீதிமன்றங்களில் முன்னெடுக்கப்படும் காணாமல் போனவர்கள் தொடர்பான ஆள்கொணர்வு வழக்குகளில் மனித உரிமைகள் ஆணைக் குழுவின் ஆவணத்தைச் சான்றாக சமர்ப்பிக்க யாழ்.நீதிமன்றம் அனுமதித்துள்ளது.

குடாநாட்டில் காணாமல் போனவர்கள் தொடர்பான பல ஆள்கொணர்வு வழக்குகள் மீதான விசாரணைகள் நீதிமன்றங்களில் நடைபெற்றுவருகின்றன.

கடந்த வாரம் யாழ்.நீதிமன்றத்தில் இடம்பெற்ற வழக்கு விசாரணையொன்றில் மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்டுள்ள காணாமல் போனவர்கள் தொடர்பான ஆவணத்தைச் சான்றாகச் சமர்ப்பித்தல் தொடர்பாக ஆராயப்பட்டது.

யாழ்.நீதிமன்ற நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் நடந்த இந்த விசாரணையில் சட்டத்தரணிகளிடையே இந்த ஆவணம் தொடர்பாக வாதப்பிரதிவாதங்கள் இடம்பெற்றன.

காணாமல் போனவர்களின் நலன்களைக் கவனிக்கும் சட்டத்தரணி ஆர்.றெமீடியஸூம் அரச தரப்பில் ஆஜரான அரச சட்டவாதி கே.சூசைதாசனும் தமது வாதங்களை முன்வைத்தனர்.

வாதப்பிரதிவாதங்களை ஆராய்ந்த நிதிவான் குறிப்பிட்ட ஆவணத்தைச் சான்றாகப் பயன்படுத்த அனுமதி வழங்கினார்.

வடக்கில் காணாமல் போனவர்கள் தொடர்பாக ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கவென மனித உரிமைகள் ஆணைக்குழுவால் தே.நேசையா தலைமையில் உருவாக்கப்பட்ட குழுவே இந்த ஆவணத்தை உருவாக்கியுள்ளது.

காணாமல் போனவர்களின், விவரம் காணாமல் போன இடம், சந்தர்ப்பம் போன்ற பல முக்கிய அம்சங்களை உள்ளடக்கியதாக இந்த ஆவணம் உருவாக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ஒ-202)(26)

# நாடாளுமன்றம் வரையிலும் பரவியதா பறவைக் காய்ச்சல்?

## அமைச்சர்கள், எம்.பிக்களும் பாதிப்பு!

கொழும்பு,மார்ச்30

பழுதடைந்த கோழி இறைச்சி நாடாளுமன்றத்தில் சமைக்கப்பட்டதா என்பது குறித்து விசாரணையொன்றை நடத்துமாறு எதிர்க்கட்சி பிரதம கொரடா அலுவலகம், நாடாளுமன்றச் செயலாளர் நாயகத்திடம் கோரிக்கை விடுத்திருக்கிறது. கடந்த 21ஆம் திகதி அவ்சரகாலச் சட்டம் மீதான விவாதம் நடைபெற்ற போது கோழி இறைச்சியால் தயாரிக்கப்பட்ட உணவுவகைகள் நாடாளுமன்ற சிற்றுண்டிச்சாலையில் வைக்கப்பட்டிருந்தன.

இவற்றை உண்ட அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஊழியர்கள் பலர் வயிற்றுக் கோளாறுகளுக்கு உட்பட்டனர் எனக் கூறப்படுகின்றது. இருபதுக்கும் அதிகமானோர் இன்னமும் வைத்தியசாலையில் தங்கியிருந்து சிகிச்சை பெற்று வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில் பறவைக் காய்ச்சல் தொற்றிய கோழிகள் உணவுக்குப் பயன்படுத்தப்பட்டனவா அல்லது பழுதடைந்த கோழி இறைச்சி சமைக்கப்பட்டதா என்பது குறித்து விசாரணைகளை நடத்துமாறு எதிர்க்கட்சியின் பிரதம கொரடா அலுவலகம் நாடாளுமன்றச் செயலாளர் நாயகத்திடம் எழுத்துமூலம் கோரிக்கை விடுத்துள்ளது. (க)

## உதயவாக்கு

உரிமை உருவாகும் மூலம் எது வென்றால் கடமைதான் அது. எமது கடமைகளை அனைவரும் செய்வோமானால் உரிமைகள் தூரத்தில் இருக்க மாட்டா. - *மகாத்மா காந்தி.*

## நாளை

பங்குனி 17
வெள்ளிக்கிழமை
31.03.2006
திதி : துதியை
பிற்பகல் : 12.40
நட்சத்திரம் : அச்சுவினி
மாலை : 5.24
சுபநேரம் : 06.12 - 07.42
ராகுகாலம் : 10.42 - 12.12
(யாவும் பழைய நேரப்படி)

# மனித உரிமை சமாதானக் குழுக்கள் இருஇடங்களில் அங்குரார்ப்பணம்

யாழ்ப்பாணம், மார்ச்30

வலிகாமம் மேற்கு, யாழ்ப்பாணம் ஆகிய பிரதேச செயலகங்களில் பிரதேச மனித உரிமை சமாதானக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தின் ஏற்பாட்டில் இந்தக் குழுக்கள் அமைக்கப்பட்டன.

இத் தெரிவுக்குழுவை அமைப்பது தொடர்பான கூட்டங்கள் அண்மையில் அந்தந்த பிரதேச செயலகங்களில் பிரதேச செயலர்கள், மனித உரிமை ஆணைக் குழு உயர் அதிகாரிகள் முன்னிலையில் இடம்பெற்றன.


இக்கூட்டங்களில் சமூகத்தில் உள்ள சமயப்பெரியார்கள், சமூகசேவையாளர்கள் எனப்பலர் கலந்துகொண்டனர்.

வலி.மேற்கு பிரதேச செயலகப் பிரிவில் சமாதானக் குழுவின் தலைவராக க.விஸ்வநாதனும் செயலாளராக ஏ. துரைசிங்கமும் பொருளாளராக கே.பூபாலசிங்கமும் தெரிவுசெய்யப்பட்டனர்.

யாழ்.பிரதேச செயலகப் பிரிவில் தலைவராக க.மகேந்திரனும், செயலாளராக ஏ.சி.ஏனெஸ்ற்றும், பொருளாளராக அ.சில்வஸ்ராரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இதுபோன்ற சமாதானக்குழு ஏனைய பிரதேச செயலகங்களிலும் வெகுவிரைவில் அமைக்கப்படவுள்ளதாக மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ்.அலுவலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(ஒ-13)(26)



# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்குண்டு

நல்ல நிலையில் உள்ள 10-XXXX தொடர் இலக்கமுடைய Sunny Nissan கார் விற்பனைக்குண்டு. தொடர்பு: T.P.: 077 3263358 (48679)

வீட்டுக்கூரைகள் மரங்கள், சலாகைகள், நல்ல நிலையில் விற்பனைக்குண்டு. தொடர்பு: 41, துரைராசா வீதி, வண்ணார் பண்ணை. (48668)

## வீடும் காணியும் விற்பனைக்கு

மானிப்பாய், கட்டுடையில் வீடும் காணியும் விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு: கந்தையா இலட்சுமணன், யு.என்.எச்.சி.ஆர், தண்ணீர்த்தொட்டிக்கு அருகில், கட்டுடை, மானிப்பாய். (48687)

## கடை விற்பனைக்குண்டு

ஸ்ரான்லி வீதியில் சகல வசதிகளும் கொண்ட மூன்று மாடி கடை ஒன்று விற்பனைக்குண்டு. தொடர்பு: 077 9004041 (48602)

## தவறிவிட்டது

ஏ.கெ.நிப்பொன் சுவீற்ரி என்பவரது தேசிய அடையாள அட்டை (827672971V), விசேட அடையாள அட்டை, தற்காலிக மோட்டார் வாகன அனுமதிப்பத்திரம் என்பன 26.03.2006 அன்று அம்மன் வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 154, கோயில் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் தொடர்புகொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். T.P.: 077 6086807, 077 6309629 (48689)

27.03.2006 திங்கட்கிழமை கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வந்தடைந்த பஸ்ஸில் 2 பைகள் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தொடர்புகொள்ளவும். தொடர்பு: R.B. Booking Center, இல.15, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். T.P.: 077 3253107 (48675)

சிந்தியா ஜோஜ் வின்சன் என்பவரின் தேசிய அடையாள அட்டையும் (826872403V) Bibleலும் 25.03.2006 அன்று கோயில் வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 859/17, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியுடன் தொடர்புகொள்ளவும். T.P.: 222 9654 (48668)

## வாடகைக்கு

பூதர்மடம், கோப்பாய் பருத்தித்துறை வீதியில் 2 கடைகள் வாடகைக்குண்டு. தொடர்பு: "உதயன்", பூதர்மடம், கோப்பாய். (48678)

## கணக்காளர் தேவை

பிரபல வர்த்தக நிலையம் ஒன்றிற்கு கணக்கு வேலைகள் செய்யக்கூடிய கணக்காளர் உடன் தேவை. அனுபவமுள்ளவர்கள் விரும்பத்தக்கது.
தொடர்பு:- விளம்பர இல: 2843,
மே/பா உதயன்,
யாழ்ப்பாணம்.
(சி/48593) (32-11-19)

# சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,மார்ச்30

நல்லூர் தேரடி செல்லப்பா சுவாமிகளின் 91ஆவது பங்குனி அச்சுவினி குருபூசை நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு செல்லப்பா சுவாமிகளது நினைவாலயத்தில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் தேவாரம், திருவாசகம், நற்சிந்தனைப் பாடல்கள், பாராயணம் என்பன இடம்பெற்று விசேட பூசையும் நடைபெறும். (204)

★ ★ ★

வலி.தென்மேற்கு,மார்ச்30

வடலியடைப்பு பாரத்தனை ஹரிஹர புத்திர ஐயப்ப சுவாமி ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் நாளை வெள்ளிக்கிழமை ஆரம்பமாகவுள்ளது. அடுத்தமாதம் 11ஆம் திகதி அலங்கார பூர்த்தி விழாவும் திருக்கல்யாண நிகழ்வும் மறுநாள் 12ஆம் திகதி சங்காபிஷேகமும் நடைபெறும். (ஒ-135)

★ ★ ★

யாழ்ப்பாணம்,மார்ச்30

வல்வை நகர் சிவபுரம் ஸ்ரீ வாலாம்பிகா தேவி சமேத ஸ்ரீ வைத்தீஸ்வர சுவாமி ஆலய பெருந்திருவிழா கடந்த 24ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

எதிர்வரும் ஏப்ரல் மாதம் 10ஆம் திகதி கைலாச வாகனமும் 11ஆம் திகதி தேர்த் திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (204)

---

## கட்டுடை அரசடி வீரகத்தி விநாயகர் ஆலய மகோற்சவ விஞ்ஞாபனம்

| | | |
|---|---|---|
| 31.03.2006 | வெள்ளி முற்பகல் 10.30 மணிக்கு | கொடியேற்றம் |
| 10.04.2006 | திங்கள் முற்பகல் 10.30 மணிக்கு | இரதோற்சவம் |
| 11.04.2006 | செவ்வாய் முற்பகல் 10.30 மணிக்கு | தீர்த்தோற்சவம் |

விநாயக அடியார்கள் வந்து எம்பெருமானின் அருட்பிரசாதம் பெற்றுய்யும்வண்ணம் வேண்டுகின்றோம்.

கட்டுடை,
மானிப்பாய். (48688)(32-11-19) தர்மகர்த்தா சபை.

## 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 10 - 05 - 1950



மறைவு 25 - 03 - 2001

அமரர்
### அருணாசலம் இராமையா
(இசைக்குயில் நாதஸ்வர வித்துவான்)
திதி: பிரதமை 30-03-2006

தோற்றம் மறைந்தாலும் துயரமோ மாறவில்லை
காலங்கள் கரைந்தாலும் கவலைகள் ஆறவில்லை
உங்கள் ஆத்மசாந்திக்காக வேண்டி நிற்கின்றோம்.

10 ஆம் கட்டை,
ஆவரங்கால்,
புத்தூர். (48700)(26-32-11-19)

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## வடக்கு - கிழக்கு மாகாண சபை
## வடக்கு-கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டம் (நிகொட்)
## பதவி வெற்றிடங்கள்

வடக்கு-கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டத்தின் (நிகொட்) யாழ்ப்பாண மாவட்ட அலுவலகத்தில் கீழ்க் காணப்படும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தெரிவு முறை - தகைமை அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்ட குறுகிய அட்டவணையிலிருந்து நேர்முகப் பரீட்சையொன்றின் மூலம்

விண்ணப்பங்கள் - விண்ணப்பதாரிகள் சுய விவரங்கள் அடங்கிய பட்டியலை (Bio data) தயாரித்து 10.04.2006ஆம் திகதிக்கு முன்னர் *பிரதித் திட்டப் பணிப்பாளர், நிகொட், மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்* என்னும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் குறிப்பிடப்பட்டிருத்தல்வேண்டும்.

1) உதவித் திட்டமிடல் பணிப்பாளர்

இந்நியமனம் திருப்திகரமான சேவை அடிப்படையில் வருடாந்தம் புதுப்பிக்கப்படக்கூடிய ஒப்பந்த அடிப்படையிலானதாகும். அவ்வொப்பந்தம் திருப்தியின் அடிப்படையில் மேலும் நீடிக்கப்படும்.

கல்வித் தகைமை :-
அங்கீரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் முதலாந்தர அல்லது இரண்டாந்தர சித்திபெற்ற பட்டதாரியாக இருத்தல் வேண்டும்.

சம்பளம்:-
இத்தகைய பதவிக்கு அரசாங்க சேவையில் வழங்கப்படும் ஆரம்ப சம்பளத்துடன் தெரிவு செய்யப்படுபவரின் தகைமை, அனுபவம் மற்றும் தேவைகளையும் கவனத்திற்கொண்டு சம்பளத்தின் 50 இற்கு மேற்படாத படியொன்றும் வழங்கப்படும்.

குறிப்பு - தேவையான தகைமைகளைக் கொண்டுள்ள சேவையில் உறுதிப்படுத்தப்பட்ட அரச சேவை உத்தியோகத்தர்களும் தமது திணைக்களத் தலைவரினூடாக இப்பதவிக்கு விண்ணப்பிக்கமுடியும்.

2) திட்ட உதவியாளர்

நிகொட் நிறுவனத்தின் ஒரு கருத்திட்டமாகிய வீடமைப்புத் திட்டத்தினை செயற்படுத்துவதில் பிரதித் திட்டப் பணிப்பாளருக்கு உதவுவதற்காக அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் பட்டதாரிகளிடமிருந்து மேற்படி பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. (வணிகத்துறை பட்டதாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்) இந்நியமனம் திருப்திகரமான சேவை அடிப்படையில் புதுப்பிக்கப்படக்கூடிய ஒப்பந்த அடிப்படையிலானதாகும்.

க.கணேஷ்,
அரசாங்க அதிபர்,
யாழ்ப்பாணம். (சி/48595) (22-32-16-19)

---

## வைத்திய நிலையம் இடமாற்றம்

முன்பு கோப்பாய் சந்தியில் நடைபெற்றுவந்த சிவன் கோயிலடி முறிவு நெரிவு வைத்தியசாலை கொக்குவில் மேற்கு, நீதிராசா வீதி, ஐயனார் கோயிலுக்கும் ஞானபண்டிதா பாடசாலைக்கும் இடையில் 31 ஆம் திகதிமுதல் இயங்கவுள்ளது. பார்வையிடும் நாள்கள், நேரம் வெள்ளி 4 மணி முதல் 7 மணிவரை. சனி, ஞாயிறு 9 மணிமுதல் 7 மணிவரை முன்கூட்டியே பதிவுசெய்யவும்.

(48670) (25-19-11)

தொடர்புகளுக்கு: 0777 727798 Dr.T.சோமசுந்தரம் விஜயன்.

மேலைப்புலோலி சதாவதானி நா.கதிரைவேற்பிள்ளை அவர்களின் குருபூசைத்தினத்தை முன்னிட்டு சக்தி F.M அனுசரணையுடன் யாழ். மாவட்ட ரீதியாக நடத்தப்படும்

## மாபெரும் பொது அறிவுப்போட்டி - 2006

இடம்: சதாவதானி நா.கதிரைவேற்பிள்ளை சனசமூக நிலையம், தம்பசிட்டி, பருத்தித்துறை
காலம்: 12.04.2006 பி.ப. 2 மணி
போட்டிக்கான பிரிவுகள்: தரம் 6-9, தரம் 10-13
விண்ணப்பக் கட்டணம்: ரூபா 20/-

போட்டிகளில் பங்குபற்ற விரும்பும் அனைத்துப் பாடசாலை மாணவ, மாணவிகளையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சுயமாகத் தயாரிக்கப்பட்டு பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்களை நிலைய முகவரிக்கு 05.04.2006இற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைத்தல் வேண்டும்.

க.தங்கராசா,
தலைவர்.
T.P.: 0212264498/3284.
(சி/48594)(32-16-19)

ப.சிவசுப்பிரமணியம்,
போட்டி ஒருங்கிணைப்புச் செயலாளர்,
சதாவதானி நா.கதிரைவேற்பிள்ளை சனசமூக நிலையம்.

## 31ஆம் நாள் நினைவலைகள்

அன்னை மடியில் 13 - 08 - 1945



ஆண்டவன் அடியில் 28 - 02 - 2006

### திருமதி சிவகுருநாதன் இலட்சுமி (ரஞ்சி)

திதி: 30.03.2006

மாதம் ஒன்று மறைந்தாலும் மறையவில்லை உங்கள்நினைவு
மாங்கல்யம் தந்தவரை மறந்து தான் போனதெங்கே?
கருவினிலே சுமந்தோரை கலங்க வைத்து சென்றதெங்கே?
உங்களன்பு முகம் காணாது ஏங்குதிங்கே பலவுள்ளம்...
கண்ணீர்ப் பூக்களை காணிக்கையாக்கி ஆத்மசாந்திக்காய் பிரார்த்திப்போம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அன்னார் நோய்வாய்ப்பட்டிருந்தபொழுது உதவிய வைத்தியர்கள், தாதியர்கள், ஊழியர்கள், வாகன உதவி செய்தவர்கள் ஏனையோருக்கும், சிவபதமடைந்த செய்திகேட்டு எமது துயரில் நேரிலும் இன்னும் பல வழிகளிலும் அனுதாபம் தெரிவித்த அனைத்து இதயங்களிற்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்வதுடன், இன்று [30.03.2006] வியாழக்கிழமை நடைபெறவுள்ள அன்னாரது அந்தியேட்டிக் கிரியையிலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு பணிவன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

இராச வீதி,
நீர்வேலி வடக்கு, நீர்வேலி.

பிரிவால் துயருறும்:
கணவர், பிள்ளைகள்.

(48699)(32-16-19)

## மரண அறிவித்தல்



### வீரசிங்கம் யோகலிங்கம்

(இளைப்பாறிய சுகாதாரப் பரிசோதகர்)

மீசாலை தெற்கைப் பிறப்பிடமாகவும் கச்சாய் வீதி, சாவகச்சேரியில் வசித்தவரும் தற்போது கனடாவில் வசித்தவருமான வீரசிங்கம் யோகலிங்கம் அவர்கள் 28.03.2006 செவ்வாய்க் கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வைத்திய கலாநிதி வீரசிங்கம் - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் புதல்வரும் யோகேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான சிற்றம்பலம், சிவக்கொழுந்து, கனகம்மா மற்றும் கமலாம்பிகை ஆகியோரின் அன்புச் சகோதரரும் யோகேஸ்வரன் (ஷாஜா), பாலேஸ்வரன் (லண்டன்), சர்வேஸ்வரன் (கனடா), நளாயினி (ஷாஜா), குகனேஸ்வரன் (ஆஸ்திரேலியா), பரமேஸ்வரன் (சுவிஸ்), நந்தினி (ஆஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஜானா (ஷாஜா), வத்சலா (லண்டன்), கலா (கனடா), வெற்றிவேல் (ஷாஜா), இந்துமதி (ஆஸ்திரேலியா), சசிரேகா (சுவிஸ்), உதயன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் மாமனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.03.2006) வியாழக்கிழமை கனடாவில் நடைபெறும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

குறிப்பு: கச்சாய் வீதி, சாவகச்சேரியில் உள்ள அவரது இல்லத்தில் இன்று (30.03.2006) வியாழக்கிழமை பிற்பகல் 4 மணியளவில் ஆத்மசாந்திப் பிரார்த்தனை நடைபெறும்.

கச்சாய் வீதி,
சாவகச்சேரி.

T.P.No.: 0019059462559 (கனடா). (48695)(32-16-19)

தகவல்:
சிற்றம்பலம் பரமநாதன் (பெறாமகன்).

# சர்வதேச உதைபந்தாட்ட சம்மேளனத்தின் தலைவர் திங்கள் கொழும்பு வருகிறார்

யாழ்ப்பாணம், மார்ச் 30

சர்வதேச உதைபந்தாட்டச் சம்மேளனத்தின் தலைவர் ஜோசப் எஸ். பிளட்டர் (**Joseph S.Blatter**), ஆசிய உதைபந்தாட்ட சம்மேளனத்தின் தலைவர் முகமத் பின் கமாம் ஆகியோர் உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு எதிர்வரும் 3ஆம் திகதி இலங்கை வருகிறார்கள்.



ஜோசப் எஸ்.பிளட்டர்

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் இலங்கை நேரப்படி 11மணியளவில் வந்தடையும் அவர்கள் அங்கிருந்து விசேட ஹெலிகொப்டர் மூலம் ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட இடங்களை பார்வையிடவுள்ளனர்.

களுத்துறையில் அமைத்துள்ள வேர்ணன் பெர்னாண்டே விளையாட்டு அரங்கில் புதிதாக அமைக்கப்படவுள்ள நிர்வாக அலகு ஒன்றிக்கான கட்டுமானப் பணிகளுக்கான ஆரம்ப நிகழ்வில் கலந்துகொண்டு கட்டடத்திற்கான அடிக்கல்லினை நடவுள்ளனர்.

அன்று பிற்பகல் 3மணியளவில் இடம்பெறும் இலங்கையில் உள்ள 18 லீக்குகளின் பிரதிநிதிகளையும் மற்றும் இளம் உதைபந்தாட்ட வீரர்களையும் சந்தித்து கலந்துரையாடவுள்ளனர்.

உதைபந்தாட்ட லீக்குகளிற்கான உதைபந்தாட்ட மைதானம், நிர்வாக அலகுகள் அமைப்பதற்கான நிதி உதவியினை வழங்கவுள்ளனர்.

மேற்படி நிகழ்விற்கான முழு நடவடிக்கைகளையும் ஆசிய உதைபந்தாட்ட சம்மேளனத்தின் உபதலைவரும், இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் நிறைவேற்றுக் குழுவின் தலைவருமான வீ. மணிலால் பெர்னாண்டோ மேற்கொண்டுள்ளார்.

யாழ்ப்பாணம், பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கிற்கான மைதானமும், நிர்வாக அலகு அமைப்பதற்கான நிதியின் முற்பணக் கொடுப்பனவும் இவ் வைபவத்தில் வைத்து வழங்கப்படவுள்ளது.



முகமத் பின் கமாம்

மேற்படி நிகழ்வில் கலந்துகொள்வதற்காக யாழ்.பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்குழு ஒன்று ஞாயிறுக்கிழமை கொழும்பு புறப்படுகின்றது.

(3-190)(27)



அண்மையில் இராமநாதபுரம் ம.வியில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டியில் பார்வையாளரைக் கவர்ந்த வினோத உடை நிகழ்வு இது.

இனவாத அரசும், ஒட்டுக் குழுக்களும் ஊடகவியலாளர்களைக் கொலை செய்வதனை கண்டித்து எச்சரிக்கும் வகையிலான சுலோக அட்டையுடன் விநோத உடை அணிந்த சிறுமி. (405)

## மத்தியஸ்தர் பரீட்சை

யாழ்ப்பாணம், மார்ச் 30

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தினால் உதைபந்தாட்ட மத்தியஸ்தர்களுக்கான பரீட்சை நடத்துவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இப் பரீட்சையில் பங்குகொள்ள விரும்புவோர் ஈச்சமோட்டையில் அமைந்துள்ள உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்க பணிமனையில் தொடர்புகொள்ளுமாறு கிளிபேட் அன்ரனிப்பிள்ளை கேட்டுக்கொண்டுள்ளார்.(3-190)(26)

## மென்பந்தாட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 30

யாழ்.பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையிலான மென்பந்து துடுப்பாட்டப் போட்டியில் இன்று வியாழக்கிழமை இடம்பெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரங்கள் வருமாறு:

* ஈச்சமோட்டை வி.க.மைதானம் - பிற்பகல் -4 மணி- பாடுமீன் வி.க. எதிர் சென். நீக்கிளஸ் வி.க.
* கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயமைதானம் பிற்பகல் 4 மணி- யாமகா வி.க. எதிர் யுத்கார்மல் வி.க.

(190)(26)

# வன்னியில் சிறப்புற நடைபெற்ற விளையாட்டுப் போட்டி நிகழ்வுகள்

பரந்தன், மார்ச் 30

கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவில் பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையேயான வலைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் உழவர் ஒன்றிய அணி 12 கோல்களால் வெற்றிபெற்றது.

வட்டக்கச்சி மகாவித்தியாலய மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற இந்த ஆட்டத்தின் இறுதிப் போட்டிக்கு உழவர் ஒன்றிய அணியும் பிறைக்சன் அணியும் தெரிவாகியிருந்தன.

இவ்விரு அணிகளுக்குமிடையே நடைபெற்ற இறுதியாட்டத்திலேயே உழவர் ஒன்றிய அணி வெற்றிபெற்றது. (203-352)

* * *

பரந்தன், மார்ச் 30

மாந்தை கிழக்குப் பிரதேச செயலகத்திற்குட்பட்ட கழகங்களுக்கிடையேயான வருடாந்த தடகள விளையாட்டுப் போட்டி நிகழ்வுகள் அண்மையில் பிரதேச செயலர் ம.ஜெகு தலைமையில் நடைபெற்றன.

ஒலிம்பிக் தீபம் ஏற்றப்பட்டு விளையாட்டு நிகழ்வுகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டாசுகுமார் சிறப்புரை நிகழ்த்தினார்.

இந்தப் போட்டிகளில் முதலாம் இடத்தை ஸ்கைலாப் அணியும், இரண்டாமிடத்தை கலைமகள் வி.க.அணியும் மூன்றாமிடத்தை இருதயநாதர் வி.க. அணியும் பெற்றுக் கொண்டன. (203-352)

* * *

வட்டக்கச்சி, மார்ச் 30

வட்டக்கச்சி மகாவித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டியை முன்னிட்டு பாடசாலை மாணவர்களிடையே கடந்த 24 ஆம் திகதி சைக்கிள் ஓட்டம், மரதன் ஓட்டப் போட்டிகள் நடத்தப்பட்டன.

பெண்களுக்கான சைக்கிள் ஓட்டப்போட்டியும் ஆண்களுக்கான மரதன் ஓட்டப் போட்டியுமே நடத்தப்பட்டன.

கிளிநொச்சி பொது விளையாட்டு மைதான முன்றிலில் ஆரம்பமான இப்போட்டிகள் பாடசாலை அதிபர் க.இரத்தினசிங்கம் தலைமையில் நடைபெற்றன.

போட்டிகளை தமிழீழ காவல் துறையின் வீதிப் போக்குவரத்துப் பிரிவுப் பொறுப்பாளர் சிவகுமார் துப்பாக்கி வேட்டுச் சத்தத்துடன் ஆரம்பித்துவைத்தார்.

(203-405)(26)

# வலி.மேற்கு விளையாட்டுப்போட்டி சங்கானை யுத்காமல் சம்பியன்

வலி.மேற்கு, மார்ச் 30

வலி.மேற்குப் பிரதேசத்தின் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலான விளையாட்டுப்போட்டிகளில் சங்கானை யுத் விளையாட்டுக்கழகம் அதிகூடிய புள்ளிகளைப் பெற்று சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.

இவ் விளையாட்டு விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலய விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி, தலைமைப் பீட உதவி அரச அதிபர் வே.வீரபத்திரபிள்ளை ஆகியோர் மங்கள விளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைத்தனர்.

பிரதேச செயலர் சீ.ஏ.மோகன்றாஸ் தலைமையில் நடைபெற்ற விழாவில் இரண்டாம் இடத்தை வட்டு .வை.எம்.ஏ.விளையாட்டுக் கழகம் பெற்றுக்கொண்டது. சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலய மாணவர்களின் உடற்பயிற்சி கண்காட்சியும் இடம்பெற்றது.

இவ் விழாவில் யாழ்.மாவட்ட விளையாட்டு அதிகாரி றொகான் இராஜசிங்கமும் கலந்துகொண்டார்.

விளையாட்டு விழாவிற்கான சகல ஏற்பாடுகளையும் பிரதேச விளையாட்டு அலுவலர் கு.முகுந்தன், சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர் எஸ்.சிவதரன் ஆகியோர் மேற்கொண்டனர். (5-175-202)(26)

## கரப்பந்தாட்டம்

யாழ்ப்பாணம்.மார்ச்30

யாழ்.பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையிலான பெண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டி எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலய மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

போட்டிகளில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

முற்பகல் 9 மணி - குருநகர் வி.க. எதிர் சென்.அன்ரனிஸ் வி.க.

முற்பகல் 10 மணி - பாடுமீன் வி.க. எதிர் பமிலியன்ஸ் வி.க. (203-190)(25)

## உடுவில் பிரதேச குழு நிலைப் போட்டி

யாழ்ப்பாணம், மார்ச் 30

உடுவில் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையில் நடைபெறவுள்ள குழு நிலைப் போட்டிகளுக்கான அட்டவணைகளை எதிர்வரும் 5ஆம் திகதி புதன்கிழமை விளையாட்டு உத்தி யோகத்தர் சி.துரைசிங்கத்திடம் பெற்றுக் கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

(203-190)(26)




## காரைநகரில் உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 30

காரைநகர் உதவி அரச அதிபர் பிரிவிற்குட்பட்ட பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையேயான உதைபந்தாட்டச்சுற்றுப்போட்டி எதிர்வரும் முதலாம், இரண்டாம் திகதிகளில் காரைநகர் தியாகராஜா மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

தடகளப் போட்டிகள் எதிர்வரும் 22, 23ஆம் திகதிகளில் இடம்பெறும் எனவும் விளையாட்டு உத்தியோகத்தர் சி.துரைசிங்கம் தெரிவித்துள்ளார்.

(3-190-203)(26)

# பச்சிலைப்பள்ளி பிரதேச மட்ட விளையாட்டுப் போட்டிகள்


பரந்தன், மார்ச் 30


பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையேயான 2006ஆம் ஆண்டுக்கான போட்டிகள் நாளை மறுதினம்ஆரம்பமாகி நடைபெறவுள்ளன.

போட்டிகள் நடைபெறவுள்ள இடங்களின் விவரம் வெளியாகியுள்ளது.

* கரபந்து ஆண்கள் பெண்கள் - நாளை மறுதினம்-காலை 8.30 மணி- பளை நகரசபை மைதானம்.
* வலைப்பந்து பெண்கள்- எதிர்வரும் 6ஆம் திகதி - காலை 8.30 மணி - பளை பொது விளையாட்டு மைதானம்.
* கிரிக்கெட் ஆண்கள்- எதிர்வரும் 7ஆம் திகதி - காலை 8.30 மணி- அரசன் குடியிருப்பு மைதானம்.
* கபடி ஆண்கள், பெண்கள் - எதிர்வரும் 8ஆம் திகதி - காலை 8.30 மணி - பளை பொது விளைய்ாட்டு மைதானம்.
* எல்லே ஆண்கள், பெண்கள்- எதிர்வரும் 12 ஆம் திகதி- காலை 8.30 மணி- பளை பொது விளையாட்டு மைதானம்.

(203-352)(26)






கிளிநொச்சி மாவட்ட முன்னணிப் பாடசாலைகளான கிளிநொச்சி மத்தியகல்லூரி, கிளிநொச்சி இந்துக்கல்லூரி அணிகளுக்கிடையே நடைபெற்ற கிரிக்கெட் போட்டியின் போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

கல்லூரி அணிகள் இரண்டும் மைதானத்தில் அணிவகுத்து நிற்பதையும்- கல்லூரி அதிபர்கள் வீரர்களுக்கு கைலாகு கொடுப்பதையும்- இடம்பெற்ற போட்டியின் ஒரு கட்சியையும்- வெற்றிபெற்ற இந்துக் கல்லூரி அணித் தலைவருக்கு தமிழீழ விளையாட்டுத்துறைத் தலைவர் பத்மநாதன். வெற்றிக்கிண்ணம் வழங்குவதையும் படங்களில்காணலாம்.

(படங்கள் : வட்டக்கச்சி செய்தியாளர்)

உ

## இணுவில் சிவகாமி அம்மன் கோயில்
## மகோற்சவ விஞ்ஞாபனம்

| | | |
|---|---|---|
| கொடியேற்றம் | 31.03.2006 வெள்ளிக்கிழமை | மு.ப.10 மணி |
| மஞ்சம் | 05.04.2006 புதன்கிழமை | இரவு 7 மணி |
| கைலாசவாகனம் | 07.04.2006 வெள்ளிக்கிழமை | இரவு 7 மணி |
| குதிரைவாகனம் | 08.04.2006 சனிக்கிழமை | இரவு 7 மணி |
| சப்பரம் | 09.04.2006 ஞாயிற்றுக்கிழமை | இரவு 7 மணி |
| தேர் | 10.04.2006 திங்கட்கிழமை (வசந்த மண்டப பூஜை காலை 7 மணி) | காலை 9 மணி |
| தீர்த்தம் | 11.04.2006 செவ்வாய்க்கிழமை (வசந்த மண்டப பூஜை காலை 8 மணி) | காலை 9 மணி |
| பூங்காவனம் | 12.04.2006 புதன்கிழமை | மாலை 5 மணி |
| வைரவர் மடை | 13.04.2006 வியாழக்கிழமை | பி.ப. 4 மணி |
| புதுவருட விஷேட பூஜை | 14.04.2006 வெள்ளிக்கிழமை | அதிகாலை 4.31 மணி |

(யாவும் பழையநேரப்படி)

மகோற்சவ குரு:- "வேத சிவாகம கிரியாரத்னம்"
**சிவஸ்ரீ சாம்பசிவ சோமசபேசக்குருக்கள்**

10.04.2006 திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு
**இன்னிசைக் கச்சேரி**
திரு.சி.சிவஞானராஜா, செல்வி பே.கிருபாநந்தி

*விளம்பர அனுசரணை:*
**பெஷன் ஹவுஸ்,**
65, K.K.S. ரோட், யாழ்ப்பாணம்.

**மு.சிவலிங்கம்**
(ஆதீனகர்த்தா).

(48693)(32-21-16-19)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மண்ணில் 06 - 01 - 1950



விண்ணில் 28 - 02 - 2006

**திருமதி நாகேஸ்வரன் கனகீஸ்வரி (கிளி)**

குடும்பத்தின் குலவிளக்காய் விளங்கிய எம் தெய்வமே!
குவலயத்தை விட்டு நீங்கள் சென்றதால் கலங்குகின்றோம்.
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (30.03.2006) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

8/6, அரசடி லேன்,
வண்ணார்பண்ணை,
தட்டாதெரு சந்தி,யாழ்ப்பாணம்.

கந்தசாமி நாகேஸ்வரன் (கணவர்),
விமல்ராஜ் (மகன்).

(48680)(21.16.19)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 21 - 03 - 1949



மறைவு 09 - 04 - 2005

**அமரர் நாகலிங்கம் பாலகுமார்**

திதி: 30-03-2006

விண்ணுலகை நாடிச்சென்ற
எம் குடும்பத்தின் ஒளிவிளக்கே!
எமை விட்டுப் பிரிந்தாலும்
எமக்கு நல்வழி காட்டி நிற்கும்
உங்கள் வாழ்நாள் காலமது
ஆண்டொன்றென்ன?
ஓராயிரம் ஆண்டுகள் தான்
கடந்தோடிப் போயிடினும்
உம் நினைவு எம்முடன் வாழும்.

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:
மனைவி, மகன்.

பொற்பதி வீதி,
கொக்குவில் கிழக்கு,
யாழ்ப்பாணம்.

(48654)(21.16.19)

## விற்பனையாளர் தேவை

கண்ணாடி வியாபாரத்தில் அனுபவமுள்ளவர்களும், பழக விரும்புபவர்களும் தேவை.
(ஆண்கள் மட்டும்)

❋ கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

**த.குமாரசாமி அன் சன்ஸ்**
248/1, கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.

(48669) (21.16.19)

## அல்லாரையில் கலந்துரையாடல்

தென்மராட்சி, மார்ச்30

மீசாலை அல்லாரை உற்பத்திக் கிராமம் அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் நாளை பிற்பகல் 2.30 மணிக்கு அ.த.க. பாடசாலையில் நடைபெறும்.

கிராம மக்கள் அனைவரையும் இக்கலந்துரையாடலில் கலந்துகொள்ளுமாறு தென்மராட்சி பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் கேட்டுள்ளார். (ஒ-117)(21)

## வீதி விபத்தில் ஒருவர் காயம்

குடத்தனை, மார்ச்30

உழவு இயந்திரமும் மோட்டார் சைக்கிளும் மோதி விபத்துக்குள்ளாகியதில் மோட்டார் சைக்கிளில் சென்றவர் காலில் காயமடைந்தார்.

நேற்று முன்தினம் காலை மணற்காட்டுப் பகுதியில் இடம் பெற்ற இந்தச் சம்பவத்தில் கரவெட்டி மேற்கைச் சேர்ந்த அண்ணாசாமி ஆனந்தராசா (வயது 30) என்பவரே காயமடைந்தவராவார்.

இவர் உடனடியாக மந்திகை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக அம்புலன்ஸ் மூலம் யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். (ஒ-78)(21)

## ஆசிரிய ஆலோசகர் பதவி வெற்றிடம்

சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் பதவிக்கான விண்ணப்பம் யாழ். வலயக் கல்வி அலுவலகத்தால் கோரப்பட்டுள்ளது.

கிறிஸ்தவம் றோமன் கத்தோலிக்கம், ஆங்கிலம், முறைசாராக் கல்வி, தகவல் தொழில் நுட்பம், 2ஆம் மொழி சிங்களம் ஆகிய பாடங்களுக்கான ஆசிரிய ஆலோசகர் பதவிகளுக்கே விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பிப்பதற்கு தகுதி உடைய ஆசிரியர்கள் எதிர்வரும் ஏழாம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்க வேண்டும் என்று யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் வி.ரி.செல்வரட்ணம் தெரிவித்துள்ளார். (ஒ-14)(21)

## நெஞ்சு விட்டகலாத 15 ஆவது வருட இதய அஞ்சலி

தோற்றம் 09 - 09 - 1919



மறைவு 12 - 04 - 1993

**அமரர் கந்தையா தம்பிப்பிள்ளை J.P.**

*(முன்னாள் தலைவர், கிராமசபை கைதடி நாவற்குழி, உரிமையாளர்: நியூ லீலாவதி பல்பொருள் வாணிபம், கைதடிச் சந்தி, கைதடி)*

நேசமாய் கதைப்பீர் வந்து நெருங்கிய நண்பர்போலே
பாசமாய் வளர்த்தீர் எம்மை பரிவுடன் பார்த்துவந்தீர்
வேகமாய் எமை விட்டு விரைந்து தான் சென்றதெங்கே?
நின்னது பிரிவை என்றும் நினைக்கவே முடியவில்லை
பின்னது என்ன இங்கே பிதற்றிப் பயன் எதுவுமில்லை
சொன்னது சொன்னார் சான்றோர் வாழ்வியல் இயல்பு சொன்னார்
என்னவோ இறைவன் சித்தம் இசைந்து நாம் ஒன்றிநிற்போம்.

அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

கைதடி தெற்கு,
கைதடி.

(48652) (39-21-16-19)

## நெஞ்சமதில் நீங்காத ஓராண்டு நினைவலைகள்

தோற்றம் 07 . 04 . 1930



மறைவு 09 . 04 . 2005

**அமரர் பொன்னர் சின்னையா**

திதி:30.03.2006

இருவிழி நீர் சுமந்து
ஓராண்டு உருண்டதிங்கு
கரு இமை வலி எடுத்து
உமைக்காண ஏங்குதிங்கு....
ஓராயிரமாண்டுகளிலும்
ஆறாத மனக் காயங்களை

தந்து விட்டு எங்கு சென்றீர்?
எம் பாசக் குலவிளக்கே!
பாசமுடன் பண்பினையும்
பகிர்ந்தெமக்கு அளித்து விட்டு
பிரிந்து நீர் போனதேன்?
உம் குலக் கொழுந்துகள் வாடுதிங்கு....

சந்நிதி வீதி,
துரையப்பா அவனியூ,
அச்சுவேலி.
தொ.பே.: 0773618014.

(48677)
(39-21-16-19)

**மனைவி, பிள்ளைகள்,**
**மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**




**SATS- TECH இன் சிறப்புத் தள்ளுபடி விற்பனை மற்றும் பரிசுத்திட்டம்**

KU BAND டிஸ் அன்ரனா சிஸ்டம்
*உத்தரவாதத்துடன்
** ரூபாய் 9000/= மட்டுமே

இலவசம்!
தெரிந்து எடுக்கப்படும்
அதிஸ்டசாலிக்கு இன்னும்
ஒரு சிஸ்டம் இலவசம்


* ஒருவருட உத்தரவாதம் முடிந்த பின்னரும் திருத்தம் செய்வதற்கான உதிரிப்பாகங்கள் எம்மிடம் கிடைக்கும்.
* இச்சலுகை ஏப்ரல் 15 வரை மட்டுமே.

கேபிள் டிவிக்கு உரிய அனைத்துத் தரமான உபகரணங்களும் மிகக் குறைந்த விலையில் கிடைக்கும்

SATS - TECH நிறுவனமானது இலங்கையில் செய்மதி தொலைக்காட்சி மற்றும் கேபிள் T.V. உபகரணங்களை நேரடியாக இறக்குமதி செய்து உத்தரவாதத்துடன் விற்பனை மற்றும் திருத்தம் செய்ய TRC இன் Vendor Licence (02244/06/N) உள்ள ஒரு நிறுவனமாகும். (48340(51-

மேலதிக விபரங்களுக்கு: SATS - TECH ENGINEER (நஷனல் விடியோ சென்ரர்) 182, கே.கே.எஸ். வீதி, கொக்குவில், யாழ்ப்பாணம்.
T.P:021-2225908
Hot Line: 0777-710785

SATS TECH ENGINEERS



யாழ். பல்கலைக்கழக ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி நிலையத்தைச் சேர்ந்த ஊடகவியல் டிப்ளோமா மாணவர்கள் தமது களப் பயிற்சிகளின் கீழ் 'உதயன்' பத்திரிகை நிறுவனத்துக்கு வருகைதந்து அதன் சகல பிரிவுகளின் செயற்பாடுகளையும் பார்வையிட்டனர். அச்சமயம் எடுக்கப்பட்ட படங்கள் இவை. (ஐ-70)(24)

## சந்தைப்படுத்தல் வாய்ப்புக்குறித்து விவரம் சேகரிப்பு

தென்மராட்சி,மார்ச்30

தென்மராட்சிப் பிரதேச செயலக சேவைகளை எப்படிச் சந்தைப்படுத்தலாம் என்ற விவரங்கள் வினாக்கொத்துகள் மூலம் பிரதேச செயலகத்தினால் திரட்டப்படுகின்றன.

பிரதேசத்தில் உள்ள பொது அமைப்புகளிடமிருந்து இவ்விவரங்கள் திரட்டப்படுகின்றன.

பிரதேச பொது அமைப்புகளிடம் வழங்கப்பட்ட வினாக்கொத்துப் படிவங்களைப் பூரணப்படுத்தி உடன் கையளிக்குமாறு பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் வேண்டுகோள் விடுத்துள்ளார். (ஒ-11)(24)

## திருட்டு மணல் அகழ்வோர் புதுயுக்தி

தென்மராட்சி,மார்ச்30

அனுமதிப்பத்திரம் இன்றி மணல் அகழ்ந்து வாகனங்களில் எடுத்துச் சென்று விற்பனை செய்தவர்களில் சிலர் தற்போது புதுவித யுக்தியை மேற்கொண்டு வருகின்றனர் என்று கூறப்படுகிறது.

இவர்கள் காலையில் வாகனத்தில் சல்லிக்கல் மற்றும் சிமெந்து ஆகியவற்றை மணல் அகழும் இடங்களுக்கு எடுத்துச்செல்கின்றனர். மணல் உள்ள இடங்களில் சட்டவிரோதமாக அகழும் மணலைப் பயன்படுத்தி அத்திபாரக் கற்களை அவர்கள் தயாரிக்கின்றனர். பின்னர் மாலையில் அத்திபாரக்கற்களைச் சந்தைப்படுத்த வாகனங்களில் கொண்டுசெல்கின்றனர்.

தயாரிக்கப்பட்ட கற்கள் காயாத நிலையில் காணப்படுவதால் வாகனத்தினுள் மணலைப் போட்டு அதன்மேல் கற்களை அடுக்கிக் கொண்டு செல்வதைக் காணமுடிகிறது. (ஒ-11)(24)

## கால்நடைகளைக் கட்டிவளர்க்க வேண்டுகோள்

நவாலி,மார்ச்30

நவாலி வயல்களில் சிறுபோகச் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதால் ஆடு, மாடுகளைக் கட்டாலிகளாக அலையவிடாது கட்டிவைத்து வளர்க்குமாறு நவாலி விவசாய சம்மேளனம் கால்நடை வளர்ப்போரை கேட்டுள்ளது. கட்டாக்காலிகளாகத் திரியும் கால்நடைகள் பிடிக்கப்பட்டால் அதிக பட்ச தண்டப்பணம் அறவிடப்படுமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-100)(24)




# பரமேஸ்வராக் கல்லூரியை மீள நிறுவ பழைய மாணவர்கள் நடவடிக்கை

யாழ்ப்பாணம்,மார்ச்30

யாழ். பரமேஸ்வராக் கல்லூரியை மீண்டும் நிறுவ அக்கல்லூரியின் பழைய மாணவர்கள் ஒன்றுகூடி முயற்சி மேற்கொண்டு வருகின்றனர் என்று முன்னாள் பிரதிப் பொலீஸ்மா அதிபரும் கல்லூரியின் பழைய மாணவருமான ரி.பேரின்பநாயகம் தெரிவித்தார்.

இதற்கான ஒருங்கிணைப்பு நடவடிக்கையில் தான் ஈடுபட்டுள்ளார் என்றும் அவர் கூறினார். அவர் மேலும் கூறியதாவது:-

சைவப்பெரு வள்ளலும் கல்விமானும் தலைசிறந்த அரசியல் தலைவருமாக விளங்கிய சேர் பொன்.இராமநாதன் சைவமக்களின் கல்வி மேம்பாட்டிற்காக ஆண்களுக்குப் பரமேஸ்வராக் கல்லூரியையும் பெண்களுக்கு இராமநாதன் கல்லூரியையும் கடந்த நூற்றாண்டின் முற்பகுதியில் நிறுவியிருந்தார். இவ்விரு கல்லூரிகளும் எத்தனையோ சிறந்த கல்விமான்களை உருவாக்கியிருந்தமை யாவரும் அறிந்த விடயமாகும்.

பரமேஸ்வராக் கல்லூரி இயங்கிய இடத்தில்தான் யாழ். பல்கலைக்கழகம் தற்போது இயங்கிவருகின்றது. பல்கலைக்கழகத்திற்கு அக்கல்லூரி வழங்கப்பட்ட பின்னர் அக்கல்லூரி இயங்காமல் இருப்பது ஒரு பெருங் குறையே. பரமேஸ்வராக் கல்லூரியை மீண்டும் நிறுவ அக்கல்லூரியின் பழைய மாணவர்கள் விரும்புகின்றனர். பரமேஸ்வராக் கல்லூரிக்குச் சொந்தமான பல ஏக்கர் காணியும் ஏனைய சொத்துகளும் அன்று தொடக்கம் இன்றுவரை பரமேஸ்வராக் கல்லூரி அறங்காவலர் சபையினால் பரிபாலிக்கப்பட்டு வருகின்றன. இச்சொத்துகள் மூலம் வருகின்ற வருமானம் நற்பணிக்காகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

இந்த அடிப்படையில் யாழ். பரமேஸ்வராக் கல்லூரி அறங்காவலர் சபையின் அனுசரணையுடன் பரமேஸ்வராக் கல்லூரியை மீண்டும் நிறுவுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் வேறு பல நற்பணிகளைச் செய்யவும் இக்கல்லூரியின் பழைய மாணவர்களாகிய ஆர். நடராஜா (நிர்வாகப் பணிப்பாளர், பான் ஏசியன் வங்கி), ஆர்.ருக்மனிக்காந்தன் (இளைப்பாறிய அரச நிர்வாக உத்தியோகத்தர்) ஆகியோருடன் இக்கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தைக் கொழும்பில் நிறுவ நான் நடவடிக்கை எடுத்துவருகிறேன்.

ஆகவே, கொழும்பிலும் பிற இடங்களிலும் வாழும் பரமேஸ்வராக் கல்லூரி பழைய மாணவர்கள் இலக்கம் 1ஏ, அலக்சாண்டர் டெரஸ், வெள்ளவத்தை, கொழும்பு -6 என்ற முகவரியிலோ 2504205 என்ற கொழும்புத் தொலைபேசி இலக்கத்துடனோ தொடர்பு கொள்ளலாம் - இவ்வாறு ரி.பேரின்பநாயகம் தெரிவித்தார். (ஒ)(24)

## ஆழிப்பேரலை பாதித்தோருக்கான குடிதண்ணீர் விநியோகம் நிறுத்தம்

கரவெட்டி,மார்ச்30

ஆழிப்பேரலையால் பாதிப்புற்ற வடமராட்சிக் கரையோர மக்களுக்கும் கரையோரப் பாடசாலை மாணவர்களுக்கும் வல்வை நகர சபையால் வழங்கப்பட்டுவந்த குடிதண்ணீர் விநியோகம் இடைநிறுத்தப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

கடந்த வருடம் இடம்பெற்ற ஆழிப்பேரலை அனர்த்தத்தால் வல்வெட்டித்துறை கரையோரக் கிணறுகளிலுள்ள நன்னீர் உவர் நீராக மாறியது. இதனால் மக்கள் பெரும் கஷ்டமடைந்தனர்.

இதனை நிவர்த்தி செய்யுமுகமாக வல்வெட்டித்துறை நகரசபை பவுசர் மூலமாக மக்களுக்கும் கரையோரப் பாடசாலை மாணவர்களுக்கும் குடிதண்ணீரை வழங்கிவந்தது. தற்போது மேற்படி தண்ணீர் விநியோகம் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

இதன் காரணமாகப் பொதுமக்களும் பாடசாலை மாணவர்களும் குடிதண்ணீர் இன்றிப் பெரும் கஷ்டங்களை அனுபவித்து வருகின்றார்கள். (ஒ-70-24)

## அனுமதியற்ற கட்டடங்களை அகற்ற மானிப்பாய் பிரதேச சபை திட்டம்

யாழ்ப்பாணம்,மார்ச்30

மானிப்பாய் பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் உரிய அனுமதி இன்றி அமைக்கப்பட்ட கடைகள் மற்றும் கட்டடங்களை அகற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

முதற்கட்டமாக மானிப்பாய் - யாழ். பிரதான வீதியில் போக்குவரத்துக்கு இடையூறாக அமைக்கப்பட்ட வர்த்தக நிலையம் மானிப்பாய் சுகாதாரத் தொழிலாளர்களால் சபை செயலாளரின் உத்தரவின் பேரில் அகற்றப்பட்டது.

இதேவேளை, பண்டத்தரிப்பு பட்டணத்திற்குட்பட்ட பகுதியில் சபையின் அனுமதியின்றி கட்டப்பட்டுவரும் கட்டட நிர்மாண வேலை இடை நிறுத்தப்பட்டுள்ளது.

தற்போது பிரதேச சபைக்குட்பட்ட பகுதியில் அனுமதியின்றி கட்டப்படும் கட்டடங்கள் குறித்த விவரங்கள் எதிர்வரும் முதலாம் திகதி முதல் திரட்டப்படவுள்ளதாகச் சபைச் செயலாளர் மே.சாந்தசீலன் தெரிவித்தார்.

அனுமதியற்ற முறையில் கட்டப்பட்ட கட்டடங்களின் உரிமையாளர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஒ-185)(16)

## கட்டுத்துவக்கு வெடித்துக் காயம்

காணாமற்போன ஆட்டைத்தேடி காட்டுக்குச் சென்றவர் கட்டுத்துவக்கு வெடியில் அகப்பட்டுக் காயமடைந்தார்.

இந்தச் சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை சரசாலை வடக்கில் இடம்பெற்றது.

சரசாலை வடக்கைச் சேர்ந்த பொன்னம்பலம் தனபாலசிங்கம் (வயது39) என்பவரே இச்சம்பவத்தில் காலில் காயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ஒ-117)(16)

## கொட்டடிப் பகுதி வாய்க்கால்கள் சுகாத்ரரச் சீர்கேட்டால் பாதிப்பு

கொட்டடி - சிவன் பண்ணை வீதியில் உள்ள கால்வாய்கள் நீண்டகாலமாகத் துப்பரவு செய்யப்படாமையினால் சுகாதாரச் சீர்கேடு நிலவுவதாகக் கூறப்படுகிறது.

இதுகுறித்து அப்பகுதி மக்கள் கூறியதாவது:-

யாழ். குடாநாட்டில் 75 சதவீதமான இடங்களில் மாரிகாலத்தில் மட்டுமே நுளம்புகள் அதிகரித்து டெங்கு, மலேரியா போன்ற நோய்கள் பரவும் அபாயம் ஏற்படும். ஆனால், கொட்டடி - சிவன்பண்ணை வீதிப் பகுதியில் வாய்க்கால்களில் வருடம் முழுவதும் கழிவுநீர் பெருக்கம் தொடர்ந்த வண்ணம் உள்ளன. இதனால், இப்பகுதியில் உள்ள மக்களுக்கு வருடம் முழுவதும் நுளம்புகளின் பாதிப்பு ஏற்படுகிறது.

யாழ். மாநகர சபையின் சுகாதாரப் பகுதியினர் இதுதொடர்பாக மேலும் அதிக அக்கறை காட்டவேண்டும் - இவ்வாறு பொதுமக்கள் கூறினர். (ஒ-185)(16)

## மணல் அகழ்வு குறித்த பிரச்சினை மத்தியஸ்தர் சபையால் தீர்ந்தது

சங்கானை,மார்ச்30

வலி. மேற்குப் பிரிவில் அண்மையில் அமைக்கப்பட்ட மத்தியஸ்தர் குழுவின் மூலம் காணியில் மண் அகழ்வது சம்பந்தமான பிரச்சினையொன்று சுமுகமான முறையில் தீர்த்துவைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

வட்டுக்கோட்டையைச் சேர்ந்த ஒருவருக்குச் சொந்தமான தோட்டக் காணியில் அதே இடத்தைச் சேர்ந்த மற்றொருவர் அனுமதியின்றி மண் அகழ்ந்தெடுத்தார். இது சம்பந்தமான பிரச்சினையே சுமுகமாகச் சபையினரால் தீர்த்துவைக்கப்பட்டுள்ளது.

மணல் அகழ்ந்த நபர் தன்னால் அகழ்ந்தெடுக்கப்பட்ட மண்ணை மீளவும் அக்காணியில் போடுவதாகக் கூறியுள்ளார் என்றும் - இதனால் இரு பகுதியினரும் ஓர் இணக்கப்பாட்டிற்கு வந்துள்ளனர் என்றும் - சபையினர் தெரிவித்தனர்.

காணி, எல்லை, குடும்பம் சம்பந்தமான பிரச்சினைகளை இச்சபை தீர்த்துவைக்கும் எனவும் ஒவ்வோர் ஞாயிறும் முற்பகல் 9 மணிக்குப் பிரதேச செயலகத்தில் சபையினருடன் தொடர்புகொள்ளமுடியும் என்றும் சபையினர் மேலும் தெரிவித்தனர் (ஒ-29)(24)



யாழ். நகர அபிவிருத்தி சம்பந்தமான கலந்துரையாடல் ஒன்று அண்மையில் யாழ். மாநகர சபை ஆணையாளர் சீ.வி.கே.சிவஞானம் தலைமையில் யாழ். பொது நூலகக் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்ட உள்ளூராட்சி மன்றங்களின் தொழில் நுட்ப ஆலோசகர் இஸ்மாயில் மங்கள விளக்கேற்றுவதை முதலாவது படத்திலும் மாநகர ஆணையாளர் உட்பட நகர அபிவிருத்தி குறித்த அறிக்கை சமர்ப்பிப்பவர்களை அடுத்துள்ள படத்திலும் காணலாம். (படங்கள்: நேசன்)

# தொலைத்தொடர்பை மேம்படுத்த யாழ். ரெலிக்கொம்மில் நவீன கருவிகள்

யாழ்ப்பாணம் , மார்ச் 30

ரெலிக்கொம் நிறுவனத்தின் யாழ். தொலைத் தொடர்பு பரிவர்த்தனை நிலையம் நவீனமயப் படுத் தப்பட்டு வருவதாக அந்நிறுவனத்தின் வடமாகாண பிரதி பொது முகாமையாளர் வி.யோகேந்திரன் தெரி வித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெவித்ததாவது யாழ். ரெலிக்கொம் பரிவர்த்தனை நிலையத்தில் பொருத்தப்பட்டுள்ள "நியாக்ஸ்" ரகப் பரிவர்த்தனைக் கருவிகள் சுமார் 23 வருடங்களுக்கு முற்பட்டவை.

இந்தக் கருவிகளுக்குப் பதிலாக நவீனரகக் கருவி கள் பொருத்தப்படுகின்றன. இதன் ஒரு கட்டமாக ஆயிரம் இணைப்புக்களுக்கான நவீன மயப்படுத்தப் பட்ட 'அங்கற்றல்' ரகப் பரிவர்தனைக் கருவி மாற்றியமைக்கப் பட்டுள்ளது.

நவீன இணைப்புகள் பொருத்தப்பட்டுள்ள போதி லும் தொலைபேசி இலக்கங்களில் மாற்றம் எதுவும் ஏற்படாது.

இந்த ஆண்டு இறுதிக்குள் அனைத்துப் பரிவர்த்தனைக் கருவிகளும் நவீன மயப் படுத்தப்பட்டு பொருத்தப்படும். இவ்வாறு அவர் மேலும் தெரித்தார்.

(ஓ-13)



## நான்காம் ஆண்டு கண்ணீர் அஞ்சலி

மலர்வில் 02 - 01 - 1951

உதிர்வில் 13 - 04 - 2002

### திருமதி இந்திராணி தங்கராசா

திதி:30.03.2006

கண்ணின் வழியே உள் நுழைந்து
கவிதை பேசும் எம் தெய்வமே!
காலன் உங்களை எம்மிடம் இருந்து
பிரித்தெடுத்து காலங்கள் நான்காகி விட்டதுவோ?
தவமாய்த் தவமிருந்து எம்மைப் பெற்றெடுத்த அன்னையே!
உங்களின் பாசம் தொலைந்ததனால் பாவியாய்க் கலங்குகின்றோம்
கனத்த எம் இதய வேதனையைப் போக்கிட
கண் சிமிட்டும் நேரத்தில் அருகில் வரமாட்டீரோ?
என்றென்றும் உங்கள் நினைவைச் சுமக்கும்

கணவர்: க.தங்கராசா
மகன்: த.சுகந்தன்
மகள்: ச.சங்கீதா(கனடா)
மருமகன்: ச.மோகன்(கனடா)
பேரன்: ச.சஜீவன் (கனடா)
அம்மா: சி.அன்னரத்தினம்
மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள்.

பத்திரகாளி
கோயில் ஒழுங்கை,
பருத்தித்தறை.

(48548)(51-)

## பாடசாலைத் தவணை நாள்களில் மாற்றம்

அச்சுவேலி, மார்ச் 30

தமிழ், சிங்கள பாடசாலைகளுக்கான தவணை நாள்கள் தொடர்பாக கல்வி அமைச்சு மாற்றங்களைச் செய்துள்ளதாக அறிவித் துள்ளது.

இதன்படி முதலாம் தவணை: 2006.01.02 திங்கள் தொடக்கம் 2006.04.07 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரையும் -

இரண்டாம் தவணையில் முதலாம் கட்டம் 2006.04.24 ஆம் திகதி திங்கள் தொடக்கம் 2006.05.19 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரையும்-

இரண்டாம் கட்டம்:- 2006.06.19 ஆம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் 2006.08.22 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வரையும் -

மூன்றாம் தவணை 2006.09.04 ஆம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் 2006.12.08 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரையும் இடம் பெறவுள்ளன.

இந்தப் புதிய பாடசாலைத்தவணை விடுமுறை தமிழ், சிங்களப் பாடசாலைகளுக்கு மட்டும் ஏற்புடையது. முஸ்லிம் பாட சாலைகளின் தவணை நாள்களில் எந்தவித மான மாற்றமும் செய்யப்படவில்லை.

ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை பெறுபேறு மீளாய்வு, புதுவருட தேசிய பெருவிழாவையும் கருத்திற் கொண்டு தமிழ், சிங்கள மொழிப் பாடசாலைத் தவணைகளில் மாற்றம் செய்யப் பட்டுள்ளதாக கல்வி அமைச்சின் செயலா ளர் ஆரியரத்ன ஹேவகே அறிவித்துள்ளார்.

(ஓ-11)

## 8 ஆவது ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு:01-04-1979
இறப்பு:28-03-1998
திதி:பிரதமை
(30.03.2006)

### சிவனேசன் நிஷாந்தன்

எங்கள் அன்புச் செல்வமே!
நிஷாந்தன் நீர் எங்களை விட்டுச் சென்று
எட்டு வருடம் ஆனது உம் துயர்
தீராது அன்பிற்கு இலக்கணமாய்
பண்பின் சிகரமாய் பாசத்தின்
உறைவிடமாய், எங்களுக்கு
ஒரு நல்ல பிள்ளையாய் வாழ்ந்த
எங்கள் அன்புத் தெய்வமே!
எமைப்பிரிந்து நீண்ட தூரம்
போய் விட்டீர் நிஷாந்தன் எம்
ஆயுள் உள்ளவரை உம் நினைவு
தான் எங்களுக்கு.
ஓம்சாந்தி!

இருபாலை வீதி,
கோண்டாவில் கிழக்கு. கோண்டாவில்.

உம் துயரில்:
அப்பா, அம்மா,
சகோதரர்கள்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அமரர்

### சின்னத்தம்பி மார்க்கண்டு

மலர்வு: 09-04-1926
உதிர்வு: 28-02-2006

28.02.2006 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (30.03.2006) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்விலும் தொடர்ந்து நடை பெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் எமது உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக கின்றோம்.

ஏழாலை தெற்கு,
மயிலங்காடு.

குடும்பத்தினர்.

(48614)(51-)

## முதலாம் ஆண்டில் விழிநீருடன்



### அமரர் செல்லையா திருநாவுக்கரசு

மண்ணில்:26-01-1938 விண்ணில்:09-04-2005

திதி:30.03.2006

அன்பிற்கு இலக்கணமாய் அறிவிற்கு எட்டாக்கனியாய்
வாழ்ந்த என் மகனே..!
அருகில் இருக்கும் போது உங்கள் அன்பு புரியவில்லை
ஆனால்,
நீங்கள் தொலைதூரம் சென்றபின்னர்தான் புரிகிறது
தலைவா...!
அறிவொளியாய் அறிவுரைகள் பல சொல்லி ஆளாக்கிய
எம் அன்புத் தந்தையே..!
கற்றவர்கள் முன்னிலையிலே மற்றவர்கள் எவரும்
குற்றம் கூறாத
வகையில் வாழ்ந்த எம் இனிய சகோதரனே...!
ஆசைத்தங்கையை மணம் முடித்துக் கொடுத்துவிட்டு
ஆர்வமாய்
வாழ்ந்திடாமல் பாதியில் போனதேனோ?
மைத்துனனே...!
அன்பான பார்வையும் அதட்டலான பேச்சும்
என்றைக்குமே
மாறாது
பெரியப்பா...!
எதற்குமே அஞ்சாதே எனக் கூறிவிட்டு ஒரு மணக்கோலம்
தானும்
காணாது ஓடி மறைந்ததேனோ மாமாவே...!
ஆண்டொன்று போனாலும் வாடாமலராய் வாசமுடன்
எம்மனையில் மணம் வீசுவீர்கள்.

இல. 05, முதலியார் வீதி,
நல்லூர் தெற்கு,
யாழ்ப்பாணம்

(48657)

தகவல்:
குடும்பத்தினர்.

## நீங்காத நினைவில் நான்காம் ஆண்டு



மலர்வு 22 - 02 - 1962

உதிர்வு 30 - 03 - 2002

### திருமதி அரசகேசரி றமிலா

அன்று கேட்ட கொடும் செய்தி அதிருதே காதிலின்றும்
ஆண்டு நான்கு ஆகிவிட்ட போதிலும் நீ சென்றும்
இன்றுபோல தோன்றிடுதே நினைக்கையிலே மனத்தால் - உனை
ஈன்றவளென் இதயமென்ன செய்ததுவோ மரத்தால்
உயிரிருந்தும் பிணமாக உலாவுகின்றேன் இப்போ - நான்
ஊருலகம் விட்டுவந்து உனைக் காண்பதெப்போ
எல்லாம் இருந்தும் எதுவும் இல்லாதாய் ஆனேன் - இன்று
ஏதெதிலும் பற்றமனம் இல்லாத்தாயானேன்.

'புஸ்பவாசா'
உடுவில் கிழக்கு,சுன்னாகம்.

(48647)(51-)

-குடும்பத்தினர்.

# இலங்கை வங்கியின் யாழ் கிளைகளில் புத்தாண்டின் பின் புதிய நியமனங்கள்

நல்லூர்,மார்ச்30

எதிர்வரும் புத்தாண்டு தினத்தின் பின்னர் இலங்கை வங்கியின் வட பிரதேச கிளைகளில் புதிய நியமனங்கள் இடம்பெறும் என்று இலங்கை வங்கியின் பிரதிப்பொதுமுகாமையாளர் பி.ஏ.சி.பெர்ணான்டோ உறுதியளித்துள்ளார் என்று யாழ்ப்பாணம் வணிகர் கழகத் தலைவர் ஆர்.ஜனக்குமார் தெரிவித்தார்.

வங்கி வாடிக்கையாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்த கலந்துரையாடல் இலங்கை வங்கி அதிகாரிகளுக்கும் யாழ்.வணிகர் கழகப் பிரதிநிதிகளுக்குமிடையில் இலங்கை வங்கியின் யாழ்.மேற்ரரக் கிளையில் கடந்த 22 ஆம் திகதி நடைபெற்றது.

இலங்கை வங்கியின் பிரதிப் பொதுமுகாமையாளர், உதவி பொது முகாமையாளர், மேற்றரக்கிளை முகாமையாளர், வங்கி முகாமையாளர், கிளை முகாமையாளர்கள் ஆகியோருடன் யாழ். வணிகர் கழகத் தலைவர் ஆர்.ஜனக்குமார், பிரதித் தலைவர் எஸ்.ஜெய சேகரம் ஆகியோர் உட்பட வணிகர்கழக உறுப்பினர்கள் இதில் கலந்து கொண்டனர்.

இலங்கை வங்கியின் கிளைகளில் ஆளணி பற்றாக்குறை நிலவுவதாகவும் கடந்த 20 வருடங்களாக புதியவர்கள் சேவையில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை எனவும் வணிகர் கழகப் பிரதிநிதிகள் சுட்டிக்காட்டினர். இதற்குப் பதிலளித்த வங்கி அதிகாரிகள் புதிய நியமனங்கள் மேற்கொள்ளப்படும் என்ற உறுதிமொழியை வழங்கியுள்ளனர்.

பணக் கொடுப்பனவுகள் தொடர்பாக இலங்கை வங்கி முகாமையாளர்களுக்கு உரிய அதிகாரம் இல்லாதிருப்பது குறித்துச் சுட்டிக்காட்டப்பட்டதற்கு பணக் கொடுப்பனவு தொடர்பான மேலதிக அதிகாரமும் புத்தாண்டின் பின்னர் அவர்களுக்குக் கிடைக்கவுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது.

யுத்த காலங்களில் சில வாடிக்கையாளர்கள் கடன்களை மீளளிக்காததினால் அவர்களைப் பிணையாளிகளாக தற்போது ஏற்றுக்கொள்வதில்லை. யுத்தநிறுத்த ஒப்பந்தத்தின் பின்னர் வாடிக்கையாளர்கள் உரிய முறையில் செயற்படுகிறார்கள். எனவே, அவர்களைப் பிணையாளர்களாகச் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்ற கோரிக்கையும் வங்கி அதிகாரிகளால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

யுத்த காலத்தில் வைப்புப் பெட்டகத்துக்குள் வைக்கப்படும் பொருள்கள் பாதுகாப்புக்கருதி கொழும்புக்கு எடுத்துச் செல்லப்பட்டன. அவற்றின் தற்போதைய நிலைகுறித்து வினவப்பட்டது.

அதற்கு வைப்புப் பெட்டகம் பற்றுச்சீட்டை அதற்கு உரியவர்கள் அல்லது உரித்துடையவர்கள் சமர்ப்பிப்பதுடன் தங்களை உறுதிப்படுத்தியும் பொருள்கள் அடையாளம் காட்டப்படுமிடத்து இவை உரியவர்களிடம் ஒப்படைக்கப்படும் என வங்கி அதிகாரிகள் கூறினர்.

யாழ்ப்பாணம் பகுதியில் இலங்கை வங்கி கூடிய இலாபமடைகிறது. எனவே இலாபத்தில் ஒரு பகுதியை மருத்துவமனைகள் உட்பட யாழ்.மாவட்டத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கும் ஆதரவற்ற சிறுவர்களின் வளர்ச்சிக்கும் பயன்படுத்த வேண்டும் என்றும் -

யாழ்ப்பாணம் சுப்பிரமணியம் பூங்கா தற்சமயம் வணிகர் சங்கத்தினால் புனரமைக்கப்படுகிறது. அதனைப் பராமரிக்க மாதம் ஒன்றுக்கு ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா வரை தேவைப்படுகிறது. இலங்கை வங்கி அதனை நிர்வகிக்க முன்வர வேண்டும் என்றும் - கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

அதற்குப் பதிலளித்த வங்கி அதிகாரிகள் இப்போது இலங்கை வங்கி, யாழ்.ஆஸ்பத்திரி உட்பட ஏனைய அபிவிருத்தித் திட்டங்களுக்கு உதவுவதாகவும் பூங்காவைப் பொறுத்தவரை அதற்கு முழுமையாக உதவ முடியாதிருப்பதாகவும் ஒருபகுதி செலவைப் பொறுப்பேற்கலாம் எனவும் கூறியுள்ளனர் என்று யாழ்ப்பாணம் வணிகர் கழகம் தெரிவித்தது.

(ஒ-111)(19)

# தடுத்து வைக்கப்பட்டுள்ள ஐவரை உறவினர் சந்திக்க நடவடிக்கை

யாழ்ப்பாணம்,மார்ச்30

காங்கேசன்துறை பொலீஸாரால் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஐந்து பேரை சந்திப்பதற்கு அவர்களது உறவினர்கள் பூநகரி கடற்றொழில் சமாசம் ஊடாக மனித உரிமைகள் ஆணைக் குழுவின் உதவியைக் கோரியுள்ளனர்.

பருத்தித்துறை கடலில் கடந்த 22 ஆம் திகதி மீன்பிடிப் படகில் பயணித்தவர்கள் என்று கூறப்படும் இந்த ஐவரையும் கடற்படையினர் கைது செய்திருந்தனர். இவர்கள் பின்னர் காங்கேசன்துறைப் பொலீஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணை செய்யப்பட்டு வருகின்றனர்.

இந்த ஐவரையும் பார்ப்பதற்காக அவர்களது உறவினர்கள் பூநகரி கடல் தொழில் சமாசம் ஊடாக மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ்.அலுவலகத்தின் உதவியைக் கோரியுள்ளனர். மனித உரிமை ஆணைக் குழுவினர் படைத்தரப்பினருடன் இது குறித்து தொடர்புகொண்டுள்ளனர் என்று கூறப்பட்டது.

(ஒ-7) (25)




*பாடசாலையை விட்டுவிலகியோரின் நலன் கருதி வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகம் சிங்கள, ஆங்கிலமொழிப் பயிற்சி வகுப்புகளை ஆரம்பித்துள்ளது.*

*வகுப்பின் ஆரம்ப நிகழ்வில் உடுப்பிட்டி நலன் புரிச் சங்கத் தலைவரும் ஓய்வுபெற்ற நில அளவையாளருமான ந.தயாநந்தன் உரையாற்றுவதைப் படத்தில் காணலாம்.*

*அருகில் உடுப்பிட்டி தெற்கு கிராமசேவகர் எஸ்.சிவநேசன், கழகச்செயலாளர் க.வ.சிவச்சந்திரதேவன், கழகத் தலைவர் சி.குலசிங்கம், விரிவுரையாளர்கள் எஸ்.சண்முகநாதன், க.கணபதிப்பிள்ளை ஆகியோர் அமர்ந்துள்ளனர்.* *(202)(16)*

## தவக்காலச் சிந்தனை 30

### "நீதியை நிலை நாட்டுவோம்"

என்னைப் பற்றி நானே சான்று பகர்ந்தால் என் சான்று செல்லாது. "என்னைப் பற்றி சான்று பகர வேறு ஒருவர் இருக்கிறார். என்னைப்பற்றி அவர் கூறும் சான்று செல்லும் என எனக்குத் தெரியும்" (யோவா 5:32) இறைமகன் யேசுவை பற்றி மோசே திருமுழுக்கு யோவான் ஆகியோர் கடவுளின் ஒரே மகன் என்று சான்று பகர்ந்தனர். அதைவிட இறை தந்தையே "இவரே என் அன்பார்ந்த மகன்" எனச் சான்று பகர்ந்தார். இத்தனை சான்றுகள் இருந்தும் யேசுவை அவருடைய காலத்தில் பலரும் எற்கவில்லை.

காரணம் அவர்களது நெஞ்சம் அடைபட்டுக்கிடந்தது. இன்று நாம் வாழும் காலத்தில் நாமே யேசுவுக்கு சாட்சிகள். இன்று இந்த உலகில் நாம் எதைக் காண்கின்றோம். உண்மைக்கு புறம்பான விரோதமான செயற்பாடுகளையே காணுகின்றோம். சத்தியம் ஊமையாகி பொய் சான்று மேலோங்கி வருகின்றது. இதன் காரணமாக பணம், பதவி, உண்மைகளை மறைக்வும் பொய்யை அரங்கேற்றவும் முயல்கின்றன.

ஆகவே! அன்று உண்மைக்கு எதிராகச் செயற்பட்டு வந்து நெஞ்சம் அடைபட்டுக் கிடந்த யூதர்களைப் போன்று நாமும் வாழாது சத்தியத்தை ஏற்று உண்மைக்கு புறம்பான செயற்பாடுகளுக்கு துணை போகாது யேசுவுக்கு சான்று பகர்பவர்களாக வாழ்வோம்.

- ம.அனுஷானந்தன், *குருநகர்.*

# வாசகர் திருமுகம்

## வலி.வடக்கு மக்களின் துயர் தொடர் கதையாக நீடிப்பதா?

சுமார் பதினாறு ஆண்டுகளுக்கு மேலாக நாங்கள் பலாலியில் இருந்தும் வலி.வடக்கின் பல பகுதிகளில் இருந்தும் இராணுவ நடவடிக்கை காரணமாக வெளியேற்றப்பட்டோம். அங்கிருந்து வெளியேறிய நாம் யாழ்ப்பாணக் குடாநாட்டின் பல பகுதிகளிலும், வாடகை இல்லங்களிலும் வேறு சிலர் நலன்புரி நிலையங்களிலும், இன்னும் சிலர் புலம் பெயர்ந்து வெளிநாடுகளிலும் குடியேறியுள்ளார்கள். வலி.வடக்காகிய எங்கள் பூமி ஒரு பொன் கொழிக்கும் பூமி என்றே சொல்லவேண்டும். அங்கே விவசாய நிலங்கள், மீன்பிடித் துறைமுகம் மற்றும் வட பகுதி மக்களுக்கு வாழ்வளித்த காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலை போன்ற பாரிய நிறுவனம் மற்றும் வணக்கஸ்தலங்களை தன்னகத்தே கொண்டுள்ள சிறந்த பூமி. மரவள்ளிக்கிழங்கு என்று சொன்னால் பலாலிக் கிழக்கு பெயர் பெற்றது. மற்றும் உப உணவுப்பொருள்களான தக்காளி, வெங்காயம், மிளகாய் என்பன அந்தப் பூமியில் விளைவிக்கப்பட்ட உப உணவுப் பொருள்கள். இப்படியான பூமி, இன்று பொட்டிழந்து, பூவிழந்து என்று சொல்வது போல் இப்போது மக்கள் வாழாத மயான பூமியாகி, பொலிவிழந்து இராணுவ ஆக்கிரமிப்பு காரணமாக வெறிச்சோடிக் கிடக்கிறது என்று எண்ணும் போது அம் மண்ணின் மைந்தர்களாகிய எமக்கு மிகவும் கவலைதான் வருகிறது.

இன்று நிலைமை சரியாகும், நாளை நிலைமை சரியாகும் என்றால் அது நடக்கக் கூடிய காரியமாகத் தெரியவில்லை. எத்தனை நாள்களுக்கு நாம் இப்படி எமது சொந்த நாட்டிலே அகதி வாழ்க்கை வாழ்வது? ஏதோ இடம் பெயர்ந்த மக்களுக்கு நிவாரணமாக உலர் உணவுப் பொருள்களும் மற்றும் ரூபாய் 5,000 மும் 2,000 மும் பணக் கொடுப்பனவாகக் கொடுத்தார்கள் அவ்வளவுதான். இப்பொழுது எமது பூமியில் இராணுவம் தக்களுடைய சொந்தத் தேவைகளுக்காக பயிர்ச்செய்கை பண்ணப் போவதாகப் பத்திரிகை வாயிலாக அறிந்து கொண்டோம். இது எந்த வகையில் நியாயம் இருக்கிறது என்று தெரியவில்லை. எங்களுடைய மண்ணில் இருந்து அம் மண்ணின் மைந்தர்களான எங்களை விரட்டிவிட்டு, தென்னிலங்கையில் இருந்து சிங்கள மக்களை கொண்டுவந்து பயிர்ச்செய்கை என்ற போர்வையில் அவர்களைக் குடியேற்றும் திட்டமா என்று எண்ணத் தோன்றுகிறது. இதை ஜனநாயகம் என்று கூறமுடியுமா? நாம் வாழ்நாள் முழுவதும் அகதி வாழ்க்கைதான் வாழ்வதா? நாம் இப்போது இருக்கும் வீட்டின் சொந்தக்காரர்கள் எம்மை வீட்டைவிட்டு வெளியேறும்படி கூறுகிறார்கள், மரத்தால் விழுந்தவனை மாடேறி மிதிப்பது போல்தான் உள்ளது வீட்டின் சொந்தக்காரர்களின் செயல். எனவே, இவைகளை நாம் சிந்திக்கும் போது இறுதியில் தெருவில் வாழ்க்கை நடத்தவேண்டிய துர்ப்பாக்கிய சூழ்நிலை உருவாகிவிட்டது என்றே எண்ணத் தோன்றுகிறது. எனவே, நாம் இருக்கும் இல்லங்களுக்கு வாடகையோ அல்லது எமது இழந்த காணிகளுக்கு வேறு ஏதாவது இடத்தில் வீடுகளையாவது அமைத்துத்தர வேண்டும். அதுவும் இல்லாவிட்டால் இழந்த சொத்துக்களுக்கு உரிய நஷ்ட ஈட்டையாவது பெற்றுத்தர வேண்டியது எமது அதிகாரிகளின் கடமையாகும், இதையாவது அவர்கள் செய்வார்களா?

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கிறார்கள். ஆனால், இராணுவ ஆக்கிரமிப்பு என்ற ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களாகிய எங்களுக்கு எதுவுமே செய்யப்படவில்லை. ஏன் இந்தப் பாராமுகம்? எங்களை ஏன் ஒதுக்க வேண்டும்? நாம் இந்த நாட்டுப் பிரஜைகள் இல்லையா?

இது விடயமாக வலி.வடக்கு மக்கள் பல போராட்டங்களை நடத்தினார்கள். ஆனால் எதுவுமே நடக்கவில்லை. எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் எமது கோரிக்கையை ஏற்று உரிய நடவடிக்கை எடுப்பார்களா? அல்லது இதையும் தட்டிக் கழித்து விடுவார்களா! ஒன்றில் நாம் இருக்கும் இல்லங்களுக்கு வாடகையாவது தரவேண்டும். அல்லது இழந்த சொத்துக்களுக்கு நஷ்டஈடு தரவேண்டும். எனவே, எங்களின் நிலையை கவனத்தில் கொண்டு ஆவன செய்யும்படி பணிவன்புடன் வேண்டுகிறேன். (25)

*3ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.* **ஜே.ஜே.ஏ.யோகரெட்ணம்.**

## குடிதண்ணீர் குழாயில் வாகனங்களைக் கழுவுவதா?

கொடிகாமம் சந்தைக்கு அண்மையில் பொதுமக்களின் குடிதண்ணீர் பாவனைக்காக பல ஆயிரக்கணக்கில் செலவிட்டு நீர்க் குழாய்களைப் பொருத்தியும் அதனை மக்களை விட அதிகம் பாவித்து வருபவர்கள் தனியார் சிற்றூர்திக்காரர்கள். தினசரி மாலை வேளைகளில் தங்கள் பணியை நிறுத்தியவுடன் தங்களின் ஊர்திகளை கழுவிக் கொண்டிருப்பதை பலரும் பார்க்கலாம்.

மேற்படி நீர்ப்பைப்புகள் என்ன நோக்கத்திற்காக அமைக்கப்பட்டன என்றும் மேற்படி பைப்பின் அமைப்புக்காக செலவிடப்பட்ட பணம் எவ்வளவு என்பதும் அந்தப் பணம் யாருடையது என்பதும் தெரியுமா?

மேற்படி சிற்றூர்திகள் கழுவப்படுவதால் நகரின் அநேக இடங்கள் அநேகமாக எந்த வேளையிலும் சேறும் சகதியுமாகத்தான் காட்சி தருகின்றன. மேற்படி நீர் துஷ்பிரயோகத்தை கொடிகாமம் பிரதேச சபையினர் தலையிட்டு நிறுத்த நடவடிக்கை எடுக்கவேண்டுமெனவும் தவறின் சட்டத்தின் முன் நிறுத்தும்படியும் அனைத்து மக்கள் சார்பிலும் மிக அவசரமாகவும் அவசியமாகவும் வேண்டிக் கொள்கின்றேன். (16)

*கண்டி வீதி, கொடிகாமம்.* **வா.காசித்தம்பி.**

## வீதி விதிகளை மதிப்போம்!

இன்றைய அவசர உலகில் போக்குவரத்தென்பது இன்றியமையாதது. பல தரப்பட்ட வேலைகளுக்காக அவசர வேலைகள் நிமித்தம் பல இடங்களுக்கு செல்லவேண்டிய தேவை உள்ளது.

இவ்வாறு போக்குவரத்தில் ஈடுபடுபவர்களுக்கு பழக்கவழக்கங்கள் குறைவாக இருப்பது அல்லது அசட்டையீனத்தில் பயணிப்பது வேதனையே.

குறிப்பாக வாகனங்களில் பயணிப்பவர்கள் தமக்கு தோன்றும் வேளையில் அருகில் செல்பவர்களைப் பார்க்காமல் துப்புவது சாதாரணமாக நடைபெறுகின்றது. பாடசாலை மாணவர், அரச உத்தியோகத்தர்கள் அடங்கலான பிரயாணிகள் இதனால் பெரும் அசௌகரியங்களுக்கு ஆளாவதை இவர்கள் பொருட்படுத்துவதில்லை. தமது பிரயாணம் சௌக்கியமாக இருந்தால் போதுமானது என நினைக்கின்றனர்.

மேலும் பிரயாணத்தில் ஈடுபடுபவர்கள் தமது வாகனத்தில் திரும்பவேண்டிய இடங்களில் 'சிக்னல்' விளக்குகளையோ அல்லது 'கை' சமிக்ஞைகளையோ காட்டாது தன்போக்காக, - தன்வீட்டு முற்றத்தில் பிரயாணிப்பது போல - திருப்புவதால் அநேக விபத்துக்கள் ஏற்படுகின்றன. இவைகள் குறித்து முன்னர் அலட்டிக்கொள்ளாமல் விபத்து நடந்த பின்னர் சரி, பிழை கூறுவது தீர்வைத்தருமா?

இரவில் பிரயாணிப்பவர்கள் வாகன வெளிச்சத்தை தேவைக்கேற்றால் போல் மாற்றுவதில்லை. சிலருக்கு வாகனத்தில் 'டிம் லைற்' ஏன் இருக்கிறது எனத்தெரியாது போல் உள்ளது. தாம் மட்டும் வீதியால் பிரயாணித்தால் போதும் என்றே எண்ணுகின்றனர் போலுள்ளது.

பொலீஸ் மற்றும் நீதிமன்ற நடவடிக்கை காரணமாக வாகன ஓட்டுரிமைப்பத்திரம் (லைசன்ஸ்) பெற்றால் மட்டும் போதும் என்ற எண்ணப்பாடு மக்கள் மத்தியில் இருந்து மாறவேண்டும். சாதாரண பழக்கவழக்கங்களையும் அந்தந்த இடங்களில் பிரயோகிக்க வேண்டும். இல்லை இப்படியானவர்களின் குணம் மாறாதெனில் உரிய இடங்களில் குறித்த காரணத்தை இனங்காட்டிப் பொருத்தமானவர்களால் மாற்றப்படுதல் வேண்டும். இதன் போதாவது திருத்தம் ஏற்பட வழிவகைகள் ஏற்படும். (27)

*கோண்டாவில்.* **அ.ஞானச்செழியன்**

## கமநல சேவை நிலையத்துக்கு புதிய கட்டடம்

நிகொட்- நிதி உதவித் திட்டத்தின் கீழ் நவாலி -டச்சு வீதியில் கமநல சேவைகள் நிலையக் கட்டடம் நிர்மாணிப்பதற்கான அடிக்கல் நடும் வைபவம் இன்று வியாழக்கிழமை காலை 7 மணிக்கு இடம்பெறும்.மானிப்பாய் மேற்கு விவசாயிகள் சம்மேளனத் தலைவரும் சமாதான நீதிவானுமாகிய சி.பொ.வ.மா.க.முதலியார் தலைமையில் புதிய கட்டடத்துக்கான அடிக்கல் நடும் விழா இடம்பெறும். இதில் பிரதம விருந்தினராக யாழ்.அரச அதிபர் க. கணேஷ், சிறப்பு விருந்தினர்களாக வலி.தென்மேற்கு பிரதேச செயலர் திருமதி ரூபினி வரதலிங்கம், யாழ்.மாவட்ட கமநல சேவைகள் திணைக்கள உதவி ஆணையாளர் க.சுந்தரேசன் ஆகியோர் கலந்துகொள்வர்.

(ஓ-185-135)(39)

## ஹெரோயினுடன் இலங்கை யுவதி கைது!

சுமார் பதினொரு கோடி ரூபா மதிப்புள்ள ஹெரோயின் போதைப்பொருளை வைத்திருந்த இலங்கை யுவதி ஒருவரை சென்னை போதைப்பொருள் கடத்தல் தடுப்புப் பிரிவினர் கைதுசெய்துள்ளனர்.

இலங்கையைச் சேர்ந்த சிவன் இந்திராணி மல்லிகா என்ற யுவதி தமிழகம் இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த அப்துல் ரஹ்மான் என்பவருடன் இணைந்து திருப்பதியிலிருந்து சென்னை ஊடாக இலங்கைக்கு ஹெரோயின் கடத்தவிருக்கிறார் என சென்னை போதைப் பொருள் கடத்தல் தடுப்புப் பிரிவுக்கு இரகசியத் தகவல் ஒன்று கிடைத்ததாம்.

இதனையடுத்து, சென்னை கோயம்பேடு அருகே தீவிர தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டபோது மேற்படி இலங்கைப் பெண்ணும், தமிழக வாசியும் கைது செய்யப்பட்டனர் என்று கூறப்படுகிறது.

இவர்களிடமிருந்த பதினொருகோடி ரூபா பெறுமதியான ஹெரோயின் போதைப் பொருளைக் கைப்பற்றிய பொலீஸார், தொடர்ந்து விசாரணைகளை நடத்தி வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(க)


# யாழ் நகரில்

# கொமர்ஷல் வங்கியின்

## மற்றுமொரு வங்கிச் சேவை நிலையம்

## இல.62/6, ஸ்ரான்லி வீதியில் திறந்துவைக்கப்படவுள்ளது

- கவர்ச்சிகரமான வட்டிவீதங்களில் சேமிப்பு, நிலையான வைப்புக் கணக்குகள்.
- வதிவோர் (RFC), வதியாதோருக்கான (NRFC) வெளிநாட்டு நாணயக் கணக்குகள்.
- சிறுவர்களுக்கான அருணலு, இசுறு, டொட்கொம், டொட்கொம் ஸ்பின் கணக்குகள்.
- நாடு முழுவதும் 222 தன்னியக்க டெலர் (CAT) இயந்திரங்களூடாக 24 மணிநேர வங்கிச் சேவை.
- நாடு முழுவதும் பரந்திருக்கும் சிறந்த வலையமைப்பின் உதவியுடன் இணைக்கப்பட்ட எமது 135 கிளைகள், வாடிக்கையாளர் சேவை நிலையங்கள், மினிக்கொம் நிலையங்களில் கணக்கு நடவடிக்கைகளை இலகுவாக மேற்கொள்ளமுடியும்.
- தொலைபேசி வங்கிச் சேவை (Comtel), செல்லிடத் தொலைபேசி வங்கிச் சேவை(Com SMS), இன்ரநெற் வங்கிச்சேவை (Com Bank On-Line).
- விசேட வட்டியுடன் கூடிய மூத்தோருக்கான உதார கணக்குகள்.
- மத்திய கிழக்கு நாடுகள், இங்கிலாந்து போன்ற நாடுகளிலிருந்து இலகுவான, விரைவான பணப் பரிமாற்றம் (e-Exchange)
- மேலும் பல சேவைகள்.....

எங்களுடைய திறமை மிக்க தனித்துவமான சேவையுடன் இணையுங்கள்.

காலம்: சித்திரை 04 ஆம் திகதி, 2006
காலை 9 மணிக்கு

கொமர்ஷல் வங்கி
உங்கள் நலமே எங்கள் நோக்கம்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(ச.48590) (39-11-16)


## அடைக்கல மாதா தேவாலயத்தில் தவக்கால நிகழ்வுகள்

கொழும்புத்துறை, மார்ச் 30

கிறிஸ்தவர்களால் தற்போது அனுஷ்டிக்கப்பட்டுவரும் தவக்காலத்தையொட்டி யாழ். அடைக்கல அன்னை ஆலயத்தில் தியானங்கள், விசேட திருப்பலிகள் நடத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அடுத்த மாதம் 3ஆம் திகதி தொடக்கம் 7ஆம் திகதிவரை தினமும் மாலை 5.30 மணிக்கு தியான வழிபாடுகள் அருட்தந்தை ம.டேவிற் அடிகளார் தலைமையில் நடைபெறவுள்ளன.

தவக்காலத்தின் 6ஆவது வெள்ளியான அடுத்தமாதம் 7ஆம் திகதி காலை 6.30 மணிக்குத் திருப்பலியும் மாலை 5மணிக்கு கல்வாரிக் குகையில் சிலுவைப்பாதை, திருப்பலி, ஆசந்தி ஆகிய வழிபாடுகள் குரு முதல்வர் அருட்திரு.ஜே.நிக்லஸ் அடிகளார் தலைமையில் நடைபெறும்.

பரிசுத்த வார நிகழ்வுகளில் அடுத்த மாதம் 9ஆம் திகதி காலை 6.30 மணிக்கு குருத்தோலைத் திருப்பவனியும் திருப்பலியும் இடம்பெறும். 13ஆம் திகதி மாலை 5.30மணிக்கு பெரிய வியாழன் வழிபாடுகளும் இரவு 11மணிக்கு பொது நற்கருணை வழிபாடும் இடம்பெறும்.

14 ஆம் திகதி மாலை 5.30மணிக்கு பெரிய வெள்ளி வழிபாடுகள் இடம்பெறும். 15ஆம் திகதி இரவு 11.30 மணிக்கு திருவிழிப்புத் திருப்பலியும் 16ஆம் திகதி காலை 8மணிக்கு உயிர்ப்பு ஞாயிறுத் திருவுள பலியும் ஈழத்துக் கல்வாரியில் நடைபெறவுள்ளன.

(ஓ-30-202)(27)

## மீனவர் சங்கம் புனரமைப்பு

செம்பியன்பற்று மாமுனைக் கடற்றொழிலாளர் சங்க புனரமைப்புக் கூட்டம் வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் சங்க சமாசத் தலைவர் மு.தங்கவேல் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

சங்கத்தின் புதிய தலைவராக கே.காண்டீபனும், செயலாளராக வி.தர்மகுலசிங்கமும் பொருளாளராக ம.சுதனும் தெரிவுசெய்யப்பட்டனர்.

(ஓ-173) (25)


DAIDO




எங்களிடம் தாராளமாக
Daido, Yamato. Honda, Yamaha, Bajaj, Suzuki,
மற்றும் எல்லா சீன தயாரிப்புகளுக்கு பொருத்தும் உதிரிப்பாகங்கள் வேண்டிய அளவில் கிடைக்கும்

Koyo® Made in Japan
DAIDO உதிரிப்பாகங்கள் YAMA...



செரென்டிப் மோட்டர் என்டர்பிரைஸஸ் (பிரைவேட்) லிமிட்டெட்
தொலைபேசி: 01-2341560-1, 2438779
பெக்ஸ்: 01- 2454608, 2438425
E-mail: zme@slt.lk





ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமஹ

# 70 ஆவது பிறந்த தின வாழ்த்துக்கள்

# சரவணமுத்து கந்தசாமி

(பத்தர்)

யாழ்ப்பாணம், தட்டாதெருவை வசிப்பிடமாகக் கொண்ட சரவணமுத்து கந்தசாமி அவர்கள் இன்று (30.03.2006) வியாழக்கிழமை தனது 70 ஆவது பிறந்தநாளை அவரது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகிறார்.

அவரை வண்ணை ஸ்ரீ காமாக்ஷி அம்பாளின் அருள் பெற்று சீரும் சிறப்புமாக வாழ வாழ்த்துகின்றோம்.

மைத்துனர் ச.நடராஜா (பஞ்சாட்சரம்), ந.கோகிலா,
மருமக்கள் : ந.சதீஸ்குமார், ந.சாருஜன், ந.தர்சனன், ந.ஷாலினி.

620, காங்கேசன்துறை வீதி,
நாச்சிமார் கோயிலடி,
யாழ்ப்பாணம்.

(48691)(23-39-11-16)



# முதலாவது பிறந்ததின வாழ்த்து



புலோலியைச் சேர்ந்த
திரு.திருமதி பீற்றர் யேனுகா
தம்பதியரின் செல்வப் புதல்வி


## நிகாஷினி

தனது முதலாவது பிறந்தநாளை இன்று (30.03.2006) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார். அவரை அன்பு அப்பா, அம்மா, அண்ணா, அம்மப்பா, அம்மம்மா, சுவிஸில் வசிக்கும் யயோ மாமா, சியாமினி அத்தை, புலோலியில் வசிக்கும் கொலின் மாமா, ஜெனி அன்ரி, அஜி அன்ரி மற்றும் நாயன்மார்கட்டில் வசிக்கும் அப்பப்பா, கருணா அத்தை, புஸ்பன்மாமா, சாந்தன் சித்தப்பா, சகுந்தலா சித்தி, யோகேஸ்வரன் சித்தப்பா, கௌரி சித்தி (கிளிநொச்சி) மற்றும் உற்றார், உறவினர் அனைவரும் வல்லிபுர ஆழ்வார் அருளால் பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் நலமுடன் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

புலோலி தெற்கு, புலோலி

சாந்தன் சகுந்தலாதேவி
(Building Shop-நல்லூர்)

(48650) (25-11-16)










பிரான்ஸ் நாட்டு அரசு அறிமுகப்படுத்தியுள்ள புதிய இளைஞர் தொழில் சட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து வரலாறு காணாத எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்று வருகின்றன. நாடு முழுவதும் பல லட்சக்கணக்கான இளைஞர்களும் தொழிலாளர்களும் பேரணிகளிலும் ஆர்ப்பாட்டங்களிலும் ஈடுபட்டுள்ளனர். ஆர்ப்பாட்டக்காரர்களையும் தண்ணீர் பீரங்கி கொண்டு பொலீஸார் அவர்களைக் கலைப்பதையும் படங் களில் காணலாம். (ஐ)

# கோழி இறைச்சி, முட்டை உண்பதை தவிர்க்கவேண்டாம் என ஆலோசனை

## நன்கு சமைத்துச் சாப்பிடுவதால் பாதிப்பில்லை என்கிறது சுகாதார நிறுவனம்

நியூயோர்க்,மார்ச்30

கோழி இறைச்சி மற்றும் முட்டையை முறையாக சமைத்து உண்டால் எந்த பாதிப்பும் ஏற்படாது என்று உலக சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது. புரதச் சத்து அதிகம் உள்ள உணவான கோழி இறைச்சி மற்றும் முட்டையை மக்கள் தவிர்க்கக்கூடாது என்றும் அது வலியுறுத்தியுள்ளது.

2003ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் முதல் பறவைக் காய்ச்சல் வைரஸ் உலகெங்கும் பரவ ஆரம்பித்துள்ளது. இது பறவைகளிலிருந்து மனிதர்களுக்குத் தொற்றுவதாகக் கண்டுபிடிக்கப்பட்டது.

இந்த வைரஸ் இதுவரை 186 பேரைத் தாக்கியுள்ளது. அவர்களில் 105 பேர் இறந்துவிட்டனர். ஆனால் இவர்களில் யாரும் நன்றாக வேகவைத்துச் சமைக்கப்பட்ட கோழி உணவைச் சாப்பிட்டதால் இறக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. கடந்த ஒரு மாதத்தில் 17 நாடுகளில் பறவைக் காய்ச்சல் பரவியுள்ளது.

பறவைக்காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ள கோழிப்பண்ணைகளில் வேலைசெய்யும் தொழிலாளர்கள், சந்தைகளில் இறைச்சி விற்பனை செய்யும் வியாபாரிகள் நேரடியாகப் பாதிப்புக்குள்ளாகும் வாய்ப்பு உள்ளது.

மனிதர்களிடையே வேகமாகப் பரவும் தன்மை இந்த வைரஸுக்கு உள்ளதால் முறையான பாதுகாப்பு நடவடிக்கைகளும் நோய்த் தடுப்பு நடவடிக் கைகளும் அவசியம் கையாளப்பட வேண்டுமென உலக சுகாதார நிறுவ னம் தெரிவித்துள்ளது. (ஐ)(22)

# எகிப்தில் பறவைக் காய்ச்சல்; 2ஆவது நபர் பலி!

எகிப்தில் பறவைக் காய்ச்சல் தாக்கி பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார். அங்கு இந்நோய்க்கு பலியான இரண்டாவது நபராக இவர் கருதப்படுகிறார்.

எகிப்தில் 4 பேருக்கு பறவைக் காய்ச்சல் தொற்றியிருப்பது அதிகாரபூர்வமாக தெரிய வந்துள்ளது.

ஐந்தாவதாக செவ்வாய்க்கிழமை காலையிலும் பறவைக் காய்ச்சல் அறிகுறிகளுடன் மருத்துவமனையில் ஒரு பெண் சேர்க்கப்பட்டுள்ளார் என்று கெய்ரோவில் உள்ள சுகாதார அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பறவைகள் ஆண்டுதோறும் பருவ நிலைகளுக்கு ஏற்றவாறு பல்வேறு நாடுகளுக்கு இடம்மாறி செல்லும் இந்நிலையில் ஆசியாவுக்கும் ஆபிரிக்காவுக்கும் இடையே பறவைகள் கடந்துசெல்லும் முக்கிய பாதையாக எகிப்து உள்ளது. இதுவே இங்கு பறவைக் காய்ச்சல் பரவ பெரிதும் காரணமாக இருக்கிறது என்று அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார். (ஐ)(22)

# முன்னாள் அமெ. அமைச்சர் 88 வயதில் காலமானார்!

வாஷிங்ரன்,மார்ச்30

முன்னாள் அமெரிக்க அதிபர் ரொனால்ட் றீகனின் ஆட்சியின் போது பாதுகாப்பு அமைச்சராகவிருந்த காஸ்பர் வீன்பேகர் தனது 88 வயதில் ஆஸ்பத்திரியில் காலமானார். அவரது குடும்பத்தினர் இத்தகவலை வெளியிட்டுள்ளனர்.

அண்மைக்காலமாக வீன்பேகர் நிமோனியா காய்ச்சலினால் அவதிப்பட்டு வந்துள்ளார். 1987 ஆம் ஆண்டில் பாதுகாப்பு அமைச்சராகவிருந்தபோது நிக்கரகுவாவில் அமெரிக்க ஆதரவு கெரில்லா படைகளுக்கு ஆயுதம் வழங்குவதற்காக ஈரானுக்கு ஆயுதம் விற்றார் என்று குற்றஞ்சாட்டப்பட்டிருந்தார். 1992 ஆம் ஆண்டு ஈரான் கொன்ட்ரா விவகாரம் தொடர்பாக நீதி விசாரணைக்கு முகம் கொடுக்கவிருந்த வேளையில் அவர் அதிபர் ஜோர்ஜ் புஷ் (சீனியர்) அவரை மன்னித்திருந்தார். (ப)(22)

# இலங்கையிலிருந்து காதல்ஜோடிகள் அகதிகளாகத் தமிழகம் வருகை



சென்னை,மார்ச்30

இலங்கையில் இருந்து இரண்டு காதல் ஜோடிகள் அகதிகளாக தமிழகம் வந்துள்ளன என்று அங்கு வெளியாகும் 'தினமலர்' பத்திரிகை தெரிவித்துள்ளது.

மன்னார் கீரி பகுதியைச் சேர்ந்த கோணேஸ்வரன் (வயது 23), இவரது மனைவி சுபாஷினி(வயது 22) மற்றும் வல்வெட்டித்துறையை சேர்ந்த அற்புதன்(வயது 22) இவரது மனைவி மேரி ஜெனிதா(வயது 19) இவர்கள் நால்வரும் திங்களன்று மன்னார் கடற்கரையிலிருந்து படகில் புறப்பட்டு நள்ளிரவில் தங்கச்சிமடம் தண்ணீர் ஊற்று கடற்கரை வந்தனர். பின்னர் அதிகாலை தக்கச்சிமடம் பொலீஸ் நிலையத்துக்கு வந்த இவர்களை பொலீஸார் விசாரணை செய்தனர்.

பின்னர் மண்டபம் அகதி முகாமுக்கு அனுப்பிவைத்தனர் - என்று 'தினமலர்' செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)(22)

# 'அல்லா' என்று கூவியதால் சேவல் கறியாகாமல் உயிர் தப்பியது!

லண்டன்,மார்ச்30

'அல்லா'(இறைவனைக் குறிக்கும் அரபுச் சொல்) என்று கூவியதால் சேவற்கோழி ஒன்று கறிச்சட்டிக்குள் போகாமல் உயிர் தப்பியுள்ளது.

மத்திய ஆசிய நாடான கிர்கிஸ்தான் நாட்டில் இந்த விசித்திரமான சம்பவம் நிகழ்ந்துள்ளதாக செய்தி கிடைத்துள்ளது.

இரண்டு வயதான சேவற்கோழியை அறுத்துக் கறி சமைக்க முடிவு செய்த அதன் உரிமையாளர் இஸ்மத்துல்லா யேவ் என்பவர் கத்தியை அதன் கழுத்தில் வைத்தபோது அது கூச்சல் போட்டுக் கத்தியது. இந்தச் சத்தத்தைக் கேட்ட அவரது ஐந்து வயதுப் புதல்வன் ஓடி வந்து 'அப்பா அது அல்லாஹ் அல்லாஹ் என்று கத்துகிறது' என்று கூறினான். அப்பறவையின் கூச்சல் கைத்தொலைபேசியில் பதிவு செய்யப்பட்டது. பின் அதனைக் கொல்லாமல் விட்டுவிட்டார்கள். அது உயிர் தப்பியது.

மத்திய ஆசியாவில் இவ்வாறான கதைகளை அடிக்கடி கேட்கக்கூடியதாக இருக்கின்றது என்று பி.பி.ஸி. மத்திய ஆசிய சேவை ஆசிரியர் திருமதி பேரவெட்வ்ஸ் றொபின்சன் கூறுகிறார்.

அஜர்பைஜானில் ஒரு மிருகக் கட்சிச் சாலையில் இருந்த சிங்கமொன்று தொழுகைக்கான அழைப்பு விடுக்கப்படும் ஒவ்வொரு சமயமும் 'அல்லாஹ்' என்று கர்ஜித்ததாக ஒரு செய்தி உண்டு என்று அவ்வாறு அச் சிங்கம் குரல் எழுப்பியதைக் கேட்டு மக்கள் பெரும் திரளாக மிருகக் காட்சிச்சாலையில் கூடினார்கள் என்றும் றொபின்சன் அம்மையார் தெரிவிக்கிறார். இந்த நிகழ்வு வெகு நேரம் நீடித்ததாகவும் அவர் கூறியுள்ளார். (ப)(22)




# எய்ட்ஸ் தடுப்பு மாத்திரை விரைவில் தயாராகும் என்கின்றனர் விஞ்ஞானிகள்

அட்லாண்டா,மார்ச்30

எய்ட்ஸ் நோய்க்கு மூலகாரணமாக இருக்கும் எச்.ஐ.வி. நோய்க்கிருமி உடலில் செயற்படாமல் தடுக்கும் மாத்திரை விரைவில் கண்டுபிடிக்கப்படும் என்று அமெரிக்க அறிவியலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து அமெரிக்காவில் இயங்கும் எச்.ஐ.வி. ஆராய்ச்சி கூடத்தின் தலைவர் தோமஸ் போக்ஸ் தெரிவித்திருப்பதாவது:-

மாத்திரை கண்டுபிடிப்பு வெற்றிகரமாக நிறைவேறியதும் அவை விரைவில் விநியோகம் செய்யப்பட்டு, நோய்த் தடுப்புக்கு பெரிதும் உதவும். கடந்த 25 ஆண்டுகளாக எய்ட்ஸ் எனும் ஆட்கொல்லி நோய் மனித இனத்தை ஆட்டிப் படைத்து வருகிறது. அதற்கு மாத்திரை மூலம் தீர்வுகாண முடியும் என்று அறிவியலாளர்கள் இப்போது கூறியிருப்பதில் ஓரளவு நிம்மதி ஏற்பட்டுள்ளதாக மருத்துவ வட்டாரங்கள் கூறியுள்ளன.

ஏற்கவே கண்டுபிடிக்கப்பட்ட 2 எச்.ஐ.வி. தடுப்பு மருந்துகளை குரங்குகளுக்குக் கொடுத்துச் சோதனை செய்து பார்த்ததில் நல்ல பலன் தெரிந்தது. இந்த மருந்தை விரைவில் மனிதர்களுக்கு கொடுத்துச் சோதித்துப் பார்ப்போம். ஒரு நிமிடத்தில் 10 பேருக்கு எச்.ஐ.வி. தொற்றுகிறது. ஆண்டுக்கு 50 லட்சம் பேர் எச்.ஐ.வி. நோய்க் கிருமியின் தாக்குதலுக்கு ஆளாகின்றனர்.

- இவ்வாறு தோமஸ் போக்ஸ் தெரிவித்தார். (ஐ)(22)

## அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்

767 நீலம்

மகரம்

28-03-2006

செல்லுபடியாகும் தொடர் இல. 4174713 - 4189302

வெற்றி இலக்கங்கள் **18 24 32 35**

**ஜக்பொட் பரிசு ரூபா 10,00,000/- வெல்லப்படவில்லை**

மொத்தப் பரிசுத் தொகை ரூபா 71,88,810/-
தொடர் இல. 5101730 க்கு மேற்பட்ட சிவப்பு நிற டிக்கெட்டுக்கள்
2006 மார்ச் 31 ஆம் திகதி செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கெட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்.

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்தப் பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 3,19,766 | 10/- | 31,97,660/- |
| 2 இலக்கங்கள் | 29,391 | 20/- | 5,87,820/- |
| 1 இல+லக்கினம் | 29,156 | 30/- | 8,74,680/- |
| 2 இல+லக்கினம் | 2,589 | 100/- | 2,58,900/- |
| 3 இலக்கங்கள் | 785 | 500/- | 3,92,500/- |
| 3 இல+லக்கினம் | 85 | 5,000/- | 4,25,000/- |
| 4 இலக்கங்கள் | 4 | 1,00,000/- | 4,00,000/- |
| 4 இல+லக்கினம் | 0 | 10,00,000/- | - |
| மொத்தம் | 5 | | 61,36,560/- |
| முச்சக்கர வண்டிகள் | | 2,10,450/- | 10,52,250/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 3,81,781 | | 71,88,810/- |

**இந்த வெள்ளிக்கிழமை ரூபா 17,14,250/-**

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கெட்டுக்களில் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 05 டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| அம்பாறை | 4179540-2-89 |
| திருகோணமலை | 4179795-1-88 |
| நுவரெலியா | 4185203-6-91 |
| மட்டக்களப்பு | 4183578-2-86 |
| மாத்தளை | 4181800-4-70 |

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கேல் வீதி
கொள்ளுப்பிட்டி, கொழும்பு-03


## கண்ணீர் அஞ்சலி

எமது நிலைய உறுப்பினர்
திருமதி ஞானசோதி குமாரசாமி அவர்களின் தந்தை

**இளையதம்பி கென்றி ஞானரத்தினம்**

அவர்கள் 26.03.2006 ஞாயிற்றுக்கிழமை காலமானார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தார்க்கு எமது அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**கலைவாணி சனசமூக நிலையத்தினர்,**
**தென்மட்டுவில்.**

(48754)(21.11.15)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை
திருமதி சசிகலா அருட்செல்வன்
அவர்களின் அன்பு மாமி

**திருமதி திருநாவுக்கரசு பரமேஸ்வரி**

அவர்கள் 22.03.2006 அன்று காலமானதையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

பாடசாலை சமூகம்,
யா/ முத்துத்தம்பி ம.வி.
திருநெல்வேலி.

(48758) (24.21.11.15)

## 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னையின் மடியில்
11 - 02 - 1960



அம்பாள் மடியில்
25 - 05 - 2001

**திருமதி சாந்தகுமாரி குலசேகரம்**
*(சாந்தா)*

*எமது அன்புத் தெய்வமே - நீ*
*எங்குதான் சென்றாய்?*
*இங்கு நாம் வாடுவதனை நீ அறியாய்*
*உன் கம்பீரமான தோற்றத்தையும்*
*மிடுக்கான நடையும் எங்கு காண்போம்.*

**குடும்பத்தினர்**
**கணவர், பிள்ளைகள்**

மீனாட்சி அம்மன் கோயில் வீதி,
சங்கத்தானை,
சாவகச்சேரி.

(48652) (21-11-15)

## குருநகரில் பெண்களுக்கு மெழுகுதிரி வார்ப்புப் பயிற்சி

யாழ்ப்பாணம்,மார்ச் 30

குருநகர் முன்னேற்ற ஐக்கிய முன்னணியினர் நாடாளுமன்ற உறுப்பினர் பொன்னம்பலம் கஜேந்திரகுமாரின் நிதியுதவியுடன் பெண்களுக்கு மெழுகுதிரி வார்ப்புப் பயிற்சிகளை வழங்கி வருகின்றனர்.

யாழ்.புனித யாகப்பர் ஆலய பங்குத் தந்தையும் யாழ்.பிரதேச உதவித் திட்ட மிடல் பணிப்பாளருமான மகேஸ்வரன் கடந்த திங்கட்கிழமை இந்நிகழ்வை ஆரம்பித்து வைத்தார்.

கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் பிரதிப்பணிப்பாளரால் பயிற்சிகள் வழங்கப் பட்டு வருகின்றன.

இந்தப் பயிற்சி நெறியில் ஆர்வமுள்ள பெண்களை குருநகர் முன்னேற்றக் கழகத் துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப் பட்டுள்ளது. (த-7-203)

## சிவசம்பு வைத்திய நிலையம்

இன்று (30.03.06) வியாழக்கிழமை தொடக்கம் யாழ்ப்பாணம் ஐந்து சந்தி (முஸ்லிம் பள்ளிக்கு அருகில்) ஆரம்ப மாகின்றது.

(48692)(21.11.15)

**யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் - இலங்கை**

முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடம்

**இரண்டாம் அரையாண்டுப் பரீட்சைகள்**

கல்வியாண்டு - 2004/ 2005

முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீடத்தின் முதலாம், பகுதி-I, பகுதி-II வருட BAd/B.Com. மாணவர்களுக்கான இரண்டாம் அரையாண்டுப் பரீட்சைகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. விண்ணப்பப்படிவத்தை 31.03.2006 வெள்ளிக்கிழமை தொடக்கம் பீடாதிபதி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்,

மீள் பரீட்சைக்கு தோற்றுவோர் ஒரு பாடத்துக்கு (பழைய/ புதிய பாடத் திட்டம்) ரூபா 50/- வீதம் பல்கலைக் கழக காசாளரிடம் அல்லது பல்கலைக்கழக மக்கள் வங்கிக் கிளையிடம் செலுத்தி பற்றுச் சீட்டை விண்ணப்பத்துடன் இணைத்தல் வேண்டும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை பீடாதிபதி அலுவலகத்தில் 10.04.2006 திங்கட்கிழமை அன்று அல்லது அதற்கு முன்னதாக சமர்ப்பிக்குமாறு மாணவர்கள் கேட்டுக்கொள்ளப் படுகின்றனர்.

**பதிவாளர்**

(C.48411) (39-21.15.11)

## மரண அறிவித்தல்

**Dr.ஆ.செல்வரட்ணம்**
(செல்லத்தம்பி)



ஆனைக்குட்டி வளவு தெல்லிப் பழையைச் சேர்ந்த செல்வரட்ணம் கொழும்பில் 27.03.2006 இல் காலமானார்.

இவர் காலஞ்சென்ற கனகநாயகியின் அன்புக் கணவரும், கௌசலாவின் (ஆஸ்திரேலியா) பாசமிகு தந்தையும் சிவகுமாரனின் (ஆஸ்திரேலியா) மாமனும், தாரணி (ஆஸ்திரேலியா), யோகீசன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (30.03.2006) வியாழக்கிழமை காலை 9 மணிமுதல் கல்கிசை மகிந்த மலர்ச் சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு அன்று பிற்பகல் 2 மணிக்கு இறுதிக்கிரியைகள் இடம்பெற்று மாலை 5 மணிக்கு கல்கிசை பொது மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**18 1/1, சாலிமன் றோட்,**
**கொழும்பு - 06**
**T.P:- 011 2580759**

(சி-48597) (21.11.15)

## அகவை 71 இல்...



இன்று அகவை 71 இல்
கால் பதிக்கும் கலாவினோதன்
வில்லிசைப் பு வர்

**க.நா.கணபதிப்பிள்ளை**
**(சின்னமணி)**

அவர்கள் நம் தாயகத்தின் முத்தான, சொத்தான கலைஞனாய் பல்லாண்டு காலம் கலைச் சேவை புரியவேண்டுமென அனைவரும் வாழ்த்துவோமாக.

இசைமாணி **தவ.றொபேட்**
*விரிவுரையாளர்,*
*இசைத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்.*

(48684)(21.

## தத்துவ வழக்குப் பற்றிய அறிவித்தல்

**யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்**

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை வடகிழக்கில்
லண்டன் பிம்பில்டன் அற்சின்சன் மோலீஸ்
ஆஸ்பத்திரியில் மரணமெய்திய கிறிஸ்ரின் சாந்தி
தேவசுதன் என்பவரின் மரண சாதனமின்றி
இறந்த மரணச் சொத்துக்கள் சம்பந்தமாக.
மரணமெய்தியவர்
வணக்கத்திற்குரிய டேவிட் ராஜப்பா எட்வேட்
31ஆம் பகத்தல றோட், கொழும்பு -3,
தற்போது வண்ணார்பண்ணை வடகிழக்கு,
யாழ்ப்பாணம்.

மனுதாரர்

எதிராக

வழ. இல. தத்துவம்/43
லில்லி புஸ்பநாயகி எட்வேட்
31, பகத்தல றோட், கொழும்பு - 3,
தற்போது வண்ணார்பண்ணை வடகிழக்கு,
யாழ்ப்பாணம்.

எதிர்மனுதாரர்

மேற்படி இலக்கம் கொண்ட மரண சாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட மரணமெய்தியவரின் மரணசாதனமில்லாத மரணச் சொத்தை நிர்வகிப்பதற்கு மனுதார் இவ் வழக்கைத் தாக்கல் செய்துள்ளமையால் மேற்படி மரண மெய்தியவரின் மரணச் சொத்தில் உரிமை உள்ளவர்கள் எவரேனும் இருப்பின் 2006ஆம் ஆண்டு பங்குனி மாதம் 31ஆம் திகதி காலை 9 மணிக்கு இந்த நீதிமன்றத்தில் தோன்றி தமது உரிமையைத் தெரிவிக்குமாறு இத்தால் அறிவித்தல் தரப்படுகின்றது.

2005ஆம் ஆண்டு வைகாசி மாதம் 27ஆம் திகதி

நீதிமன்றக் கட்டளைப்படி
**து.சிறீமோகன்**
பதிவாளர்,
மாவட்ட நீதிமன்றம்,
யாழ்ப்பாணம்.

வரைந்தது,
மனுதாரின் சட்டத்தரணி.

(48759) (24-21-11-15)

## மரண அறிவித்தல்

**கந்தையா சொர்ணலட்சுமி**



ஏழாலை மேற்கைப் பிறப்பிடமாகவும் தற்பொழுது மருதனார்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சொர்ணலட்சுமி 27.03.2006 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் நாகமணி கந்தையா (ஓய்வு பெற்ற ஆசிரியர், நாவலப்பிட்டி கதிரேசன் கல்லூரி, சுன்னாகம் திருஞானசம்பந்த வித்தியாசாலை) அவர்களின் அன்புப் பாரியாரும் தம்பிராசா- ஜெயலட்சுமி (தம்பிராசா நவாலி வேலக்கைப்பிள்ளையார்கோயிலடி) தம்பதியரின் கனிஷ்ட புத்திரியும் காலஞ்சென்ற செல்லம்மாவின் (சூறாவத்தை) அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற நாகமணி- பாறுவதிப்பிள்ளையின் அன்பு மகளும் காலஞ்சென்ற செல்லம்மா-ராசரட்ணம், குணரட்ணம் (ஓய்வுபெற்ற அதிபர்), காலஞ்சென்ற சரஸ்வதி- கணேஸ் அவர்களின் அன்பு மைத்துனியும் சறோஜினிதேவி (சாரு-கனடா) கலாவதி, சாந்தினிதேவி (ரமா, லண்டன்), கனகலட்சுமி (உஷா, லண்டன்), தனலட்சுமி (தனா, லண்டன்),தேவகுமாரன் (லண்டன்),பாமினி (பிரான்ஸ்), பானுதேவன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயும் சிவராஜா (கனடா) பாலமார்க்கண்டன்(கப்பல் உத்தியோகத்தர்), திருக்குமார் (லண்டன்), அனந்தகுமார் (லண்டன்), சிவராஜா (லண்டன்), கிருஷ்ணகுமாரி (லண்டன்), சிவயோகன் (பிரான்ஸ்), ஞானவதனா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமியும் சுஜானி, குயிலினி, நிலானி, விதுஷன், ஷரன், வைஷாலினி, அமீற்ரா, ரிஷாந், ராணியா, தரோஷினி, ஷர்மினி, சிம்மியா, திவ்யா, சாகித்தியன், டயானி ஆகியோரின் அன்புப் பாட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.03.2006) வியாழக் கிழமை பி.ப.3 மணியளவில் அவரின் இல்லத்தில் (மருதனார் மடம்) நடைபெற்று, இறுதிக்கிரியைகளுக்காக இணுவில் பூவோடை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளும் வண்ணம் கேட்டுக் கொள்கின்றோம்.

**கந்தையா குடும்பம்,**
*தகவல்:*
**பாலமார்க்கண்டன்** (மருமகன்),
**கலாவதி** (மகள்).

*உடுவில் றோட்,*
*மருதனார்மடம்*
*(சந்திக்கு அருகில்)*
*தொ.பே.இல.07765 66881.*

(48753) (39.21.11.15)

## பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் தேவை

எமது நிறுவனத்தில் காவல் கடமையில் ஈடுபடுவதற்கு பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் தேவைப்படுகிறார்கள். ஆர்வமுள்ளவர்கள் சுயவிவரக்கோவையுடன் 01.04.2006ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு எமது நிறுவனத்திற்கு சமுகமளிக்கவும்.

(48697)(18-17-49)

Tilko Holidays (Pvt) Ltd.
70/6, K.K.S. Road, Jaffna.


## கண்ணீர் அஞ்சலி

பிராந்திய தலைமைக் காரியாலயம், மக்கள் வங்கி அந்தரங்கச் செயலாளரும், வடமராட்சி சுருக்கெழுத்துக்கழக ஸ்தாபகரும், செயலாளரும் ஆகிய க.வ.சிவச்சந்திரதேவன் அவர்களின் அன்புத் தாயாரான

### திருமதி அன்னம்மா வைரவிப்பிள்ளை

அவர்கள் 22.03.2006 அன்று இறைபதம் அடைந்ததையிட்டு, அன்னாரின் இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

வடமராட்சி சுருக்கெழுத்து கழகம், வதிரி, கரவெட்டி.

தலைவர், உறுப்பினர்கள், மாணவர்கள்,

(பி-48614)(18-17-49)

## சென்.ஜோன் அம்புலன்ஸ் தொண்டர்களுக்கு யாழ்.போதனாவைத்தியசாலையில் பயிற்சி

சென்.ஜோன் அம்புலன்ஸ் தொண்டர்களுக்கு 06 மாதகாலத்துக்கு யாழ்.போதனா வைத்தியசாலை விடுதிகளில் பயிற்சி வழங்கப்படவுள்ளது. இப்பயிற்சிக் காலத்தின்போது கொடுப்பனவும் பயிற்சி முடிவின் போது சான்றிதழும் வழங்கப்படும். சேவை மனப்பான்மையுடன் இணைந்து செயற்பட விரும்பும் ஆண்,பெண் இருபாலரும் எதிர்வரும் 01.04.2006 சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.போதனா வைத்தியசாலையில் அமைந்துள்ள சென். ஜோன் அம்புலன்ஸ் காரியாலயத்திற்கு நேரில் சமுகம் தருமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மாவட்ட ஆணையாளர், சென் ஜோன் அம்புலன்ஸ், யாழ்.தெற்கு பிரதேசம்.

தொலைபேசி இல.021 222 3166

(48768)(18-17-49)

## 15 ஆம் வருட நினைவஞ்சலி



அன்னை மடியில் 04-08-1966
ஆண்டவன் பிடியில் 17-03-1991

அமரர்
### சிவபுரநாதர் சிவராசா (சிவன்)

(பாதுகாப்பு ஊழியர், இலங்கை மின்சார சபை, சுன்னாகம்)

திதி: 30.03.2006

சிவனின் நாமத்தை இட்டதனால்
சிவனுடன் இரண்டறக் கலந்தீரோ!
அவனியில் நாமிங்கு உனை - நினைந்து
ஆண்டாண்டு பூஜிப்போம் - அந்நாளை
ஓம் சாந்தி !

உன்பிரிவால் துயருறும்: அப்பா, அம்மா, அக்கா, மருமகன்.

சங்கரத்தை, வட்டுக்கோட்டை.

(48620)(18-17-49)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 12 - 06 - 1958



மறைவு 28 - 02 - 2006

### திருமதி நவரெட்ணம் சரஸ்வதி (பவளம்)

அன்போடும் பண்போடும் எமை வளர்த்து
சீரோடும் சிறப்போடும் எமை பசிக்கொடுமை பார்த்து
பேரோடும் புகழோடும் விண்ணுலகம் நோக்கிச் சென்ற சிறியதாயே
உங்களது ஆத்மா சாந்தி பெற
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

28.02.2006 அன்று இறைவனடி சேர்ந்த எங்கள் அன்புத் தெய்வத்தின் 31 ஆம் நாள் ஆத்மசாந்திப் பிரார்த்தனை இன்று(30.03.2006) வியாழக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அந்நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் எமது உற்றார்,உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கி.துரைசிங்கம் (மைத்துனர்)
இல.432/2,மடம் வீதி, யாழ்ப்பாணம்.

மதன்(பேறாமகன்), மாமியார்,மைத்துனர்கள், பேறமக்கள்,மருமக்கள், சகோதரர்கள்,பேரப்பிள்ளை...

(48770)(18-17-49)


## காணியும் வீடும் விற்பனைக்கு

அரியாலை, யாழ்ப்பாணம், புறாடி ஒழுங்கையில் 4அறையும் சமையலறையும் கொண்ட வீடும் நாற்புறமும் சுற்று மதிலும்நன்னீர் கிணறும் உடைய 2 பரப்புச் சதுரக் காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு:
பிரியா கொமினிகேசன்
21, கனகரட்ணம் வீதி, அரியாலை.
தொ.பே. 021 222 3411

## NEW SCIENCE COLLEGE

PHYSICS

2007 வெப்பவியல்
சனி, ஞாயிறு
பிரிவு 1: 7.30 - 8.30 (a.m.)
பிரிவு 2: 11.30 - 12.30 (a.m.)

2008 பொறியியல்
சனி, ஞாயிறு
9 - 10 (a.m.)

ஆரம்பம் 01- 04 - 2006

BY: R.குகன் (48769)(18-17-49)

## ராஜா யாழ்ப்பாணம்

இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடு
ஸ்ரீகாந், மீராஜஸ்மின், கருணாஸ் நடித்த
### மெர்க்குரிப் பூக்கள்

காட்சி நேரம்: 10.30, 2.30, 6.30, 9.00 (பி.ப.)

## நாகம்ஸ் சுன்னாகம்

விஜய் நடித்த
### நெஞ்சினிலே

காட்சி நேரம்: 11.00, 3.00, 7.00

## நாதன்ஸ் சினிமா யாழ்ப்பாணம்

விஷால், மீராஜஸ்மின் நடித்த
### சண்டக் கோழி

காட்சிநேரம்: 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே.)
தினசரி நான்கு காட்சிகள்


## மரண அறிவித்தல்கள்

### கந்தையா கிருஷ்ணர்

(இளைப்பாறிய ஆசிரியர்)

வரணி வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா கிருஷ்ணர் 28.03.2006செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற மாணிக்கத்தின் அன்புக் கணவரும் க.சிறீஸ்கந்தராசாவின்(கனடா)பேரனும் காலஞ்சென்ற செல்லம்மா,மாணிக்கம்(கனடா),வள்ளியம்மை ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 28.03.2006 அன்று மாலை 5 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் 6 மணியளவில் ஐயன்கண்டி இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்,அயலவர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வரணி வடக்கு, வரணி.

தகவல்: க.சிறீஸ்கந்தராசா (பேரன்-கனடா).

(48762)(18-17-49)

### திருமதி சிதம்பரப்பிள்ளை வள்ளியம்மை

கரவெட்டிமேற்கைச் சேர்ந்த திருமதி சிதம்பரப்பிள்ளை வள்ளியம்மை நேற்று (29.03.2006) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளையின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற வோகநாதன், சரோஜினிதேவி, பாலகிருஷ்ணன் ஆகியோரின் அன்புத் தாயும் காலஞ்சென்ற பாலகிருஷ்ணன் (சட்டத்தரணி), விசாலாட்சி, அன்பரசி ஆகியோரின் மாமியும் பார்த்தீபன், பாமினி, பகீரதன், நந்தகோபால், நிரஞ்சனா, நந்தரூபன், ஸ்ரீகாந், ரிஷிகாந், நிஷிகாந் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.03.2006) வியாழக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் 3 மணியளவில் சோனப்பு மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

'நாவலர் இல்லம்,' சண்டில்குளம், கரவெட்டி மேற்கு,கரவெட்டி
071 2357323

தகவல்: குடும்பத்தினர்.

(சி-48613)(18-17-49)

## மரண அறிவித்தல்கள்

### கனகரத்தினம் வேலாயுதபிள்ளை



கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் கோண்டாவில் கிழக்கு, ஆலடி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட கனகரத்தினம் வேலாயுதபிள்ளை அவர்கள் 28.03.2006 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கனகரத்தினம் - செல்லம்மா தம்பதியரின் அன்புப் புதல்வனும் கமலாதேவியின் அன்புக் கணவரும் ஸ்ரீகாந்தன்(ஜேர்மனி) , புஸ்பகாந்தி, ரவிகாந்தன், விஜயகாந்தி, ராஜகாந்தி,ஞானகாந்தன்(கனடா), ஜெயகாந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும் அருந்ததி(ஜேர்மனி), ஸ்ரீரஞ்சனி, கிருஸ்ணகுமார், ராஜசேகரன், சுஜாத்தா(கனடா), சற்குணேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமனும் அருண், நிவேதன், விணோதன்(ஜேர்மனி), மேனகா, ராஜன், சுவிதா, நிரோஜன், அனுஷன்,மதுஷன், நுதுஷன், சுபிஷன், சிவேனி, நிலானி, அஜந்தன், வீனுகா, சாயித் (கனடா) ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற பொன்னையா - சின்னத்தம்பி தம்பதியரின் அன்பு மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கோண்டாவில் கிழக்கு ஆலடி வீதியில் உள்ள அவரின் இல்லத்தில் இன்று(30.03.2006) வியாழக்கிழமை நண்பகல் 12 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோண்டாவில் கிழக்கு கட்டையாலடி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆலடிவீதி , கோண்டாவில் கிழக்கு,கோண்டாவில்.

தகவல்: குடும்பத்தினர்.

(48769)(18-17-49)

### பெரியதம்பி பெருமாள்



மாசார், பளையைப் பிறப்பிடமாகவும் அம்பலவாணர் வீதி, அத்தியடியை வசிப்பிடமாகவும் கொண்ட பெரியதம்பி பெருமாள் 28.03.2006 அன்று காலமானார்.

அன்னார் அல்லிமலரின் அன்புக் கணவரும் செல்வராணி,செல்வநாயகி(குடும்பநல உத்தியோகத்தர்),ஜெயசாந்தி,ஜெயக்குமார் ஆகியோரின் பாசமிகு தந்தையும் தியாகராஜா,அருள்வேந்தன் ஆகியோரின் மாமனாரும் தினேஸ்,ரஜீதா,கேசவன், கிருஷிகா,பதுமிகா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(30.03.2006) வியாழக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பளை இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மாசார், பளை.

தகவல்: ஜெயக்குமார்(மகன்).

(48763)(18-17-49)

### சின்னப்பு ஆசைப்பிள்ளை (P.S.A)



கோண்டாவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னப்பு ஆசைப்பிள்ளை அவர்கள் கடந்த 26.03.2006 ஞாயிற்றுக்கிழமை சிவபதமெய்தினார்.

அன்னார் கோண்டாவில் கிழக்கைச் சேர்ந்த சின்னப்பு - தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற தம்பையா - அன்னமுத்து தம்பதியரின் அன்பு மருமகனும் ஆனந்தம் அவர்களின் அன்புக் கணவரும் சுப்பிரமணியம் (கனடா), நல்லமுத்து சின்னத்துரை மற்றும் காலஞ்சென்றவர்களான தம்பையா, தம்பித்துரை, குஞ்சம்மா, சரஸ்வதி, இரத்தினேஸ்வரி (வேவி) ஆகியோரின் அன்புச் சகோதரனும் சிவஞானம்மா, காலஞ்சென்ற நடராசா (சீனிக்குட்டி) ஆகியோரின் அன்பு மைத்துனரும் சறோஜினிதேவி (உரும்பிராய்), சுலோஜனா, சுசீலாதேவி, சாந்தாதேவி(ஜேர்மனி), சிகமாலா(கனடா), சித்திரா(கனடா), சண்முகதாஸ் (நோர்வே), ரூபதாஸ்(தலவாக்கலை) ஆகியோரின் பாசமிகு தந்தையும் நடேசன், காலஞ்சென்ற சந்திரராஜா(போஸ்), இரவீந்திரன், ராஜேந்திரா(ஜேர்மனி), வசந்தன்(மொன்றியல்), வசந்தன (றொரன்ரோ), திருபுவனி(நோர்வே), பானுமதி ஆகியோரின் அன்பு மாமனும் சுரேன்(லண்டன்),சுஜிதரன், கிஷோன்மாறன் (சம்பத் வங்கி),தினேஷன், சிவா,அனுஜா (மருத்துவபீடம், யாழ்ப்பாணம்), நிஷாந், சரண்யா,ஜதீபன், சுரேந்திரன்(கனடா), நிஷானி, யஸ்மினா,ஸ்வென்யா, தர்ஷா,திவிசன், பபிக்கா,ரீத்திகா, ரூபிகா, சேரன், மாறன், சரன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(30.03.2006) வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கட்டையாலடி கோண்டாவில் இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பலாலி வீதி, கோண்டாவில் கிழக்கு,கோண்டாவில்.

தகவல்: குடும்பத்தினர்.

(48682)(18-17-49)

### சங்கரப்பிள்ளை தம்பிஐயா

இணுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சங்கரப்பிள்ளை தம்பிஐயா 28.03.2006 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் இரத்தினத்தின்அன்புக் கணவரும் தவமணி (கனடா), இந்திராணி(பிரான்ஸ்), சந்திராதேவி (கனடா), ...னேஸ்வரி (யா/ இராமநாதன் கல்லூரி ஆசிரியை), வைகுந்தவாசா(லண்டன்), ஆறுமுகதாஸ்(பிரான்ஸ்), சந்திரபோஸ் (பிரான்ஸ்), சரோஜினிதேவி (பிரான்ஸ்), காலஞ்சென்ற ரவிச்சந்திரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஜெயராசா (கனடா), நவரத்தினராசா (பிரான்ஸ்), ஜெகதீஸ்வரன்(கனடா), லிங்கேஸ்வரன் (இலங்கை), சந்திரகாந்தன் (பிரான்ஸ்), விஜயலட்சுமி (லண்டன்), பவானி(பிரான்ஸ்), விஜயசக்தி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (31.03.2006) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

'நவேந்திரகிரி' இணுவில் மேற்கு,இணுவில்.

தகவல்: அ.லிங்கேஸ்வரன்(மருமகன்).

(48757)(18-17-49)

# பாதுகாப்பு உத்தரவாதம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்ற புலனாய்வுத் தகவல்கள் விடுதலைப் புலிகள் தரப்புக்குத் தெரிய வந்திருக்கக்கூடும் எனக் கருதப்படுகிறது.

நேற்றைய பேச்சுகளின்போது-

விடுதலைப் புலிகளின் கொழும்பு ஊடான உத்தேசப் பயணத்துக்குப் பாதுகாப்பு உத்தரவாதம் அளிக்கும்படி புலிகளின் மதியுரைஞர் பாலா வலியுறுத்தியிருக்கின்றமை அந்த ஊகத்தையே வெளிப்படுத்தி நிற்கிறது.

நேற்றைய சந்திப்பின்போது எரிக் சொல்ஹெய்ம் குழுவினரிடம் தாம் தெரிவித்த விடயங்கள் குறித்து மதியுரைஞர் பாலசிங்கம் கூறியவையாவது:-

விடுதலைப் புலிகளின் பேச்சுக் குழுவினர் கொழும்பு ஊடாக ஜெனீவா செல்வதற்கான பயணப் பாதுகாப்புக் குறித்து இலங்கை அரசும், அதன் ஜனாதிபதியும், நோர்வே அனுசரணைத் தரப்பும் உரிய உத்தரவாதம் அளிக்க வேண்டும். அந்த உத்தரவாதம் அவர்களால் அளிக்கப்பட்டால் மட்டுமே அடுத்த சுற்று ஜெனீவாப் பேச்சுகளில் புலிகளின் பிரதிநிதிகள் பங்குபற்றுவர்.

எதிர்வரும் 6ஆம் திகதி கொழும்பில் தாம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை நேரில் சந்தித்துப் பேசும்போது இது குறித்து விவரமாகக் கலந்துரையாடி உரிய உறுதி மொழியையும், பாதுகாப்பு உத்தரவாதத்தையும் பெற்றுத்தர முடியுமென சொல்ஹெய்ம் என்னிடம் தெரிவித்தார்.

வடக்கு - கிழக்கு களநிலவரங்கள் பற்றியும் சொல்ஹெய்ம் குழுவினருக்கு விளக்கினேன்.

ஒட்டுப்படைகள், ஆயுதக் குழுக்கள், துணைப்படைகள் போன்றவற்றின் வன்முறைகள், கொலைகள், அடாவடித்தனங்கள் போன்றவற்றை விவரமாக - விளக்கமாக- எடுத்துரைத்தேன்.

கிழக்கில் இந்த ஒட்டுப்படைகள், அரச படைகளுடன் சேர்ந்து பகிரங்கமாக - ஆயுதம் தாங்கிய இராணுவத்தினருடன் சேர்ந்து, மக்களைச் சுற்றிவளைத்து ஓரிடத்துக்குக் கூட்டி வந்து, பொதுக்கூட்டம் நடத்துவது வரை - பகிரங்கமாகச் செயற்படுகின்ற நிலைமை வரை - சூழல் மோசமாகியிருப்பதைச் சுட்டிக் காட்டினேன்.

கருணா குழு, ஈ.பி.டி.பி. போன்ற இக்குழுவினரின் ஆயுதங்களை உடனடியாகக் களைய அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும். அதைச் செய்யத் தவறினால் அடுத்த சுற்று ஜெனீவாப் பேச்சில் கலந்துகொண்டு, அரசின் இந்தப் போக்கை சர்வதேச மட்டத்தில் அம்பலப் படுத்துவோம். அதுமட்டுமல்ல, இந்தத் துணைப் படைகளின் ஆயுதங்களைக் களைந்து அவற்றின் வன்முறை நடவடிக்கைகளை அரசு ஒடுக்கும்வரை அதன்பின்னர் நடக்கக்கூடிய மூன்றாவது சுற்றுப்பேச்சுக்கு நாம் திகதி கொடுக்க மாட்டோம் என்பதையும் எடுத்துரைத்தேன்.

முஸ்லிம்களைக் கொண்டு இயக்கப்படும் ஜிகாத் குழு பற்றியும் அதற்கும் பாகிஸ்தான் புலனாய்வுப் பிரிவுக்கு - உளவுத்துறைக்கு உள்ள தொடர்பு பற்றியும் விளக்கினேன்.

ஜிகாத் குழு பற்றி நாம் அம்பலப்படுத்தியதால் அந்த ஒட்டுப்படை பற்றிய உண்மைகளை மூடிமறைத்து, அந்த மெய்மையை மழுங்கடிப்பதற்காக - அந்த ஒட்டுப்படையை அரச படைகளுக்குள் உள்வாங்கும் தந்திரத் திட்டத்தை அரச இராணுவம் ஆரம்பித்திருக்கிறது. ஜிகாத் குழு பற்றிய விடயங்களை மறைக்கவே - சர்வதேசத்துக்கு முன்னர் தமது தோலுரிக்கப்படுவதை மறைக்கவே - ஜிகாத் குழுவினரைச் சட்டரீதியான படைகளாக மாற்ற, தந்திரத்தோடு முஸ்லிம் படைப்பிரிவு ஸ்தாபிக்கப்படுவதான உத்தி பயன்படுத்தப்படுகின்றது என்று தெளிவுபடுத்தினேன்.

தற்போது எம்மைச் சந்தித்த எரிக் சொல்ஹெய்ம் அடுத்த வார முற்பகுதியில் இலங்கை விஜயத்தை முடித்துக்கொண்டு புதுடில்லி செல்லும்போது இந்த விவகாரம் குறித்து புதுடில்லி அரசு எரிக் சொல்ஹெய்மோடு விடயங்களை ஆராயும் என நம்புகின்றேன் - என்றார் பாலசிங்கம். (க-எ)

# ஒட்டுப்படைகள் நடத்திய கூட்டம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களைச் சுற்றிவளைத்து நிற்க, கருணா குழுவினரும் மற்றும் ஆயுத ஒட்டுக்குழுவினரும் ஒவ்வொரு வீடுவீடாகச் சென்று சோதனையிட்டு வயது வித்தியாசமின்றி ஆண்களை அங்குள்ள இந்து ஆலய முன்றிலுக்கு பலவந்தமாக அனுப்பி ஒரு கூட்டத்தை நடத்தினர்.

வீதியில் சுற்றி வளைப்பிற்காக நின்ற ஸ்ரீலங்கா இராணுத்தினரும், புலனாய்வுத்துறையினரும் வீதியால் சென்றுகொண்டிருந்த அரச ஊழியர்களையும், ஆசிரியர்களையும் மறித்து அவர்களை அச்சுறுத்தி வற்புறுத்தி ஆலய முன்றிலுக்கு அனுப்பினர். இதனால், அவர்களது கடமைகள் அனைத்தும் முடக்கப்பட்டிருந்தன.

ஆலய முன்றிலில் கருணா குழுவைச் சேர்ந்த பிரதீபன், ஜெயந்தன், அஜீத், ரஞ்சித் ஆகியோருடன் ஈ.என்.டி.எல்.எவ்வைச் சேர்ந்த சிவாஜி, சித்தா ஆகியோரும் இருந்தனர் என எமக்குத் தகவல் கிடைத்துள்ளது. இவர்கள் இக்கூட்டத்தில் பேசும்போது தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எவராவது ஆதரவு நல்கினால் அவர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் இதைத் தாங்கள் ஜெனீவா ஒப்பந்தத்திற்குப் பிறகு நிரூபித்துக் காட்டியுள்ளனர் என்றும் கூறியுள்ளனர். அத்துடன், தங்களை மட்டக்களப்பு கோவிந்தன் வீதியிலுள்ள அலுவலகத்தில் வந்து சந்திக்கும்படியும், அப்படிச் சந்திக்க வராதவர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்க நேரிடுமெனவும் அச்சுறுத்தியுள்ளனர்.

இந்த நடவடிக்கைகளைத் தமிழீழ விடுதலைப் புலிகள் மிக வன்மையாகக் கண்டிப்பதோடு இது முழு அளவிலான யுத்த நிறுத்த மீறலாகும் எனவும் தெரிவித்துக்கொள்கின்றனர்.

- இவ்வாறு அந்தக்கடிதத்தில் மேலும் குறிப்பிடப் பட்டுள்ளது. (எ-க)

# அரச பேச்சுக் குழு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கையில் இது தொடர்பான முதற்கட்ட கலந்துரையாடல் நடைபெற்றது. அரச பேச்சுக்குழு தலைவரான அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா, அமைச்சர்களான ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே, றோஹித போகொல்லாகம, மங்கள சமரவீர, பிரதியமைச்சர் ஸ்ரீபதி சூரியாராய்ச்சி, அரசசமாதான செயலகப் பணிப்பாளர் ஜோன் குணரட்ன, சட்டத்தரணிகளான கோமின் தயாசிறி, எச்.எல்.டி. சில்வா ஆகியோர் இதில் கலந்துகொண்டனர்.

அமைதிப் பேச்சுக்களின் அடுத்த சுற்றில் முன்வைக்கப்பட வேண்டிய விடயங்கள் குறித்து இந்தச் சந்திப்பின்போது விரிவாக ஆராயப்பட்டதாகவும், இது தொடர்பான அடுத்த கட்டச் சந்திப்பு ஏப்ரல் முதல் வாரத்தில் - ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பாகிஸ்தான் விஜயத்தின் பின்னர் - நடைபெறவுள்ளதாகவும் மூத்த அமைச்சரொருவர் நேற்றுத் தெரிவித்தார்.

இதேவேளை, அடுத்த கட்ட அமைதிப் பேச்சுக்களுக்கான அரச குழுவில் எந்த மாற்றங்களும் இடம் பெறாதென்றும் அந்த அமைச்சர் மேலும் கூறினார்.

அடுத்த கட்ட அமைதிப்பேச்சுகள் எதிர்வரும் 19, 20, 21 ஆம் திகதிகளில் ஜெனீவாவில் நடைபெறவிருப்பது தெரிந்ததே. (எ-க)

# விசேட சமாதான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எரிக் சொல்ஹெய்மும், போவரும் புதுடில்லி செல்வார்கள். அங்கு இலங்கை விவகாரம் தொடர்பான தமது தகவல்களை புதுடில்லி அரசுக்கு வழங்கி நிலைமைகளை அவர்கள் தெளிவுபடுத்துவார்கள்.

புதுடில்லியிலிருந்து ஒன்றாக லண்டன் புறப்படும் அவர்கள் இருவரும் அடுத்தநாள் - அதாவது 8ஆம் திகதி சனிக்கிழமை - லண்டனில் அன்ரன் பாலசிங்கத்தை ஒன்றாகச் சந்திப்பர்.

அனுசரணைப் பணிக்கான விசேட தூதுவராக போவர் நியமனம் பெற்ற பின்னர் அவர் மதியுரைஞர் பாலசிங்கத்தை முதல் தடவையாக அப்போதுதான் சந்திப்பார் என்பது குறிப்பிடத்தக்கது.

தமது தற்போதைய இலங்கை விஜயத்தின் போதுதான் விசேட சமாதானத் தூதுவர் ஹன்ஸன் போவர் இலங்கைப் பிரச்சினையில் சம்பந்தப்பட்ட தரப்புகளை விசேட சமாதானத்தூதுவர் என்ற அந்தஸ்தோடு முதல் தடவையாக சந்திக்கின்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-க)

# பிரபா, ரணில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுமய ஆகிய கட்சிகள் தாக்கல் செய்துள்ள மனுக்கள் நேற்று மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் நீதியரசர் எஸ்.ஸ்ரீஸ்கந்தராஜா முன்னிலையில் எடுக்கப்பட்டன.

இந்த மனுக்கள் தொடர்பான விசாரணைகள் மே 24 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டன. அன்றையதினமே பிரதிவாதிகள் நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டுமென உத்தர விடப்பட்டுள்ளது. (எ-க)

# இன்று மினி தேர்தல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களிக்குமாறு வாக்காளர்களைக் கோரியுள்ள தேர்தல்கள் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்க, அமைதி நிலையை நிலைநாட்ட ஒத்துழைக்குமாறு வேட்பாளர்களிடமும், ஆதரவாளர்களிடமும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தேர்தல் முடிவுகள் இன்று நள்ளிரவு முதல் வெளியிடப் படுமென்று எதிர்பார்க்கப்படுகின்றது. (எ-க)

# 4 தமிழ் இளைஞர்கள் பதுளையில் கைது

சந்தேகத்திற்கிடமான முறையில் நடந்து கொண்ட நான்கு தமிழ் இளைஞர்களை, பதுளைப் பொலீஸார் கைது செய்துள்ளனர். எனத் தெரிவிக்கப்படுகிறது. கைது செய்யப்பட்ட இவர்கள் இருபது வயது முதல் இருபத்தைந்து வயதுக்குட்பட்டவர்கள் எனவும், இவர்கள் மட்டக்களப்பு பகுதியைச் சேர்ந்த களுவாஞ்சிக்குடியைப் பிறப்பிடமாகக் கொண்டவர்கள் எனவும் பொலீஸார் தெரிவித்தனர்.

பதுளை பிரதான பஸ் நிலையத்தில் இந்த இளைஞர்கள் நின்று கொண்டிருந்தபோதே ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்ட பொலீஸார் இவர்களை சந்தேகத்தின்பேரில் கைது செய்துள்ளனர்.

இவர்களை விசாரணைக்கு உட்படுத்திய போது ஸ்பிறில்வெளி தோட்டத்தில் தமது உறவினர்கள் வீட்டிற்கு வந்தனர் என்றும், தாம் களுவாஞ்சிக்குடியைச் சேர்ந்தவர்கள் என்றும், இவர்கள் பொலீஸாரிடம் தெரிவித்துள்ளனர். இந்த இளைஞர்கள் தொடர்பாக, பதுளைப் பொலீஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (க-123)

# ஒட்டுப் படைகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

கடந்த 28.03.2006ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வாழைச்சேனைப் பகுதியில் இரு கிராமங்களைச் சேர்ந்த பொதுமக்களைப் பலவந்தமாகத் திரட்டி, படையினரும் துணைப் படையினரும் நடத்தியதாகக் கூறப்படும் கூட்டத்தில் ஈ.பி.டி.பி பங்குகொண்டதாகத் 'உதயன்'மற்றும் 'தினக்குரல்' பத்திரிகைகளில் வெளிவந்த செய்திகளில் எவ்வித உண்மையுமில்லை என ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி தெரிவித்துக் கொள்கின்றது.

உள்ளூராட்சி தேர்தல்கள் அறிவிக்கப்பட்ட நிலையில், பொதுமக்கள் மத்தியில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சிக்கு இருக்கும் நற்பெயருக்குக் களங்கம் ஏற்படுத்தும் கபட நோக்கிலேயே மேற்படி செய்தியானது திட்டமிட்டு, விஷமத்தனமான முறையில் வெளியிடப்பட்டுள்ளதாகவே கருதவேண்டியுள்ளது.

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் அரசியல் பணிமனைகளைத் திறந்து வெளிப்படையான ஜனநாயகச் செயற்பாட்டில் ஈடுபட்டுவருபவர்கள் என்பதால் அவதூறாகப் பிரசுரிக்கப்பட்ட செய்தியினை வன்மையாகக் கண்டிப்பதுடன் எம்மைத் துணைப்படைகள் என்று புலிகள் கூறுவதையும் கண்டிக்கிறோம் - என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (ஐ)

# கொழும்பின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாதுகாப்புப் படைகளின் உயர்மட்ட அதிகாரிகள் மற்றும் அரசியற் பிரமுகர்கள் இந்தப் பகுதியில் தங்கியிருப்பதால் இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அதேவேளை, இதேபோல இதர முக்கியமான பகுதிகளுக்கும் பாதுகாப்பு படிப்படியாக வழங்கப்பட்டு அந்தப் பகுதிகளுக்கான வீதிகளை இரவு வேளைகளில் மூடிவிடத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (எ-க)

## கண்ணீர்க் காணிக்கைகள்



எமது சக நண்பன்

**விஜயரட்ணம் சதீஸ்குமார்**

அவர்களின் திடீர் மறைவினால் துயற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன், ஆத்மா சாந்தியடைய இறைவனைப்பிரார்த்திக்கின்றோம்.

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(48767) (54-17-41) - சுதுமலை வாழ் நண்பர்கள்.

## மரண அறிவித்தல்

**விஜயரட்ணம் சதீஸ்குமார்**



ஸ்ரேசன் றோட், மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் சுதுமலை, மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட விஜயரட்ணம் சதீஸ்குமார் அவர்கள் 26.03.2006 ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் அகாலமரணமானார்.

அன்னார் விஜயரட்ணம் - பூமணி தம்பதியரின் இளைய மகனும் விஜயகுமார், றமேஸ், வினோதினி, தாரணி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.03.2006) வியாழக்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

சுதுமலை, மானிப்பாய் (ரட்ணம் பந்தல் சேவை).

(48755)(18-12-34)

NEW
Science College
2007 A/L
வெப்பவியல்
By: கருணாநிதி
Sat., Sun.,
பிரிவு 1: 7.30-8.30
பிரிவு 2: 11.30-12.30
ஆரம்பம்: 01.04.2006

## மரண அறிவித்தல்

**அருட்தந்தை செலஸ்ரின் மேரியோசப் C.R**



தோலகட்டி செபமாலைத்தாசர் துறவுச் சபையைச் சார்ந்த அருட்தந்தை செலஸ்ரின் மேரியோசப் அடிகளார் நேற்று (29.03.2006) புதன்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி மனுவல்பிள்ளை-வஸ்ரியாம்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் மாகிறேற், இம்மானுவேல், காலஞ்சென்ற சூசைப்பிள்ளை, சிறில் (லண்டன்), றீற்றா (கனடா), ஜோர்ஜ், இராஜேந்திரா ஆகியோரின் சகோதரனும் காலஞ்சென்ற செல்வராஜா, மேரிலெற்றிசியா, ராணி, நிர்மலா (கனடா) பெனடிக்ற் (கனடா) காலஞ்சென்ற சோஜினி, ஜெயராணி ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் பூதவுடல் இல.5, கோயில் வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அருள் ஆச்சிரமத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நல்லடக்கத் திருப்பலி நாளை (31.03.2006) வெள்ளிக்கிழமை மு.ப. 10.30 மணிக்கு அங்கு நிறைவேற்றப் பட்டு நல்லடக்கம் செய்யப்படும்.

(48775) (54-17-41)

தகவல்:

அருள் ஆச்சிரமம், இல. 5,கோயில் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே.: 0212223351

அருட்திரு. சு.ம.ஸ்ரீபன் C.R. மாகாண முதல்வர் செபமாலைத் தாசர் சபை

COMPUTERIZED ACCOUNTING
Speed Batch Only 30 Hours
விரிவுரைகள் ஆரம்பமாகிவிட்டன.
Fees :- 2000/=
* Days :- Sat, Sun, Tue, Thur
* Time :- 5.15 - 6.15 p.m.
* Only For 10 Students
* கணக்கியல் அறிவில்லாதவர்களும் இணைந்து பயிற்சி பெற முடியும்.
பயிற்சிகள் யாவும் Qualified & Experienced Lecturers மற்றும் Banking Professionals ஆல் நடத்தப்படும்
C.B Computer Academy
T.P No. 021-4590291 Station Road, Kondavil.

DIPLOMA IN COMPUTER HARDWARE
SPEED BATCH ONLY 20 Hours
GROUP CLASSES
Only For 10 Students
Days:- Sat, Sun.
Time:- 9.30 a.m.
Fees:-1500/=
Batch Starts on 01-04-2006
C.B Computer Academy
T.P No. 021-4590291 Station Road, Kondavil.

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 30.03.2006இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.



கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர)ப் பரீட்சை, 2006 ஏப்ரல்

வெளியீடு 02


# மாதிரி வினாப்பத்திரம்

## உயிரியல்

Mr.R. Easvarathasan B. Sc. (Cey), Dip.In Edu., M.Ed.

## பகுதி I

**A** இருவித்திலைத் தாவரத்தின் வேரினூடாகக் குறைந்தவை உருப்பெருக்கத்துக்குரிய பகுதி யொன்று காட்டப்பட்டுள்ளது.




(i) படத்தில் **A, B, C, D** யைப் பெயரிடுக.

A .................................... B ....................................

C .................................... C ....................................

(ii) **B** யினூடாக நீர் கொண்டு செல்லும் மூன்று பிரதான வழிப்பாதையைத் தருக.

(iii) மேல் (ii) இல் நீர் குறிப்பிடும் பாதையைக்கீழே கொடுக்கப்பட்ட இடைவெளியில் சுருக்கமாக விளக்குக.

1............................................

2............................................

3............................................

(iv) **C** எனக் குறிப்பிட்ட பகுதியில் மேல் குறிப்பிட்ட பாதையில் எது நடைபெறுவதில்லை அதற்கான காரணம் தருக.

பாதை :............................................

காரணம:............................................

**B.** (i) உயிரங்கிகளுக்கு நீரின் முக்கியத்துவத்துக்காக நீர் கொண்டிருக்கும் பௌதீக இயல்புகள் யாவை?

(ii) தாவரங்களிலும் விலங்குகளிலும் உடலில் இருந்து நீர் இழக்கப்படும் முறைகள் யாவை?

தாவரங்கள் ............................................

விலங்குகள் ............................................

(iii) மேல் (2) இல் குறிப்பிட்ட முறையில் இழக்கப்படும் நீர் எவ்வழிகளால் இழக்கப்படுகின்றது எனக் குறிப்பிடுக.

தாவரங்கள் : ............................................

விலங்குகள : ............................................

(iv) தாவரங்களும் விலங்குகளும் நீர் இழப்பைக் குறைத்துக் காட்டுவதற்காகக் கொண்டிருக்கும் பிரதான இசைவாக்கங்கள் இவ்விரண்டு தருக.

தாவரங்கள :............................................

விலங்குகள் : ............................................

**C.** (i) ஆவியுயிர்ப்பு என்றால் என்ன?

(ii) தாவரங்களில் ஆவியுயிர்ப்பு நிகழும் 3 பாதைகள் எவை?

(iii) இலைவாய்துவாரம் திறத்தலில் நீர் அழுத்தமாற்றம் எவ்வாறு ஏற்படுகின்றது என்பதை விளக்குக.

(iv) இலைவாய் மூடுதலில் பங்குகொள்ளும் தாவரவளர்ச்சிப் பதார்த்தம் எது?

(v) தாவரத்தின் இலையில் கீழ்ப்பக்க மேற்றோல் மேற்பக்க மேற்றோலை விட ஆவியுயிர்ப்பு அதிகம் என்பதை எவ்வாறு பரிசோதனை மூலம் காட்டலாம்?

**D** (i) தாவர இனப்பெருக்கம் என்பதால் யாது விளங்குவீர்?

(ii) தாவர இனப்பெருக்கத்தில் இலிங்கமில் முறை இனப்பெருக்கத்தில் காணப்படாத இலிங்க முறை இனப்பெருக்கத்தில் காணப்படும் பிரதான அம்சங்கள் யாவை?

(iii) இலிங்கமில் இனப்பெருக்கத்தை காட்டிலும் இலிங்கமுறை இனப்பெருக்கத்தில் காணப்படும் இரு அனுகூலங்களைத் தருக.

1.............................. 2..............................

(iv) எல்லா பிரதான கட்டங்களைக் கொண்ட **Poganatum** இனது வாழ்க்கைவட்டத்தின் புறவு ருவ வரிப்படத்தைக் கீழே தரப்பட்டுள்ள இடத்தில் வரைந்து பெயரிடுக.

**2. A** (i). ஓமோன் என்றால் என்ன? ..............................

(ii) விலங்கு ஓமோனையும் தாவர ஓமோனையும் பின்வரும் இயல்புகளில் வேறுபாடுகளைத தருக.

| தாவர ஓமோன் | விலங்கு ஓமோன் |
|---|---|
| 1. ஆக்கக்கூறு | .............................. |
| 2. கடத்தப்படுவது | .............................. |
| 3. சுரக்கும் இடம் | .............................. |

(iii) பின்வரும் தொழிற்பாடுகளை மேற்கொள்ளும் ஓமோன்களைப் பெயரிடுக.

| தொழிற்பாடு | ஓமோன் |
|---|---|
| 1. தாவர கலப்பிரிவு | .............................. |
| 2. தாவர மூப்பு தாமதமடைதல் | .............................. |
| 3. பழம் கனிதல் | .............................. |
| 4. மாறிழைய தொழிற்பாடு அதிகரித்தல் | .............................. |
| 5. உச்சி ஆட்சி | .............................. |
| 6. கருப்பை தசைச்சுருக்கம் | .............................. |
| 7. பாலுற்பத்தி இழைய விருத்தி | .............................. |
| 8. விலங்குக் கலப்பிரிவு தூண்டல் | .............................. |
| 9. அதிரீனல் மேற்பட்டை தூண்டல் | .............................. |
| 10. நீர் மீள அகத்துறுஞ்சலை அதிகரிக்கச்செய்தல் | .............................. |

**B** (i) சுலகத்தால் சுரக்கப்படும் இரு பிரதான ஓமோன்களைத் தருக.

1. .............................. 2. ..............................

(ii) பின்வரும் செயல்முறைக்கு பயன்படும் ஓமோன்கள் யாவை?

1. சூலிடல்(Ovulation) :..............................
2. மஞ்சள் சடல விருத்தி :..............................
3. கிராபியன் புடைப்புவிருத்தி :..............................

(iii) புணரியாக்கத்தின் போது ஒடுக்கற்பிரிவு நிகழ வேண்டியதன் முக்கியத்துவத்தைக் குறிப்பிடுக.

..............................

**C** (i) மாதவிடாய் வட்டத்தின் போது **Progesterone, Oestrrgen** செறிவு எவ்வாறு குருதியில் மாற்றமடைகின்றது என்பதை வரைந்து காட்டுக.


(ii) மாதவிடாய் வட்டத்தின் போது **Progesterone** எங்கே சுரக்கப்படுகின்றது எனக் குறிப்பிடுக. ..............................

(iii) **Progesterone** ஏற்படுத்தும் ஒரு விளைவைக் குறிப்பிடுக.

(iv) மாதவிடாய் வட்டம் முடிவில் ஏன் **Progesterone** செறிவுமட்டம் குறைகின்றது என்பதை விளக்குக. ..............................

(v) கருக்கட்டல் நடைபெற்றால் **Progesterone** செறிவுக்கு யாது நடைபெறும் எனக் குறிப்பிடுக. ..............................

**D** மனித செவியின் பாகம் காட்டப்பட்டுள்ளது.




(i) படத்தில் **A, B, C, D, E** யை பெயரிடுக.

(ii) படத்தில் காட்டப்பட்டுள்ளது செவிச்சிற்றென்புகளை வெளியில் இருந்து உள்ளக ஒழுங்காகத் தருக. ..............................

(iii) செவிச்சிற்றென்புகளைச் சூழக் காணப்படும் இடத்தில் காணப்படுவது யாது?

(iv) பின்வரும் தொழிலாற்றும் பகுதிகள் யாவை?

(a) இச்சிகளின் ஒளிவாங்கி ..............................

(b) மனிதத்தலையின் அசைவை உணருதல் : ..............................

(c) மனித ே டல் ..............................

**A.** (i) தனித்துவமற்ற நோய் பாதுகாப்புமுறை என்றால் என்ன?

(ii) தொற்றுநோயால் பாதிக்கப்படும் போது மனிதனில் காட்டப்படும் தனித்துவமற்ற நோய் பதிர்ப்புத் திறன் இரண்டு தருக.

1).............................. 2)..............................

(iii) மனிதனில் தொற்று நோயை விளைவிக்கக்கூடிய அங்கிக்கூட்டங்கள் யாவை?

(iv) தற்போது மருத்துவத்தில் பயன்படும் இரு நுண்ணுயிர்க் கொல்லிகளைப் பெயரிட்டு அவை எவ்வாறு தொழிற்படுகின்றன என்பதைக் குறிப்பிடுக.

| நுண்ணுயிர் கொல்லி | தொழிற்படும் முறை |
|---|---|
| (i) .............................. | .............................. |
| (i) .............................. | .............................. |

**B.** இலங்கையில் வர்த்தகரீதியில் எதயில் அல்கசோல், வினாகிரி என்பன உற்பத்தி செய்யப்படுகின்றன.

(i) மேல் வர்த்தகரீதியான உற்பத்திக்குப் பயன்படும் **நுண்ணங்கிகளைப** பெயரிடுக.

(a) **எதயில் அல்கசோல்** : ..............................

(b) **வினாகிரி** : ..............................

(ii) மேல் வர்த்தக உற்பத்திக்கு நுண்ணங்கியைப் பயன்படுத்தும் போது நடைபெறும் பிரதான உயிரி இரசாயன மாற்றங்களைச் சுருக்கமாகத் தருக.

(a) **எதயில் அல்கசோல்** : ..............................

(b) **வினாகிரி.** ..............................

(iii) இயற்கையில் நைதரசன் சுற்றோட்டத்தின் போது நடைபெறும் பிரதான நுண்ணங்கித் தொழிற்பாட்டின் போது நிகழும் இரசாயன மாற்றத்தைத் தருக.


(a) **அமோனியா வேற்றம்** :..............................

(b) **நைத்திரேற்றாக்கம் :** ..............................

(iv) நுண்ணங்கிகளைப் பயன்படுத்தி வர்த்தகரீதியில் உற்பத்தி இலாபம் தரக்கூடியது இதற்கு சான்றாக இருக்கக்கூடிய காரணங்கள் இரண்டு தருக.

1) .............................. 2) ..............................

**C** கீழே கொடுக்கப்பட்ட காபன் வட்டத்தின் வரிப்படத்தை அடிப்படையாகக் கொண்டு வினாக்கள் அமைகின்றன.




(i) படத்தின் 1 - 6 வரை செயன்முறைகளைப் பெயரிடுக.

1. : ..............................
2. : ..............................
3. : ..............................
4. : ..............................
5. : ..............................
6. : ..............................

(ii) இயற்கைக் காபன் வட்டத்தைக் குலைக்கும் இரு மனித நடவடிக்கை யாது?

1. .............................. 2. ..............................

(iii) வளிமண்டல $O_2$ ஆனது அதிகரிப்பு பொதுவாக காலநிலைக்குரிய விளைவுகளை ஏற்படுத் தும் இவ்விளைவு எவ்வாறு அழைக்கப்படும்?

..............................

(i) Mucor உம் Agaricus பங்கசுக்கள் எவ் வகுப்பைச் சார்ந்தவை எனக் குறிப்பிடுக.

A .............................. B ..............................

(ii) **A, B** என்பன நீர் குறிப்பிடும் வகுப்புகளுக்குள் உள்ளடக்குவதற்கு இரண்டு பிரதான காரணம் யாது?

A→ (1) ..............................

(2) ..............................

B→ (1) ..............................

(iii) **A, B** என்பவற்றில் ஒடுக்கற் பிரிவு நிகழும் நிலையைக் குறிப்பிடுக.

A ..............................

B ..............................

(iv) பங்கசுக்கள் ஒன்றியவாழி ஈட்டங்களில் ஈடுபடக்கூடியன இவ்வாறான ஒன்றியவாழி ஈட்டம் ஒன்றைக் குறிப்பிட்டு அதற்குரிய அங்கிகளையும், ஈட்டத்தில் பங்கேற்கும் அங்கி பெறும் ந மைகளையும் குறிப்பிடுக.

ஈட்டம் : ..............................

ஈடுபடும் அங்கிகள் : ..............................

நன்மைகள்..............................

**4)A.**(i) ஐந்து இராச்சியப் பாகுபாட்டை மேற்கொண்டவர் யார்?

(ii) ஐந்து இராச்சியப் பாகுபாட்டில் பயன்படும் பிரதான குணாம்சங்கள் யாவை?

(iii) இராச்சியம் **Plantae** இற்கும் தாவரங்கள் உள்ளடக்கும் பிரிவில் இரு **classes** ஐப் பெயரிடுக.

(iv) மேலே (3) இல் பெயரிடப்பட்ட இரு classes வேறுபடுத்தும் ஐந்து இயல்புகளைக் குறிப்பிடுக.

**B** (i) இன அழிவு என்றால் என்ன?

(ii) வாழும் உயிர்சுவடு எது?

(iii) இதை வாழும் உயிர்சுவடாக கருதக் காரணத்தைத் தருக.

**(C)** பின்வரும் சர்வதேச சமவயத்தைக் / புரட்டகோலைக் குறிப்பிடுக.

(a) **மொன்ரீயல:** ..............................

(b) **CITES** : ..............................

(c) **ரம்சார்** : ..............................

d) **கியோற்றா** ..............................

D. (i) கைத்தொழில் உள்ளீடாக வளிமண்டலத்துக்கு விடப்படும் இரு வாயுக்கள் யாவை?

(ii) மேல் (2) வாயுக்கள் ஏற்படுத்தும் பாதிப்புக்கள் ஒவ்வொன்று தருக.

(a) ......................................................................

(b) ......................................................................

(iii) மோட்டார் வாகனங்களில் வெளிப்படும் தூமங்களில் உள்ள பதார்த்தம் மனிதனில் மிக உடனடியாக விளைவை ஏற்படுத்துவது எது?

(iv) மேல் குறிப்பிடும் பதார்த்தம் எவ்வாறு விளைவை ஏற்படுத்துகின்றது எனக் குறிப்பிடுக.

# உயிரியல் பகுதி II

1) (i) துணைவளர்ச்சி என்றால் என்ன?
(ii) இருவித்திலைத் தாவரத்தின் தண்டில் ஏற்படும் துணை வளர்ச்சிச் செயன்முறையை விளக்குக.

2) (i) மெண்டலின் இரண்டாவது விதியைக் கூறுக.
(ii) பரிசோதனை ஒன்றில் பல ஈக்களின் நரைநிற உடல் சாதாரண உணர் கொம்புக் கொண்ட ஆண், கருமைநிற உடல் முள்ளுடைய உணர்கொம்புக் கொண்ட பெண் உடன் இனக்கலப்பு செய்யப்பட்டது. முதலாம் சந்ததி யாவும் நரைநிற உடல் சாதாரண உணர்கொம்பு பெறப்பட்டது. இவ் முதலாம் சந்ததி நறைநிற உடல் சாதாரண உணர்கொம்புடையது கருமைநிற உடல் முள்ளுடையதுடன் கலப்புச்செய்யப்பட்டது. பின்வரும் பெறுபேறு பெறப்பட்டது.

| | | |
|---|---|---|
| நரைநிற உடல் சாதாரண உணர்கொம்பு | - | 230 |
| நரைநிற உடல் முள்ளுடைய உணர்கொம்பு | - | 20 |
| கருப்புநிற உடல் சாதாரண உணர்கொம்பு | - | 18 |
| கருப்புநிற உடல் முள்ளுடையது | - | 236 |

பெறுபேறுகளை விளக்குக.

3) (i) ஒட்டுண்ணி என்பவை யாவை?
(ii) ஒட்டுண்ணிகள் ஒட்டுண்ணி வாழ்க்கைக்காக கொண்டிருக்கும் சிறப்பியல்புகள் யாவை?
(iii) நீ கற்ற காவியைக் கொண்டுள்ள ஒட்டுண்ணிகளின் விஞ்ஞானப் பெயரைத் தந்து காவியில் நடைபெறும் வாழ்க்கைவட்ட நிகழ்வை விளக்குக.
(iv) இலங்கையில் மேற்கூறிய நோய்பரப்பும் காவிகள் எவ்வாறு கட்டுப்படுத்தப்படுகின்றன எனக் குறிப்பிடுக.

4) மனித ஈரல் ஆற்றுகின்ற தொழிற்பாடுகளை விளக்குக

5) (i) பரிகரிக்கப்படாத கழிவு நீர் ஏற்படுத்தும் பாதக விளைவுகளை விளக்குக.
(ii) பரிகரிக்கப்படாத கழிவு நீர் எவ்வாறு பரிகரிக்கப்படுகிறது என்பதை விளக்குக.

6) பின்வருவன பற்றி சிறு குறிப்புகள் எழுதுக.
(i) தாவர இழைய வளர்ப்பு
(ii) நைதரசன் வட்டம்
(iii) கலவட்டம்

## பௌதீகவியல் - II

திரு. R.குமரன். *B.Sc.* யாழ்.


வெளியீடு 01

கடந்த 02.03.2006ஆம் திகதி அன்று வெளியாகிய பௌதீகவியல் தொடர்ச்சியின் அமைப்புக் கட்டுரையின் வினாப்பகுதி இன்று வெளியாகின்றது.

### *அமைப்புக் கட்டுரை வினா*

***4 வினாக்களிற்கும் விடை தருக.***

01)




a) மேலே காட்டப்பட்ட வேணியர் இடுக்கிமானியில் ஆங்கில எழுத்துக்களால் குறிக்கப்பட்டுள்ள பகுதிகளைப் பெயரிடுக.

A ____________________ B ____________________

C ____________________ D ____________________

E ____________________ F ____________________

G ____________________ H ____________________

b) H இன் பயன்பாடு யாது?

c) வேணியர் இடுக்கிமானியின் வேணியரின் n சமபிரிவுகள் பிரதான அளவிடையின் (n-1) பிரிவுகளுடன் பொருந்துமாறு கருவி அமைந்திருப்பின் கருவியின் இழிவெண் ணிக்கை யாது?

d) செய்முறைப்பரீட்சை ஒன்றின் போது P,Q எனும் மாணவர்களிடம் ஓர் உலோக உருளை ஒன்றின் விட்டத்தைக் காண்பதற்காக 1mm பிரதான அளவிடைப்பிரிவுள்ள இரு வேணியர் இடுக்கிமானிகள் வழங்கப்பட்டிருந்தன. மாணவன் P இடம் வழங்கப்பட்டமானியில் 10 வேணியர் பிரிவு 9 பிரிதான பிரிவுடனும் மாணவன் Q இடம் வழங்கப்பட்ட மானியில் 20 வேணியர்பிரிவு 19 பிரதான பிரிவுடனும் பொருந்தியிருக்கக் காணப்பட்டன.

(i) P,Q ஆகிய மாணவர்களால் பயன்படுத்தப்படும் கருவிகளின் இழிவெண்ணிக்கை யாது?

P :____________________

Q :____________________

(ii) தாடைகள் ஒன்றையொன்று தொட்டுள்ள போது P இடம் உள்ள கருவியில் வேணியரின் 10 வது பிரிவு பிரதான அளவிடையின் 9 வது பிரிவுடனும் Q இடம் உள்ள கருவி யில் வேணியரின் 17வது பிரிவு பிரதான அளவிடையின் 16 வது பிரிவுடன் பொருந்தி யிருந்தது ஆயின் பூச்சிய வழு யாது?

P :____________________

Q :____________________


(iii) P என்பவர் திருத்தமான வாசிப்பைப் பெற வெவ்வேறு இடங்களில் பின்வரும் வாசிப்புக்களைப் பெற்றார்.
4.6mm, 4.5mm, 4.7mm,4.4mm, 4.6mm உருளையின் திருத்தமான விட்டமாக அவர் பெறக்கூடியது?

(iv) Q என்பவர் வாசிப்பை எடுக்கும் போது P இலும் பார்க்க கூடிய சிரமத்தை எதிர் நோக்குவார். இதற்குரிய காரணம் யாது?

(v) வினா (ii) இல் உள்ள நிலையில் வேணியரின் 6 வது பிரிவை பிரதான அளவிடைப் பிரிவொன்றுடன் பொருந்தச் செய்ய P வேணியர் நகர்த்த வேண்டிய இழிவுத் தூரம் யாது?

(vi) வேணியர் இடுக்கிமானியில் அளக்கக்கூடியதும். திருகாணிநுண்மானியில் அளக்க முடியாததுமான அளவீடுகள் இரண்டு தருக.

02) படம் ஒரு அதிரியால் அதிரவைத்த இழையை காட்டுகிறது. இழையின் வலது முனை ஒரு நிலையான புள்ளிக்கு இணைக்கப்பட்டுள்ளது. நிலையான அலை ஒன்று இழையில் உருவாக்கப்படுகிறது.





a) இழை மீது நிலையான அலை உருவாகத் தேவையான பௌதிக நிபந்தனைகள் (நிலைமைகள) யாவை?

b) இழை மீது உள்ள அலை குறுக்கலை என்பதை எவ்வாறு அறிவீர்?

c) இழை மீதுள்ள A,B புள்ளிகளில் வீச்சம், அவத்தையை ஒப்பிடுக?
வீச்சம்:- ____________________
அவத்தை:- ____________________

d) இழையின் நீளம் = 1.2m, இழை மீது குறுக்கலைக் கதி = $6.2ms^{-1}$ ,ஆயின் அதிரியின் அதிர்வு மீடிறன் யாது?

e) அதிரியின் அதிர்வெண்ணை 3 மடங்காக்கின்
i. நிலையான அலையின் புதிய வடிவத்தை வரைக?



ii. ஒத்த அவத்தையில் அதிரும் 3 புள்ளிகள் P,Q,R ஐ படத்தில் குறிக்க.

(பௌதீகவியல் அமைப்புக்கட்டுரை வினாக்களின் தொ...
06.04.2006 ஆம் திகதிய கல்விச்சுடரில் வெளிவரும்)

## *விடைக் குறிப்புகள்*

### உயிரியல் I

வெளியீடு 02

**Mr.R. Easvarathasan B.Sc. (Cey), Dip.In Edu., M.Ed.**

| | | | | |
|---|---|---|---|---|
| (1) 4 | (2) 4 | (3) 2 | (4) 1 | (5) 1 |
| (6)4 | (7)4 | (8) 1 | (9)4 | (10) 1 |
| (11) 5 | (12) 3 | (13) 2 | (14)3 | (15) 5 |
| (16) 3 | (17)3 | (18) 4 | (19) 1 | (20) 3 |
| (21)3 | (22) 2 | (23)5 | (24)4 | (25)2 |
| (26)3 | (27)3 | (28)2 | (29) 4 | (30)5 |
| (31)4 | (32)1 | (33)3 | (34) 2 | (35)4 |
| (36)2 | (37) 4 | (38)5 | (39) 3 | (40) 4 |
| (41) 1 | (42) 3 | (43)1 | (44)5 | (45) 3 |
| (46) 2 | (47) 5 | (48)2 | (49) 1 | (50) 4 |
| (51)5 | (52) 5 | (53) 2 | (54)4 | (55) 5 |
| (56) 2 | (57) 5 | (58) 4 | (59) 5 | (60) 1 |

## அன்பு மாணவர்களே!

இலங்கையின் கல்வியில் தலைசிறந்து விளங்கும் மாவட்டங்களின் முன்னணி ஆசிரியர்களின் மாதிரி வினாத்தாளும், விடைகளும் உங்கள் பரீட்சை நலன் கருதி இங்கு வெளிவருகின்றன. அந்தவகையில் எதிர் வரும் வாரங்களிலும் தலைசிறந்த ஆசிரியர்களின் பரீட்சை எதிர்பார்ப்புடன் கூடிய வினாத்தாள்களும் வெளிவரவுள்ளன. அத்துடன், எமது கல்விச் சுடரினால் சிறந்த பரீட்சைப் பெறுபேறுகளைத் தோற்றுவித்துக்கொண்டிருக கும் பிரபல ஆசிரியர்களின் மாதிரி வினாத்தாள்களும் எதிர்வரும் காலங் களிலும் இப்பகுதியில் பிரசுரிக்கப்படவுள்ளன. பரீட்சை நடைபெறும் திகதி வரை எம்மால் வெளியிடப்படும் பல வினாத்தாள்களில் பல ஆசிரியர் களின் வேறுபட்ட வினா "வியூகங்கள்" அமைந்திருப்பதால் இப்பகுதியில் வெளிவரும் வினாக்களில் பெரும்பாலானவை இறுதி அரசப்பரீட்சைகளின் வின்ாக்களாக வெளிவரும் என்பதில் கல்விச்சுடர் நம்பிக்கை கொண்டுள்ளது. எனவே மாணவர்களே! உங்கள் சிறந்த பெறுபேறுகளுக்காகக் கல்விச்சுடருடன் இணைந்திருங்கள்.

கல்விச்சுடரில் வெளிவரும் வினாக்களிலும், விடைகளிலும் ஏதாவது தவறுகள் அல்லது சந்தேகங்கள், விளக்கமின்மைகள் ஏற்படின் கீழ்வரும் தொலைபேசி இலக்கத்திற்குத் தொடர்பு கொண்டால் அல்லது விலாசத்திற்கு எழுதி அனுப்பினால் உரிய ஆசிரியர்களுடன் தொடர்பு கொண்டு உங்களது சந்தேகங்கள் தெளிவாக்கப்படும்.

தொ.பே. இல. 0714273035, 0714220008

**கல்விச்சுடர்**

***உதயன் பணிமனை,***

361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.